முடி¹-தல் muṭi-, 4 v. [K. *muḍi.*] intr. 1. To end, terminate; to be complete, as in sense; முற்றுப்பெறுதல். சொன்முறை முடியாது (தொல். சொல். 233). இந்நூன் முடிந்தது முற்றும். 2. To be effected or accomplished; நிறைவேறுதல். முட்டின்றி மூன்று முடியுமேல் (நாலடி, 250). 3. To be destroyed; to perish; அழிதல். 4. To die; சாதல். கயலேர் கண்ணி கணவனொடு முடிய (பு. வெ. 10, சிறப்பிற். 9, கொளு). 5. To appear; தோன்றுதல். முடிந்தது முடிவது முகிழ்ப்பது மவை மூன்றும் (பரிபா. 13, 46). 6. To be possible, capable; இயலுதல். என்னால் அதனைச்செய்ய முடியவில்லை. 7. To incite persons to a quarrel; சண்டை மூட்டுதல். அவனுக்கும் இவனுக்கும் முடிந்து விட்டான். 8 To make a marriage alliance; சம்பந்தப்படுத்துதல். அவளுக்கும் இவனுக்கும் முடிந்துவிட்டார்கள்.—tr. 1. To tie, fasten; to make into a knot; முடிச்சிடுதல். தலையை முடிந்தான்; ரூபாயை முடிந்தான். 2. To put on, adorn; சூடுதல். அவள் தலையிற் பூவை முடிந்தாள்.

முடி²-த்தல் muṭi-, 11 v. tr. Caus. of முடி¹-. 1. To end, terminate; முற்றுவித்தல். நின்னன்னை சாபமு முடித்தென் னெஞ்சத்திடர் முடித்தான் (கம்பரா. மிதிலை. 88). 2. To effect, accomplish; நிறைவேற்றுதல். அருந்தொழில் முடியரோ திருந்துவேற் கொற்றன் (புறநா. 171). 3. To destroy; அழித்தல். சேனையை . . . முடிக்குவன் (கம்பரா. மிதிலை. 98). 4. To fasten, tie; கட்டுதல். பாஞ்சாலி கூந்தல் முடிக்க (திவ். பெரியதி. 6. 7, 8). 5. To decorate with, put on, as flowers; சூட்டுதல். கூழையுள் ளேதிலாள் கைபுனை கண்ணி முடித்தான் (கலித். 107, 15).

முடி³ muṭi, n. <முடி²-. 1. Knot, tie; முடிச்சு. கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர (மதுரைக். 256). 2. Tuft or coil of hair on the head, one of *ai-m-pāl*, q.v.; ஐம்பாலுள் உச்சியில் முடிக்கும் மயிர்க்கட்டுவகை. (திவா.) 3. Man's hair tuft; குடுமி. (பிங்.) 4. Head; தலை. அதுவே சிவன் முடிமேற்றான் கண்டு (திவ். திருவாய். 2, 8, 6). (திவா.) 5. Crown, as of the head; top, as of a mountain; உச்சி. முடியை மோயின னின்றுழி (கம்பரா. மீட்சி. 186). 6. Crown; கிரீடம். ஞாயிற்றணி வனப்பமைந்த . . . புனைமுடி (பரிபா. 13, 2). 7. End; முடிவு. (W.) 8. Bundle, as of paddy seedlings for transplantation; நாற்றுமுடி. நிரை நிரை விளம்பி வழிமுடி நடுநரும் (கல்லா. 46, 14). 9. Noose; பட்சிபடுக்குங் கண்ணி. துறவாம் பறவை மயன்முடியிற் படுதல் (பிரபுலிங். மாயையுற். 56). 10. Tuft of fibre left on the upper part of the coconut; தேங்காய்க் குடுமி. (J.) 11. Sacred basil. See துளசி. (பிங்.) 12. cf. மூடி. Half of a coconut; தேங்காயிற்பாதி. (W.)

முடிக்கண்ணி muṭi-k-kaṇṇi, *n.* <முடி+. See முடிமாலை. *கமலைகைகாணக் கொடாமுடிக் கண்ணியை (தேவா. 456, 6).*

முடிக்கலம் muṭi-k-kalam, *n.* <id.+. Crown; கிரீடம். *ஆண்டு அரசருடைய முடிக்கல முதலியவற்றை வாங்கிக் கொண்டு (பெரும்பாண. 451, உரை).*

முடிக்காணிக்கை muṭi-k-kāṇikkai, *n.* <id.+. Offering of the hair of a person's head which has been allowed to grow for a certain time, in fulfilment of a vow; தெய்வப் பிரார்த்தனையின் பொருட்டு வளர்த்த மயிர் முடியை மழித்துக் காணிக்கையாக இடுகை. *Colloq.*

முடிக்கீரை muṭi-k-kīrai, *n.* <id.+. Young greens, tender potherbs; முளைக்கீரை. (W.)

முடிக்கோரை muṭi-k-kōrai, *n.* <id.+. A kind of sedge; கோரைவகை. (*யாழ். அக.*)

முடிகத்தரிக்கிறவன் muṭi-kattarik-kiṟavaṉ, *n.* <id.+. Cut-purse; திருடன். (W.)

முடிகவி-த்தல் muṭi-kavi-, *v. tr.* <id.+. See முடிசூட்டு-. *இன்னு னெனவறியா வென்னை முடிகவித்து (பாரதவெண். 315).*

முடிகொண்டசோழபுரம் muṭi-koṇṭa-cōḻa-puram, *n.* <முடிகொண்டசோழன்+. A Chōḻa capital in Trichinopoly District; திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள சோழர் தலைநகரம். (I. M. P. Rd. 285.)

முடிகொண்டசோழன் muṭi-koṇṭa-cōḻaṉ, *n.* A title of Rajendra Chola Deva I; முதல் இராஜேந்திர சோழதேவனது பட்டப்பெயர். (S. I. I. ii, 107.)

முடிச்சடைமுனிவன் muṭi-c-caṭai-muṉivaṉ, *n.* <முடி+. Vīrabhadra, as wearing matted locks; வீரபத்திர தேவன். *முடிச்சடை முனிவனன்று வேள்வியிற் கொண்ட (சீவக. 2285).*

முடிச்சவிழ்-த்தல் muṭiccaviḻ-, *v. intr.* <முடிச்சு+. 1. To untie money knotted in a cloth, with a view to theft; ஒன்றைத் திருடுதற்கு அதை முடிந்துவைத்துள்ள துணிமுடிச்சை நெகிழ்த்தல். (W.) 2. To steal; திருடுதல். *Loc.*

முடிச்சவிழ்க்கி muṭiccaviḻkki, *n.* <முடிச்சவிழ்-. 1. One who secretly removes money tied in a cloth; முடிச்சவிழ்ப்பவன். (W.) 2. Thief; திருடன். *Loc.*

முடிச்சன் muṭiccaṉ, *n.* <முடிச்சு. Scheming fellow; தந்திரி. *Loc.*

முடிச்சாத்து muṭi-c-cāttu, *n.* <முடி+. Turban; தலைப்பாகை. *தனி முடிச்சாத்துஞ் சாத்தி (திருவாலவா. 54, 14, பி-ம்.).*

முடிச்சு muṭiccu, *n.* <முடி^{2}-. 1. Tie; கட்டு. 2. Tuft of hair, மயிர்முடி. 3. Small bundle; சிறு மூட்டை. *மூட்டை முடிச்சு.* 4. Knot in wood; கணு. 5. An ear-ring worn by women; மகளிர் காதணிவகை. *Tinn.* 6. Deep scheme, cunning plan, stratagem; கண்டறிந்து தீர்த்தற்கரிய தந்திரம். *அவன் போட்டது நல்ல முடிச்சு.*

முடிச்சுக்காரன் muṭiccu-k-kāraṉ, *n.* <முடிச்சு+. 1. One who possesses a bundle; சிறுமூட்டைகளை யுடையவன். 2. One who has money; பணமுள்ளவன். 3. Scheming person; தந்திரி.

முடிச்சுக்கோரை muṭiccu-k-kōrai, *n.* <id.+. See முடிக்கோரை. (W.)

முடிச்சுப்போடு-தல் muṭiccu-p-pōṭu-, *v. intr.* <id.+. See முடி^{1}-, 7, 8. *Colloq.*

முடிச்சுமாறி muṭiccu-māṟi, *n.* <id.+. See முடிச்சவிழ்க்கி. (W.)

முடிச்சுற்று muṭi-c-cuṟṟu, *n.* <முடி+. Turban, as tied about the head; தலைப்பாகை. *தொகு முடிச்சுற்றுஞ் சுற்றி (திருவாலவா. 54, 14).*

முடிச்சுற்றுமாலை muṭi-c-cuṟṟu-mālai, *n.* <id.+. See முடிச்சூட்டு. (*தக்கயாகப். 119, உரை.*)

முடிச்சூட்டு muṭi-c-cūṭṭu, *n.* <id.+. Garland worn on the head; முடியில் அணியும் மாலை. *முடிச்சூட்டு முல்லையோ (தக்கயாகப். 119).*

முடிசாய்^{1}-தல் muṭi-cāy-, *v. intr.* <id.+. To die, as having the head droop; இறத்தல். (W.)

முடிசாய்^{2}-த்தல் muṭi-cāy-, *v. intr.* <id.+. 1. To lie down; to rest, as lowering the head; படுத்துக்கொள்ளுதல். *பருந்தருவுடன் பாணடவரு முடிசாய்த்தார் (பாரத. முதற். 77).* 2. To pay homage, bow one's head in reverence; தலைவணங்குதல். *முனிக்கருளலென்று முடிசாய்த்து நின்றான் (நள. கலிநீங்கு. 63).* 3. To incline the head sideways; ஒருபக்கமாகத் தலையைச்சாய்த்தல்.

முடிசூட்டு^{1}-தல் muṭi-cūṭṭu-, *v. tr.* Caus. of முடிசூடு-. To crown, as king; அரசர்க்குரிய மகுடந் தரிப்பித்தல். *முன்றின் முரசமுழங்க முடிசூட்டி (கம்பரா. இரணிய. 171).*

முடிசூட்டு^{2} muṭi-cūṭṭu, *n.* <முடிசூட்டு-. Coronation; அரசன் மகுடஞ் சூடுகை. *முடிசூட்டு மங்கல நாள் (தமிழ்நா. 171, தலைப்பு).*

முடிசூடு-தல் muṭi-cūṭu-, *v. intr.* <முடி+. 1. To be crowned as king; மகுடாபிஷேகஞ் செய்தல். 2. To wear a crown; மகுடந்தரித்தல். *முடிசூடு முடியொன்றே (கலிங். 525).*

முடித்தகேள்வி muṭitta-kēḷvi, *n.* < முடி²- +. Complete learning; கரைகண்ட கேள்வி. *முடித்தகேள்வி முழுதுணர்ந்தோரே* (சிலப. 1, 19).

முடித்துக்காட்டல் muṭittu-k-kāṭṭal, *n.* < id. +. (Gram.) A literary device which consists in showing that the author's statements are in line with the ancient authorities, one of 32 *utti*, q.v.; உத்தி முப்பத்திரண்டனுள் மேலோர் முடித்தவாறு முடித்துக்காட்டுவது. (நன். 145, உரை.)

முடித்துக்கொடு-த்தல் muṭittu-k-koṭu-, *v. tr.* < id. +. To accomplish, complete, as a piece of business; நிறைவேற்றித் தருதல்.

முடித்தேங்காய் muṭi-t-tēṅkāy, *n.* < முடி +. Coconut with the husk removed, leaving a small part of the fibre on the upper part of the nut; குடுமியுள்ள தேங்காய். (W.)

முடித்தைலம் muṭi-t-tailam, *n.* < id. +. Hair-oil; தலைக்கிடுந் தைலம். (சு. வை. ர. 44.)

முடிதீட்டு-தல் muṭi-tīṭṭu-, *v. tr.* < id. +. To prostrate, as touching with one's head another's feet; வணங்குதல். *பாதத் தெழின்முடி தீட்டினனே* (சீவக. 2641).

முடிதும்பை muṭi-tumpai, *n.* prob. id. +. A species of white dead-nettle; தும்பைவகை. (யாழ். அக.)

முடிதுளக்கு-தல் muṭi-tuḷakku-, *v.* < id. +. *intr.* To assent, show appreciation, as by a nod; தலையசைத்தல். *திருமுடிதுளக்கி நோக்கி* (சீவக. 1881).—*tr.* See முடிதீட்டு-. *முனைவற் றொழுது முடிதுளக்கி* (சீவக. 2357).

முடிந்தகணம் muṭinta-kaṇam, *n.* < முடி¹- +. (Jaina.) Present time; நிகழ்காலம். *முன்னைக் கணத்தி னிறந்தவனு முடிந்த கணத்து நின்றவனும* (மேருமந். 662).

முடிந்தகொள்கை muṭinta-koḷkai, *n.* < id. +. Final conclusion; முடிவான தீர்மானம்.

முடிந்தது முடித்தல் muṭintatu-muṭittal, *n.* < id. +. (Gram.) Recapitulation, briefly re-stating the point discussed, one of 32 *utti*, q.v.; உத்தி முப்பத்திரண்டனுள் முன்னர் விளக்கிக்கிடந்த வற்றைத் தொகுத்துக் கூறுவது. (நன். 382, உரை.)

முடிந்தது முற்றும் muṭintatu-muṟṟum, *n.* < id. +. Expression indicating conclusion, used at the end of a treatise, 'finis'; நூலிறுதியில் முடிவைக் குறிக்க எழுதப்படுந் தொடர். (W.)

முடிந்தநூல் muṭinta-nūl, *n.* < id. +. Exhaustive treatise; முழுதுங்கூறும் நூல். *முடிந்த நூலிற் கண்டுகொள்க* (இறை. 1, பக். 2).

முடிந்தபொழுது muṭinta-poḻutu, *n.* < id. +. Old age; முதிர்ந்த வயது. *முடிந்தபொழு திற் குறவாணர் ஏனம் படிந்துழுசால் பைந்தினைகள் வித்த* (திவ். இயற். 3, 89).

முடிநடை muṭi-naṭai, *n.* < முடி +. Walking on one's head; தலையால் நடக்கை. *அங்க வட விழுந்து முடிநடையா லேறி* (திருத. பு. சா. 28).

முடிநர் muṭinar, *n.* < முடி¹-. Those who tie knots; கட்டுபவர். *மைபு நிறை முடிநரும்* (மது ரைக். 514).

முடிநாதம் muṭinātam, *n.* Cochineal insect. See இந்திரகோபம். (யாழ். அக.)

முடிநாறு muṭi-nāṟu, *n.* < முடி +. Sheaf or bundle of seedlings; நாற்றுமுடி. *முடிநா றழுத்திய நெடுநீர்ச்செறு* (பெரும்பாண். 212).

முடிப்பானை muṭi-p-pāṉai, *n.* < id. +. Large earthen vessel for storing money or treasure; பொன் முதலிய அரும்பண்டங்களை வைக்கும் பெரிய மட்கலம். *Loc.*

முடிப்பிசைக்குறி muṭippicai-k-kuṟi, *n.* < முடிப்பு + இசை +. Full-stop; வாக்கியமுடிவைக் காட்டும் முற்றுக்குறி. (நான். பால. 169.)

முடிப்பிரி muṭippiri, *n.* Corr. of முடிப்புரி.

முடிப்பு muṭippu, *n.* < முடி²-. [T. K. *muḍupu*.] 1. Tying, fastening; முடிபோடுகை. 2. Tie, knot; முடிச்சு. 3. Bundle; கட்டு. 4. That which is worn on the head; தலையில் அணியும் பொருள். 5. Money wrapt in a cloth and tied up; பணமுடிச்சு. *ஒரு பொன்முடிப்பு வைத்தேன்* (விறலிவிடு. 899). 6. Remittance of kist into the treasury; இறுசாற்பணம். *இன்று முடிப்புச் செலுத்தியாகவேணும்.* 7. Money, wealth; சொத்து. *அவனுக்கு முடிப்பொன்று மில்லை. Loc.* 8. Total sum; மொத்தத் தொகை. (யாழ். அக.) 9. Decision; தீர்ப்பு. (யாழ். அக.) 10. End, result; முடிவு. (W.)

முடிப்புக்கட்டு-தல் muṭippu-k-kaṭṭu-, *v.* < முடிப்பு +. *tr.* To conclude; முடிவுசெய்தல். (யாழ். அக.)—*intr.* To set apart, as a provision for a future expenditure; பணமுடிப்புச் சேர்த்து வைத்தல். *பெண் பிறந்திருப்பதனால் இனி முடிப்புக் கட்டிவைக்கவேண்டும்.*

முடிப்புக்காரன் muṭippu-k-kāraṉ, *n.* < id. +. *Loc.* 1. Collector of the revenue of a village, in ancient times; பண்டைக்காலத்து அரசிறைத் தண்டற்காரன். 2. One who keeps money; பணமுள்ளவன்.

முடிப்புமாறி muṭippu-māṟi, *n.* < id. +. See முடிச்சுமாறி. *Loc.*

முடிப்புரி mutippuri, n. <id.+உரி-. (W.) 1. Receiver of rents and taxes; அரசிறைத் தண்டற்காரன். 2. Shroff; சராப்புக்காரன்.

முடிபு mutipu, n. <முடி¹-. See முடிவு. முனிவரா வெகுளியின முடிபென்றுரா சிலா (கமபரா. மாரீச. 34).

முடிபெழுத்து mutipeluttu, n. <முடிபு+ எழுத்து. A class of letters; எழுத்துவகைகளுள் ஒன்று. (நன். 256, மயிலை.)

முடிபொருட்டொடர்நிலை muti-porut-totar-nilai, n. <முடி+பொருள்+. Epic or narrative poem. See பொருட்டொடர்நிலைச்செய்யுள். முடிபொருட்டொடர்நிலையுள் தானபயன் கூறும் வழி (சிலப. 2, 9, உரை).

முடிபோடு-தல் muti-pōtu-, v. <id.+. tr. To tie into a knot; ஒன்றேடொன்று மாட்டிப் புணைத்தல்.—intr. 1. To be pre-destined or ordained to be married to each other; கணவனும் மனைவியுமாதற்கு விதியமைதல். அவனுக்கும் இவளுக்கும் முடிபோட்டிருக்கிறது. 2. See முடி¹-, 7.

முடிமயிர்¹ muti-mayir, n. <முடி²-+. 1. Lock of hair; சேர்த்து முடித்த தலைமயிர். (W.) 2. Switch; மகளிர் தலைமயிரோடு சேர்த்துமுடித்துக் கொள்ளும் கட்டுமயிர். (W.)

முடிமயிர்² muti-mayir, n. <முடி+. Hair offered to a deity in pursuance of a vow; தெய்வத்துக்குக் காணிக்கையாக மழித்து இடும் தலைமயிர். Loc.

முடிமன்னன் muti-mannan, n. <id.+. Crowned monarch; மகுடந்தரித்த அரசன். முடிமன்னா மூவருங் காததோமபும (சிலப. 29, பக். 575).

முடிமார் mutimār, n. <முடி²-. Those who accomplish things; முடிப்பவர். தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார் (திருமுரு. 89).

முடிமாலை muti-mālai, n. <முடி+. Garland for the head, chaplet; தலையில் அணியும் மாலை. (திவா.)

முடிமேன்முடி muti-mēl-muti, n. prob. id.+. Panicled golden-blossomed pear tree. See சிலந்தி², 1. (மலை.)

முடிமேலழகி muti-mēl-alaki, n. prob. id. +. A very small plant. See கோடகசாலை. (மலை.)

முடிய mutiya, adv. <முடி¹-. Unto the end, finally; முழுதும். (திவா.) என்று முடியக் கட்டுரைப்பது (தக்கயாகப். 728).

முடியரசன் muti-y-aracan, n. <முடி+. See முடிமன்னன். (தக்கயாகப். 623, விசேடக்குறிப்பு.)

முடியல் mutiyal, n. <முடி¹-. All, whole; எல்லாம். (சது.)

முடியறுத்தல் muti-y-aruttal, n. <முடி+ அறு²-. The first shaving of a baby, ceremonially observed; குடுமிவைக்குஞ் சடங்கு. Loc.

முடியிறக்கு-தல் muti-y-irakku-, v. <id. +. intr. To shave the hair of the head in fulfilment of a vow; பிரார்த்தனையாக மயிர் களைதல். Loc.—tr. To put to disgrace; அவமானஞ் செய்தல். (யாழ். அக.)

முடியுப்பு muti-y-uppu, n. Rock salt; கல்லுப்பு. (மூ. அ.)

முடியுயர்-தல் muti-y-uyar-, v. intr. <முடி+. To grow prosperous, as a king; இராசாங்கஞ் செழித்தல். குடியுயர முடியுயரும்.

முடியுலகம் muti-y-ulakam, n. <id.+. See முடியுலகு. முடியுலக மூதற் (சீவக. 1215).

முடியுலகு muti-y-ulaku, n. <id.+. Heaven, celestial world, as the highest world; மேலுலகம். வானவரை முடியுலகுற (சீவக. 1847).

முடியுறுப்பு muti-y-uruppu, n. <id.+. Ornamental parts of a crown, five in number, viz., tāmam, mukuṭam, patumam, kōṭakam, kimpuri; தாமம், முகுடம், பதுமம், கோடகம், கிம்புரி என ஐவகைப்பட்ட மகுட வுறுப்புக்கள். (திவா.)

முடியெடு-த்தல் muti-y-etu-, v. intr. <id. +. 1. See முடியிறக்கு-. 2. To become prominent; தலையெடுத்தோங்குதல். மறையவர் முடியெடுத்தனா (கலிங. 251).

முடிவறி-தல் mutivari-, v. tr. <முடிவு +. To be advanced in knowledge; to master completely; நன்றாக உணர்தல். (யாழ். அக.)

முடிவாங்கு-தல் muti-vāṅku-, v. intr. <முடி+. See முடியிறக்கு-. Colloq.

முடிவாழை muti-vālai, n. perh. id.+. [K. mutivāḷa.] Cuscus-grass. See வெட்டிவேர் மீச்சை. (பிங்.)

முடிவிடங்கூறல் mutiviṭaṅ-kūral, n. <முடிவு+. (Gram.) Giving particular reference to the rule followed in the context, one of 32 utti, q.v.; உத்தி முப்பத்திரண்டனுள் தான் சொல்லும் இலக்கணத்திற்கு விதி கூறும் இடந்தைக் குறிப்பது. (நன். 97, உரை.)

முடிவிலாற்றல் mutivil-āṟṟal, n. <id.+ இல் neg.+. See முடிவிலாற்றலுடைமை. (திவா.)

முடிவிலாற்றலுடைமை mutivil-āṟṟal-uṭaimai, n. <முடிவிலாற்றல்+. Omnipotence, one of civaṉ-eṇ-kuṇam, q.v.; சிவனெண்குணத் தொன்றாகிய அனந்த சக்தி. (குறள், 9, உரை.)

முடிவினை muti-viṉai, n. <முடி¹-+. Past karma whose effect has begun to operate. See

பிராரத்தம். ஆகாமிய வினையும் முடிவினையும் ஒத்தல் வேண்டும் (சி. போ. பா. 8, 1, பக். 175, சுவாமிநா.).

முடிவு mutivu, n. <id. 1. End, finality; இறுதி. 2. Completion; பூர்த்தி. 3. Issue, result; பயன். 4. Conclusion; decision; தீர்மானம். முடிவென்ன சொல்லுகிறீர்? 5. Resoluteness; முடிவான உட்கோள். அக்கணை . . . முடுகிய முடிவை நோக்கி (கம்பரா. நிகும்ப. 177). 6. (Mus.) Tonic at the conclusion of a piece; நியாசசுவரம். 7. A kind of note in music; இசைப்பாகுபாட்டினுள் ஒன்று. (சிலப். 3, 41-2, உரை, பக். 108.) 8. Death; மரணம். முடிவுகாலம். 9. Limit; எல்லை. சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் (குறள், 671).

முடிவுகட்டு-தல் mutivu-kattu-, v. tr. <முடிவு+. To come to a conclusion; தீர்மானித்தல். Colloq.

முடிவுகாலம் mutivu-kālam, n. <id.+. Time of death; மரணகாலம்.

முடிவுசொல்(லு)-தல் mutivu-col-, v. intr. <id.+. To give a decision; to deliver judgment; தீர்ப்புச் சொல்லுதல்.

முடிவுபோ-தல் mutivu-pō-, v. intr. <id +. To be accomplished, fulfilled; நிறைவேறு தல். முடிவுபோகாமையின் (குறள், 262, உரை).

முடிவுபோக்கு-தல் mutivu-pōkku-, v. tr. Caus. of முடிவுபோ-. To accomplish, fulfil; நிறைவேற்றுதல். தான் குளுற்ற காரியத்தினை முடிவு போக்காது (கலித். 149, 10, உரை).

முடிவுரை mutivurai, n. <முடிவு+. Epilogue; concluding section of a work; நூலிறுதியில் அமையும் சட்டுரை.

முடிவெட்டு-தல் muti-vettu-, v. intr. <முடி+. To crop the hair; மயிர் கத்தரித்தல். Mod.

முடிவெழுத்து mutiveluttu, n. <முடிவு + எழுத்து. See முடிபெழுத்து. (பிங.)

முடிவேந்தர் muti-vēntar, n. <முடி+. See முடிமன்னர். முடிவேந்தர் மன்னும் அரணகளை (சிறுபாண. 247, உரை).

முடுக்கடி mutukkati, n. <முடுக்கு²+. Busy time; critical moment; நெருக்கடி. கலியாண முடுக்கடியில் துணிகள் வாங்காதே. Loc.

முடுக்கம் mutukkam, n. <முடுக்கு-. 1. High price, dearness; விலையேற்றம். Loc. 2. Tightness; இறுகல். Nāñ.

முடுக்கர் mutukkar, n. <முடுக்கு². 1. Short street; குறுந்தெரு. முடுக்கரும் வீதியும் (சிலப். 5, 187). 2. Pathway difficult to pass; அருவழி. முட்டுடை முடுக்கரு மொய்கொள் குன்றமும் (சீவக. 1216). 3. Lane; தெருச்சந்து. முடுக்கர்தோறும் புகுந்த வல்லிருளின் பெருமலை (இரகு. இலவ. 55). 4. Mountain cavern; மலைக்குகை. (பிங.) 5. Place where water presses against a bank and erodes; நீர்க்குத்தான இடம். குணகிய முடுக்கர் . . . யாறு (மலைபடு. 213). 6. Interstice, interspace; இடைவெளி. முடத்தாழை முடுக்கருள் (கலித். 136).

முடுக்கன் mutukkan, n. <முடுக்கு³. Strong man; வலியோன். (யாழ். அக.)

முடுக்காணி mutukkāni, n. <முடுக்கு-+. Screw; ஆணிவகை. Loc.

முடுக்கு¹-தல் mutukku-, 5 v. tr. Caus. of முடுகு-. [K. mutukku.] 1. To urge, bring pressure on; அவசரப்படுத்துதல். (W.) 2. To drive in, as a screw; திருகாணிமுதலியன உட்செலுத்துதல். கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து (நெடுநல். 85). 3. To drive, cause to run, as a horse; to set in motion, as a potter's wheel; விரையச்செலுத்துதல். கடுகிமுடுக்கினும் (விநாயக பு. 55, 7). 4. To bite off hurriedly; விரைந்து கடித்தல். பிணவு நாய் முடுக்கிய தடியொடு (மலைபடு. 177). 5. To plough; உழுதல். மூரி தவிர முடுக்கு முதுசாடி (பரிபா. 20, 54). 6. To induce, urge on; தூண்டிவிடுதல். என் அவனுடன் சண்டை செய்யும் படி முடுக்குகிறாய்? Colloq.—intr. 1. To feel urgently, as the call of nature; உணர்ச்சிமிகுதல். ஒன்றுக்கு முடுக்குகிறது. 2. To increase, as in price; அதிகமாதல். விலைமுடுக்கிப்போகிறது. 3. To hasten; விரைதல். முடுக்கிவந்து (உத்தரரா. இலவணையழி. 20).

முடுக்கு² mutukku, n. <முடுக்கு-. [K. mutukku.] 1. Urging, pressing hard; துரிதப் படுத்துகை. 2. Corner; மூலை. 3. Narrow, winding street; சோணைல்தெரு. முட்டுமுடுக்கு மிட்டிடை கழியும . . . வீதியும் (பெருங. உஞ்சைக். 33, 16). 4. Increase; dearness, as of price; அதிகம். தானகம் விலை வெகு முடுக்கு.

முடுக்கு³ mutukku, n. <மிடுக்கு. 1. Strength, power; வலிமை. (W.) 2. Pride, arrogance; stiffness of manners; அகம்பாவம். Loc.

முடுக்குச்சந்து mutukku-c-cantu, n. <முடுக்கு²+. Alley, narrow lane; சிறுசந்து. Colloq.

முடுக்குவழி mutukku-vali, n. <id.+. See முடுக்குச்சந்து. (சிலப். 14, 214, உரை.)

முடுகடி mutukati, n. cf. முடுக்கடி. Nearness; சமீபம். (யாழ். அக.)

முடுகல் mutukal, n. <முடுகு-. (சூடா.) 1. Quickness; விரைவு. 2. Strength; வலிமை.

முடுகியல் muṭukiyal, *n.* <id.+. (Pros.) A part of *kali* verse, characterised by rapid movement. See அராகம்[1], 1. (*வீரசோ. யாப.* 11, *உரை.*)

முடுகியல்வண்ணம் muṭukiyal-vaṇṇam, *n.* <முடுகியல்+. See முடுகியல். (*பிங.*)

முடுகு[1]-தல் muṭuku-, 5 *v.* [T. K. *muḍuku*, M. *muḍugu*.] *intr.* 1. To hasten; to be in haste; to move quickly; விரைந்து செல்லுதல். *முடுகழலின் முந்துறுதல்* (*பு. வெ.* 3, 6). 2. To become urgent; to come to a head; to throng and surge; நெருங்கிவருதல். *வெம்மைக்கூற்ற முடுகாதே* (*தேவா.* 116, 7). 3. To be strong; வலிமையாதல். (W.)—*tr.* To meet; to advance against; எதிர்தல். (*பிங.*)

முடுகு[2] muṭuku, *n.* <முடுகு-. 1. A rapid movement in verse; முடுகிச் செல்லும் சந்தவகை. (W.) 2. Bad odour, stench; நாற்றம். *முடுகு நாறிய வடுகர* (*தேவா.* 918, 1). 3. Bracelet made of lac; அரக்கால் செய்யப்பட்ட கங்கணம். *Tinn.* 4. Mould in which lac bracelets are made; அரக்குவளை செய்யுஞ் சட்டை. *Loc.* 5. A ring; மோதிரவகை. *Nāñ.*

முடுகு[3] muṭuku, *n.* Female elk; கடமை விலங்கின் பெண். (W.)

முடுகுவண்ணம் muṭuku-vaṇṇam, *n.* <முடுகு-+. (Pros.) A rhythm effected by mixing lines of short syllables in rapid succession with those of a different type; அராகந்தொடுத்த அடியோடு பிற அடிசேர்ந்து தொடர்ந்தோடுஞ் சந்தம். (*தொல். பொ.* 545.)

முடுகுவெண்பா muṭuku-veṇpā, *n.* <id. +. (Pros.) A species of *veṇpā* verse composed either wholly or partly in quick rhythm; சந்தமுடுகுள்ள வெண்பாவகை.

முடுத்தார் muṭuttār, *n.* prob. மூடு-. Act of covering; மூடுகை. *அந்த சவத்துக்கு முடுத்தார் பண்ணினீர்களா?* *Tranquebar.*

முடுதம் muṭutam, *n.* perh. *mūrdhan.* Leadership; தலைமை. *Nāñ.*

முடுவல் muṭuval, *n.* prob. முடுகு-. 1. Dog; நாய். (*பிங.*) *சினமுடுவல் நரி கழுகு* (*திருப்பு.* 519). 2. Bitch; பெண்ணாய். *முடுவனந்த பைங் கிணத் தடியொடு* (*மலைபடு.* 563). (*பிங.*) 3. A brown-coloured dog. See செந்நாய். (*அக. நி.*)

முடுவல்வெம்படையோன் muṭuval-vem-paṭaiyōṉ, *n.* <முடுவல்+வெம்-மை+. Bhairava, as having an army of dogs; [நாய்ப்படையுடையவன்] வயிரவன். (*சூடா.*)

முடை[1] muṭai, *n.* 1. Flesh; புலால். *முடைச் சாகாடு* (*நாலடி*, 48). 2. Stench, offensive odour; துர்நாற்றம். *முடையரைத் தலைமுண்டிக்கு மொட்டரை* (*தேவா.* 423, 4). 3. Smell of sour buttermilk or curds; புளித்த மோர் முதலியவற்றின் வீச்சம். *இடைப்பேச்சு முடைநாற்றமுமாயிட்டது* (*திவ். திருப்பா.* வ்யா. அவ.) 4. Bran; தவிடு (*பிங.*)

முடை[2]-தல் muṭai-, 4 *v.* <பின்னை-. *tr.* To braid, plait, wattle; பின்னுதல். *உவாகத் பழுத்தலை முடைந்து வேயாத குளிமனை* (*பெரும்பாண்.* 353, *உரை*).—*intr.* To become lean; மெலிதல். (W.)

முடை[3] muṭai, *n.* <முடை-. 1. Ola basket; குடையோலை. (*திவா.*) 2. Umbrella of palm leaves; ஓலைக்குடை. (W.) 3. Straits, urgency, as of poverty; நெருக்கடி. *பணத்துக்கு முடையாயிருக்கிறது.*

முடைச்சேரி muṭai-c-cēri, *n.* <முடை[1]+. Village in the forest tracts; முல்லை நிலத்தூர். (*யாழ். அக.*)

முடைசல் muṭaical, *n.* <முடை-. 1. Plaiting, braiding; முடைகை. 2. That which is plaited; முடையப்பட்டது. 3. Screen of bamboo or palm leaves for protecting the banks of rivers from erosion by floods; வெள்ளத்தால் கரை உடைந்து போகாதவாறு மூங்கில் முதலியவற்றால் ஏற்படும் அடைப்பு. *Loc.*

முடைஞ்சல் muṭaiñcal, *n.* <முடை-. Trouble, distress; இடையூறு. (*நாமதீப.* 631.)

முடைநாற்றம் muṭai-nāṟṟam, *n.* <முடை[1] +. See முடை, 1, 2, 3. *முடை நாற்ற மோடுடைய* (*கடம்ப. பு. இலீலா.* 107).

முடைநாறி muṭai-nāṟi, *n.* <id.+. Small downy-lobed vine, m. cl., *Vitis linnaei*; கொடிவகை. (L.)

முடைப்படு-தல் muṭai-p-paṭu-, *v. intr.* <id.+. To be in straits; நெருக்கடி உண்டாதல்.

முண்டக்கண் muṇṭa-k-kaṇ, *n.* See முண்டைக்கண். *Colloq.*

முண்டக்கண்கறவா muṇṭakkaṇ-kaṟavā, *n.* prob. முண்டைக்கண்+. Sea-fish, violet-brown, *Pempheris malabarica*; நீலமும் பழுப்பும் கலந்த நிறமுள்ள கடல்மீன்வகை.

முண்டக்கண்காக்காச்சி muṇṭakkaṇ-kākkācci, *n.* <id.+. 1. Sea-fish, yellowish-green, attaining 3 in. in length, *Apogan glaca*; மஞ்சள் கலந்த பசுமை நிறமுள்ளதும் மூன்றங்குலம் வளர்வதுமான கடல்மீன்வகை. 2. Sea-fish, scarlet, *Myripristis bolche*; செந்நிறமுள்ள கடல்மீன்வகை.

முண்டகம்[1] muṇṭakam, *n.* prob. முள்+அகம். 1. Thorn; முள். *முண்டக விறும்பி னூற்ற* (*அரிச். பு. வேட்டஞ்.* 36). 2. Thorn bush; முள்

ளுடைத்தூறு. (பிங்.) 3. Fragrant screw-pine. See தாழை, 1. (பிங்.) கூன்முண் முண்டகக் கூர்ம்பனி மாமலர் (குறுந். 51). 4. Lotus; தாமரை. முண்டக வதன மழகெழ (திருவாலவா. 37, 58). 5. Water-thorn. See நீர்முள்ளி. (திவா.) முண்டகங் கரும் பொனத் துய்த்து (கல்லா. 62, 14). 6. Indian nightshade. See கழிமுள்ளி. மணிப்பூ முண்டகத்து (மதுரைக். 96). 7. Jagged jujube. See கருக்கு வாய்ச்சி. (அக. நி.) 8. Sweet toddy; பதநீர். (சங். அக.) 9. cf. *maṇḍa*. Toddy; கள். (பிங்.) 10. Jaggery from palmyra; கருப்புக்கட்டி. (சங். அக.)

முண்டகம்² muṇṭakam, *n.* < *muṇḍaka*. 1. Forehead; நெற்றி. (பிங்.) முண்டகக் கண்ணு போற்றி (குற்று. தல. திருமால். 141). 2. Head; தலை. (அருநி.) 3. An Upaniṣad, one of 108; நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று. 4. Plantain; வாழை. (மலை.)

முண்டகம்³ muṇṭakam, *n.* Sea; கடல். (அக. நி.)

முண்டகன் muṇṭakaṉ, *n.* < *muṇḍaka*. Brahmā, as lotus-born; பிரமன். (இலக். அக.)

முண்டகாசனன் muṇṭakācaṉaṉ, *n.* < id. + *āsana*. See முண்டகன். (யாழ். அக.)

முண்டகாசனி muṇṭakācaṉi, *n.* < id. +. See முண்டகாசனை. (யாழ். அக.)

முண்டகாசனை muṇṭakācaṉai, *n.* < id. +. Lakṣmī, as seated on a lotus; [தாமரையில் இருப்பவள்] இலக்குமி. முண்டகாசனை கேள்வன். (சூடா.)

முண்டகோபநிடதம் muṇṭakōpaniṭatam, *n.* < *muṇḍaka* + *upa-ni-ṣad*. See முண்டகம்², 3.

முண்டணி muṇṭaṇi, *n.* cf. முண்டனி. See விஷ்ணுக் கரந்தை. (பரி. அக.)

முண்டபங்கி muṇṭapaṅki, *n.* (Śaiva.) Meditation of Śiva-liṅgam as having five faces, in *āṉmārtta-pūcai*; ஆன்மார்த்த பூசையில் இலிங்க உருவமாயுள்ள சிவபெருமானை ஐந்து முகங்களோடு கூடியவராகத் தியானிக்கை. முறைமையிற்றண்டபங்கி முண்டபங்கியு மியற்றி (சூத. சிவமான். 4, 18). (தத்துவப். 64, உரை.)

முண்டபலம் muṇṭa-palam, *n.* < *muṇḍa-phala*. Coconut; தேங்காய் (யாழ். அக.)

முண்டம் muṇṭam, *n.* < *muṇḍa*. 1. Head; தலை. (பிங்.) முண்டம் வெம்ப (திருவாலவா. 44, 31). 2. Forehead; நெற்றி. முண்டத்துற்ற கண்ணெரியினுன் (இரகு. தேனுவ. 86). 3. Clean-shaven head; மழித்த தலை. சடையு முண்டமுஞ் சிகையும் (அரிச். பு. விவாக. 2). 4. Bald head; வழுக்கைத்தலை. (W.) 5. Skull; கபாலம். இறையான் கையினிறையாத முண்டம் நிறைத்த வெந்தை (திவ். பெரியதி. 5, 1, 8). 6. Headless trunk; உடற்குறை. (யாழ். அக.) 7. Limbless body; உறுப்புக் குறை. கை முண்டம், கால் முண்டம். 8. Undeveloped foetus; நிரம்பாக் கருப்பிண்டம். முண்டமவிழுந்தது. 9. Naked body; நிர்வாணமான உடல். *Colloq.* 10. Useless person; blockhead; அறிவில்லாதவன். 11. Sphere, globe; திரட்சி. (சூடா.) 12. Stump, stake; குற்றி. (இலக். அக.) 13. Iron dross. See மண்டூரம். (அக. நி.) 14. An Upaniṣad. See முண்டகம்², 3. (யாழ். அக.) 15. See முண்டபங்கி. நலத்த வருவது காணடல் முண்டம (தத்துவப். 64). 16. cf. *puṇḍra*. Caste mark on the forehead; புண்டரம். ஆட்கொண்டான்றிரு முண்டந் தீட்டமாட்டாது (திருவாச. 35, 9). 17. cf. *piṇḍa*. A preparation of rice-flour cooked in steam; பிட்டு. (அக. நி.) 18. Ankle; கணுக்காற்பொருத்து. 19. Piece, as of timber; மரத்துண்டு. 20. Mass; கட்டி. போராறு பெருகிவர பீமுண்டம மிதந்துவர.

முண்டன்¹ muṇṭaṉ, *n.* < id. 1. Shaven-headed person; மழித்த தலையன். கண்டராய் முண்டராகி (தேவா. 269, 3). 2. Śiva, as having a skull in His hand; [கையிற் கபாலத்தையுடையவன்] சிவபிரான். முண்டனீறன் (திவ். திருச்சந். 71). 3. Śaivite; சைவன். (திவ். திருமாலை, 8, வ்யா.) 4. Jain; அமணன். (திவ். திருமாலை, 8, வ்யா.) 5. Barber; நாவிதன். (யாழ். அக.) 6. Ascending node; இராகு. (யாழ். அக.)

முண்டன்² muṇṭaṉ, *n.* < மிண்டு-. 1. Strong, powerful person; வலியவன். (திவ். திருமாலை, 8, வ்யா.) 2. Hard portion of a tuber; கிழங்கின் கடினமான பகுதி. சேப்பம் முண்டன்.

முண்டனம் muṇṭaṉam, *n.* < *muṇḍana*. Shaving of the head; தலைசிரைக்கை.

முண்டனி muṇṭaṉi, *n.* < *muṇḍī*. Indian globe-thistle; விஷ்ணுக்கரந்தை. (சங். அக.)

முண்டா muṇṭā, *n.* < U. *mōṇḍhā*. Shoulder, upper arm; தோள். முண்டாத்தட்டிச் சண்டைக்கு அழைக்கிறான்.

முண்டாகாரம் muṇṭākāram, *n.* < *muṇḍa* + *ā-kāra*. 1. See முண்டம், 6. 2. Shapeless mass; உருவிளங்காத பொருள். *Colloq.*

முண்டாசு muṇṭācu, *n.* < Hindi. *mun-dāsā* < *muṇḍa* + *vāsās*. A kind of head-dress, small loose turban; தலைப்பாகைவகை. கொடுத்தானோ முண்டாசு (விறலிவிடு. 1116).

முண்டாணி muṇṭāṇi, *n.* See மூன்றுவீசம். *Tinn.*

முண்டாத்தட்டு-தல் muṇṭā-t-taṭṭu-, *v. intr.* < முண்டா +. To clap the shoulders,

as in challenge or defiance; வீரக்குறிப்பாகத் தோள்தட்டுதல். *Colloq.*

முண்டாயி muṇṭāyi, *n.* <U. *mīthāī.* Sweetmeats, confectionery; மிட்டாய். (J.)

முண்டாரி[1] muṇṭāri, *n.* See முண்டேறி. *Loc.*

முண்டாரி[2] muṇṭāri, *n.* See முண்டன்[2], 1. *Loc.*

முண்டான் muṇṭāṉ, *n.* prob. *muṇḍa.* Turmeric tuber; மஞ்சட்கிழங்கு. *Loc.*

முண்டி[1] muṇṭi, *n.* <Hindi. *muṇḍa.* [T. *muṇḍi*, K. *moṇḍu.*] Pertinacious beggar. See கல்லுளிமங்கன். *Loc.*

முண்டி[2] muṇṭi, *n.* <*muṇḍin.* 1. Person with a clean-shaven head; மழித்த தலையினன். (திருவாலவா. குறிப்பு.) 2. Barber; நாவிதன். (இலக். அக.) 3. cf. *puṇḍrin.* One who wears a caste mark on his forehead; நெற்றியில் திரிபுண்டரம் அணிந்தவன். நீற்றுப பூண்டகு முண்டி யேடா (திருவாலவா. 13, 14).

முண்டி[3]-த்தல் muṇṭi-, *11 v. tr.* <*muṇḍa.* To shave the head completely; மொட்டையாய்ச் சிரைத்தல். தலை முண்டிக்கு மொட்டரை (தேவா. 423, 4).

முண்டி[4] muṇṭi, *n.* See முண்டனி. (நாமதீப. 329.)

முண்டிதம் muṇṭitam, *n.* <*muṇḍita.* 1. Shaving the head clean; மொட்டையடிக்கை. முண்டிதப்படு சென்னியன் (கந்தபு. மார்க். 117). 2. A masquerade dance; வரிக்கூத்துவகை. (சிலப. 3, 18, உரை.)

முண்டிதை muṇṭitai, *n.* The Indian sloth. See தேவாங்கு[2]. (நாமதீப. 222.)

முண்டிரம் muṇṭiram, *n.* An Upaniṣad; ஓர் உபநிடதம். (யாழ். அக.)

முண்டீரம் muṇṭīram, *n.* A kind of greens; கீரைவகை. (சங். அக.)

முண்டு[1]-தல் muṇṭu-, *5 v. intr.* <மிண்டு-. 1. To be unruly, refractory; to act saucily; முரண்டுபண்ணுதல். 2. To attack vehemently; முனைந்துநிற்றல். ஒரு முண்டு முண்டிப்பாராத தான்.

முண்டு[2] muṇṭu, *n.* <முண்டு-. [K. *moṇḍu.*] 1. Petulance, obstinacy; முருட்டுத்தனம். (யாழ். அக.) 2. Vehement attack; முனைந்து செய்யும் எதிர்ப்பு. 3. Stupidity; மடமை. (யாழ். அக.) 4. Knot, as in a tree; மரமுதலியவற்றின் கணு. 5. Bulging or protuberance; திரட்சி. 6. Short log; wooden prop; சிறுகட்டை. *Loc.* 7. Joint of the body; உடற்சந்து. முண்டிலே பட்டது. *Colloq.* 8. Hump; திமில். *Loc.*

முண்டு[3] muṇṭu, *n.* [K. M. *muṇḍu.*] Short-sized cloth; சிறுவேஷ்டி. (நாமதீப. 780.)

முண்டுபலகை muṇṭu-palakai, *n.* prob. முண்டு[2]+. Paddle; கடலில் கட்டுமரத்தைச் செலுத்த உதவும் துடுப்பு. *Loc.*

முண்டேறி muṇṭēṟi, *n.* <Hindi. *muṇḍērī.* Coping of a wall, மதிலின்மேலுள்ள தலையீடு. *Loc.*

முண்டை[1] muṇṭai, *n.* <முட்டை. Egg; முட்டை. முண்டை விளைபழம (பதிற்றுப். 60, 6).

முண்டை[2] muṇṭai, *n.* <மிண்டை. Apple of the eye; கண்ணின் கருவிழி. *Colloq.*

முண்டை[3] muṇṭai, *n.* <*muṇḍā.* Widow, as having a shaven head; கைம்பெண். சேரஷியெனு மொட்டை முண்டை (தனிப். திர. 376, 4).

முண்டைக்கட்டை muṇṭai-k-kaṭṭai, *n.* <முண்டம்[1]+. Nakedness; நிர்வாணம். *Colloq.*

முண்டைக்கண் muṇṭai-k-kaṇ, *n.* <முண்டை[2]+. Goggle eye; வெளியில் பிதுங்கியுள்ள பருத்தவிழி. *Colloq.*

முண்டைச்சி muṇṭaicci, *n.* <முண்டை[3]. See முண்டை[3].

முண்டைமோப்பி muṇṭai-mōppi, *n.* <T. *muṇḍā-mōpi.* 1. Widow; விதவை. (W.) 2. Son born to a widow; விதவைக்குப் பிறந்த பிள்ளை. *Madr.*

முண்ணாயகி muṇṇāyaki, *n.* <முள்+. A kind of poisonous herb. See பாம்புக்கினி. (W.)

முண்ணாவல் muṇṇāval, *n.* <id.+நாவல். A species of rose-apple; நாவல்வகை. *Loc.*

முண்மா muṇmā, *n.* <id.+. Porcupine; முள்ளம்பன்றி. (யாழ். அக.)

முண்முரண்டை muṇ-muraṇṭai, *n.* <id.+. Necklace berried climbing caper, m. cl., *Maerua arenaria*; கொடிவகை. (L.)

முண்முருக்கு muṇ-murukku, *n.* <id.+. See முள்ளுமுருக்கு. (மூ. அ.)

முண்முருங்கை muṇ-muruṅkai, *n.* <id. +. See முள்ளுமுருக்கு. *Loc.*

முணக்கு-தல் muṇakku-, *5 v. tr.* Caus. of முணங்கு-. To contract, withdraw, bend; உள்வளைத்தல். வள்ளுகிர் முணக்கவும் (நற். 114).

முணங்கு[1]-தல் muṇaṅku-, *5 v. intr.* 1. To be contracted, withdrawn, bent; உள்ளடங்குதல். 2. To be subject to; அடங்குதல். (W.) 3. cf. முனங்கு-. To speak in a suppressed tone, mutter in a low tone, murmur; தாழ்வாய்ப் பேசுதல். (W.)

முணங்கு² muṇaṅku, n. < முணங்கு-. 1. Withdrawing, contracting, bending; அடக்கம். (சூடா.) 2. Shaking off drowsiness or laziness by stretching one's limbs; சோம்பல்முறிப்பு. முணங்கு நிமிர் வயமான (புறநா. 52). 3. Idleness; சோம்பு. (இலக். அக.)

முணங்குநிமிர்-தல் muṇaṅku-nimir-, v. intr. < முணங்கு+. To shake off drowsiness or laziness; மூரிநிமிர்தல். முணங்குநிமிர்ந் தளைச் செறி யுழுவை யிரைக்குவந் தன்ன (புறநா. 78).

முணமுண-த்தல் muṇa-muṇa-, 11 v. tr. To mutter, murmur; வாய்க்குட்பேசுதல். Colloq.

முணவல் muṇaval, n. < முணவு-. Anger; கோபம். (நாமதீப. 637.)

முணவு-தல் muṇavu-, 5 v. tr. 1. To dislike, feel aversion to; வெறுத்தல். களிறு நிலை முணவுதற்குக் காரணம இருஞ்சேறுபடுதல் (பதிற்றுப. 64, 7, உரை). 2. To be angry; சினத்தல்.

முணுமுணு-த்தல் muṇu-muṇu-, 11 v. tr. See முணமுண-.

முணை¹ muṇai, n. < முணவு-. 1. Aversion; வெறுப்பு. முணையில்கொடை (சிவப. பிரபந். சிவஞா. பிள. முத்தப். 5). 2. Abundance; மிகுதி. முணையி னுற கடலக முழக்க மொத்தவே (சீவக. 2222).

முணை²-தல் muṇai-, 4 v. tr. < முணை. To dislike, feel aversion to; வெறுத்தல். களிறு நிலை முணைஇய (பதிற்றுப. 64, 7).

முத்கலை mutkalai, n. < Mudgalā. An Upaniṣad, one of 108; நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று.

முத்தக்காசு mutta-k-kācu, n. < musta+. 1. Straight sedge, Cyperus rotundus; கோரை வகை. (M. M. 228.) 2. Straight sedge tuber, Cyperus pertenuis; கோரைக் கிழங்கு. முத்தக காசை அமுது செய்விப்பது (ஈடு, 1, 6, 1).

முத்தகம்¹ muttakam, n. < muktaka. 1. A stanza which, by itself, is complete in sense; தனிநின்று பொருள் முடியுஞ் செய்யுள். (தண்டி. 2.) 2. A kind of literary composition adapted to singing; இசைப்பாவகையுள் ஒன்று. (சிலப. 6, 35.) 3. Missile; எறியாயுதம். (யாழ். அக.)

முத்தகம்² muttakam, n. < atimuktaka. (மலை.) 1. Common delight of the woods. See குருக்கத்தி. 2. cf. முண்டகம்¹. Jagged jujube. See கருக்குவாய்ச்சி.

முத்தங்கி muttaṅki, n. < முத்து²+. Cloak made of pearls; முத்துச்சட்டை. Loc.

முத்தங்கொஞ்சு-தல் muttaṅ-koñcu-, v. < முத்தம்¹+. tr. See முத்தமிடு-.—intr. See முத்தந்தா-.

முத்தங்கொடு-த்தல் muttaṅ-koṭu-, v. < id.+. tr. See முத்தமிடு-.—intr. See முத்தந்தா-.

முத்தங்கொள்(ளு)-தல் muttaṅ-koḷ-, v. tr. < id.+. 1. See முத்தமிடு-. தாய் வாய் முத்தங் கொள்ள (பெரியபு. கண்ணப்ப. 23). 2. To touch, come in contact with; பொருந்துதல். சிலை முத்தங் கொள்ளுந் திண்டோள் (சீவக. 2312). 3. To embrace; புல்லுதல். முலை முத்தங் கொள்ள (சீவக. 2312).

முத்தண்டு mu-t-taṇṭu, n. < மூன்று+. Triple staff of an ascetic; திரிதண்டம். முத்தண்டு தொட்டிமுத்தாய் (உபதேசகா. உருத்திராக். 86).

முத்தண்ணா muttaṇṇā, n. < மூ-+அண்ணன். Brāh. 1. Elder brother; தமையன். 2. Dullard, a term of abuse; அசடன்.

முத்தந்தா-தல் [முத்தந்தருதல்] muttan-tā-, v. intr. < முத்தம்¹+. To offer one's cheek for a kiss; முத்தமிடுமாறு கன்னம் முதலியவற்றைக் காட்டுதல். என் குட்டனே முத்தந்தா (திவ். பெரியாழ். 3, 3, 2).

முத்தப்பருவம் mutta-p-paruvam, n. < id. +. A section of piḷḷai-t-tamiḻ, which describes the stage of childhood in which the child is asked to offer its cheek for a kiss; பிள்ளைத்தமிழ்ப் பருவங்களுள் குழந்தையை முத்தந் தரும்படியாகப் பாடும் பகுதி.

முத்தம்¹ muttam, n. perh. முத்து-. 1. Lip; உதடு. (பிங.) 2. Kiss; அன்பிற்குறிகுறியாக ஒருவகை யொலி யுண்டாக உதடுகளாற் பரிசிக்கை. (சூடா.) மணிவாயிடை முத்தம் தருதலும் (திவ். பெருமாள். 7, 5). 3. See முத்தப்பருவம். (இலக். வி. 806.) 4. Agricultural tract; மருதநிலம். (சூடா.)

முத்தம்² muttam, n. < muktā. 1. Pearl; முத்து. சிமிகு முத்தந் தைஇய (பதிற்றுப். 39). 2. Castor bean; முத்துக்கொட்டை. (தைலவ. தைல.) 3. A superior quality of emerald; மரகத குணங்களுளொன்று. (திருவிளை. மாணிக். 67.) 4. See முத்தாபலம், 2.

முத்தம்³ muttam, n. prob. Pāli muttam < mūtra. Penis; ஆண்குறி. அச்சுதன் முத்த மிருந் தவா காணீரே (திவ். பெரியாழ். 1, 2, 6).

முத்தம்⁴ muttam, n. < mugdha. 1. Love, endearment; பிரியம். (சூடா.) 2. Joy; மகிழ்ச்சி. (அரு. நி.)

முத்தம்^{5} muttam, n. < *mukta*. 1. See முத்தாசனம். முத்தமென விடப்பாட்டாற் சீவனியை யழுத்தி வலக்காலொத்த பாடப் பாட்டின் கீழுழுந்த வைகுதல் (பிரபோத. 44, 9). 2. Salvation; மோட்சம். எய்திய பெத்தமு முத்தமும் (திருமந். 2256). 3. Release; விடுதலை. (யாழ். அக.)

முத்தம்^{6} muttam, n. < *musta*. 1. Sedge; கோரை. (நாமதீப. 348.) 2. See முத்தக்காசு. (பாலவா. 761.)

முத்தம்^{7} muttam, n. Corr. of முற்றம். *Colloq.*

முத்தமாலை mutta-mālai, n. < முத்தம்^{2} +. See முத்துமாலை. முத்தமாலை முடிமுதல் வருட (பெருங். இலாவாண. 4, 136).

முத்தமிடு-தல் muttam-iṭu-, v. tr. < முத்தம்^{1} +. To kiss; அன்பின்அறிகுறியாக ஒருவனை யொலி யுண்டாக உதடுகளாற் பரிசித்தல்.

முத்தமிழ் mu-t-tamiḻ, n. < மூன்று +. The three kinds of literature in Tamil, viz., *iyal, icai, nāṭakam*; இயல், இசை, நாடகம் என்னும் மூவகையான தமிழ். மும்முரசு முத்தமிழும் (வள்ளுவமா. 10).

முத்தமிழ்முனிவன் muttamiḻ-muṉivaṉ, n. < முத்தமிழ் +. Agastya, as the exponent of *muttamiḻ*; [முத்தமிழையும் பரவச்செய்த இருடி] அகத்தியன். முத்தமிழ் முனிவன் கேட்ப (காஞ்சிப்பு. வீராட்ட. 6).

முத்தமிழுரியோன் muttamiḻ-uriyōṉ, n. < id. +. 1. See முத்தமிழ்முனிவன். (யாழ். அக.) 2. Bhairava; வயிரவன். (சது.)

முத்தமுண்(ணு)-தல் muttam-uṇ-, v. tr. < முத்தம்^{1} +. See முத்தமிடு-. தணிவற முத்த முண்டாள் (திருவால்வா. 45, 15).

முத்தர் muttar, n. Mound, hillock; திடர். (W.)

முத்தரை muttarai, n. < முத்து^{2} +. Waist-band made of pearls; அரையிலணியும் முத்துவடம். பிறங்கிய முத்தரை முப்பத்திருகாழ் (சிலப். 6, 87).

முத்தரையர் mu-t-taraiyar, n. perh. மூன்று + தரை. A dynasty of feudal chiefs; ஒரு சார் சிற்றரசர். பெருமுத்தரையர் பெரிதுவந் தீயும (நாலடி, 200).

முத்தலை mu-t-talai, n. < id. +. See முத்தலைக்கழு. (திவா.)

முத்தலைக்கழு muttalai-k-kaḻu, n. < முத்தலை +. The trident, as having three heads or spikes; சூலம். (பிங்.) முத்தலைக் கழுக்கள் வீசுவன (திருவிளை. திருநகர. 24).

முத்தலைவேல் muttalai-vēl, n. < id. +. See முத்தலைக்கழு. (பிங்.)

முத்தலைவேலோன் muttalai-vēlōṉ, n. < முத்தலைவேல். Bhairava; பைரவன். (சது.)

முத்தவள்ளி mutta-vaḷḷi, n. < முத்தம்^{1} + *valli*. A garland of pearls, as shaped like a creeper; முத்துக்கோத்த கொடிபோலமைந்த முத்தணி. முத்த வள்ளியொடு மும்மணி சுடர (பெருங். உஞ்சைக். 34, 203).

முத்தவி muttavi, n. < முத்து^{2} + அவி-. Castor oil; ஆமணக்கெண்ணெய். (சங். அக.)

முத்தழல் mu-t-taḻal, n. < மூன்று +. See முத்தீ. முத்தழல் வேள்வி (காசிக. சிவசன். தெய். 23).

முத்தளகி muttaḷaki, n. See முருங்கை. (சங். அக.)

முத்தன்^{1} muttaṉ, n. < *mukta*. 1. One who has attained salvation; Jīvan-mukta; முத்தி பெற்றவன். முத்தனுய்ப் பிரகாசமுறுமே (சி. சி. 4, 19). 2. Śiva, as being by nature free from bonds; [இயல்பாகவே பாசங்களினின் நீங்கியவன்] சிவபிரான். அத்தன் முத்தன் (திருக்கோ. 358). 3. Viṣṇu; திருமால். (W.) 4. Bhairava; வைரவன். (பிங்.) 5. Arhat; அருகன். (பிங்.) 6. The Buddha; புத்தன். (பிங்.)

முத்தன்^{2} muttaṉ, n. < *mugdha*. 1. One who gives pleasure, as a child; பிரியன். (பாரத. சூது. 14.) 2. Fool; மூடன். (சது. Mss.)

முத்தாகலாபம் muttā-kalāpam, n. < *muktā-kalāpa*. See முத்தாரம். (W.)

முத்தாகாரம் muttākāram, n. < *muktā-gāra*. Mother of pearl; முத்துச்சிப்பி. (W.)

முத்தாசனம் muttācaṉam, n. < *mukta* + *āsana*. A yogic posture which consists in placing the left ankle beneath the region of the anus and the right ankle under the left so placed, while the head and neck are held straight with the body, one of nine *ācaṉam*, q.v.; ஆசனம் ஒன்பதனுள் இடது கணுக்காலைக் குதத்தின் கீழும் வலது கணுக்காலை இடது கணுக்காலின் கீழும் வைத்துத் தலை முதலியவை நேர்நிற்க இருக்கும் யோகாசனவகை.

முத்தாடு-தல் muttāṭu-, v. tr. < முத்தம்^{4} + ஆடு-. [T. *muddāḍu*.] To kiss; முத்தமிடுதல். முகத்தின் முத்தாடியும் (காஞ்சிப்பு. திருக்கண். பு. 137).

முத்தாத்துக்கோல் muttāttukkōl, n. < முள் + தாற்றுக்கோல். Balance; தூக்குக்கோல். (G. Sm. D. I, i, 284.)

முத்தாத்துமா muttāttumā, *n.* <*muktātman.* Soul which has attained salvation; வீடுபெற்ற உயிர். (W.)

முத்தாதனம் muttātaṉam, *n.* <*mukta*+. 1. See முத்தாசனம். (W.) 2. A yogic posture which consists in sitting with both legs stretched out; காலிரண்டும் நீட்டியிருக்கும் யோகாசன வகை. (*தத்துவப.* 107, *உரை.*)

முத்தாதி muttāti, *n.* <*முத்தம்*[6]+prob. ஆதி. (*சங். அக.*) 1. See முத்தக்காசு. 2. Indian winter cherry. See அமுக்கிரா.

முத்தாந்தம் muttāntam, *n.* <*muktānta.* Salvation, as the highest state; முத்தியாகிய உயர் கதி. *அவமாகாச் சித்தா முத்தாந்தத்து வாழ்வர்* (*திருமந்.* 497).

முத்தாபலம் muttāpalam, *n.* <*muktā-phala.* 1. Pearl; முத்து. (இலக். *அக.*) 2. Mistletoe berry thorn. See சங்கஞ்செடி. (*மிவா.*)

முத்தாமணக்கு muttāmaṇakku, *n.* <*முத்து*[2]+. A kind of castor plant; ஆமணக்கு வகை. (*சங். அக.*)

முத்தாய் muttāy, *n.* <Arab. *muddaā.* The complainant; the plaintiff; வாதி. (C. G.)

முத்தாயலே muttāyalē, *n.* <Arab. *muddaā-alayh.* The accused; the defendant; பிரதிவாதி. (C. G.)

முத்தாயாலே muttāyālē, *n.* See முத்தாயலே. (C. G.)

முத்தாயிபாகம் muttāyi-pākam, *n.* <U. *muddaī*+. (Mus.) Finale; இராக முதலியவற்றில் முடித்துவிடும் பகுதி. *Loc.*

முத்தாரம் muttāram, *n.* <*muktā*+*hāra.* Garland of pearls; முத்துமாலை. *கவரியுங் கடகமுங் கதிர்முத் தாரமும்* (*பெருங். உஞ்சைக்.* 32, 74).

முத்தாலத்தி muttālatti, *n.* <*முத்து*[2]+. Waving balls of boiled rice coloured with saffron, as before an idol. See அன்னலத்தி. *முத்தாலத்திகொண் டெணணுயிர மடவாருழ* (*தமிழ்நா.* 240).

முத்தாலதை muttālatai, *n.* <*muktā-latā.* See முத்தாரம். (*யாழ். அக.*)

முத்தாவலி muttāvali, *n.* See முத்தாவளி. (இலக். *அக.*)

முத்தாவளி muttāvaḷi, *n.* <*muktāvalī.* (W.) 1. Garland of pearls; முத்துமாலை. 2. (Mus.) A musical mode; பண்வகை.

முத்தாளம் muttāḷam, *n.* Morning; காலை. *Nāñ.*

முத்தான்மா muttāṉmā, *n.* See முத்தாத்துமா. (W.)

முத்தானம் muttāṉam, *n.* <*uddhāna.* Oven; அடுப்பு. (*நாமதீப.* 496.)

முத்தி[1] mutti, *n.* <*முத்து-.* Kiss; முத்தம். *மணிவாயில் முத்தி தரவேணும்* (*திருப்பு.* 183).

முத்தி[2] mutti, *n.* <Pkt. *mutti* <*mukti.* 1. Release; விடுபடுகை. 2. Final beatitude or emancipation, release of the soul from metempsychosis; மோட்சம். *முத்திக்குழன்று* (*திருவாச.* 11, 12). 3. Stage in salvation, of two kinds, viz., *patamutti, paramutti;* பதமுத்தி பரமுத்தி யென்ற இருவகை முத்திநிலை. (*வேதா. சூ.* 56, *உரை.*)

முத்தி[3] mutti, *n.* Direction; திசை. (*யாழ். அக.*)

முத்தி[4] mutti, *n.* cf. *உத்தி.* (*அரு. நி.*) 1. Lakṣmī; இலக்குமி. 2. Yellow spreading spots on the breasts of women; தேமல்.

முத்திக்கை muttikkai, *n.* <*முற்றுகை.* [K. *muttige.*] Siege; அரண்வளைப்பு. (*யாழ். அக.*)

முத்திகம் muttikam, *n.* <*muktikā.* An Upaniṣad, one of 108; நூற்றெட்டுபநிடதங்களுள் ஒன்று.

முத்திசாதனம் mutti-cātaṉam, *n.* <*முத்தி*[2]+. The path of liberation or final deliverance, one of eight *camaya-patārttam*, q.v.; சமய பதார்த்தங்களில் ஒன்றன முத்திசாதனக் கருவி. (*சைவப.* 68.)

முத்திதசை mutti-tacai, *n.* <id.+. A stage when one is free from all worldly attachments; பாசபந்தத்தினின்று விடுபட்ட நிலை.

முத்திதாசாரியன் muttitācāriyaṉ, *n.* <*mukti-da*+*ācārya.* Guru who is able to secure final beatitude for his disciple; சீடனுக்கு வீடளிக்கவல்ல ஆசாரியன். (*சைவச. ஆசா.* 31, *உரை.*)

முத்திதிசை mutti-ticai, *n.* <*mukti*+. See முத்திதசை. (W.)

முத்திநெறி mutti-neṟi, *n.* <id.+. Way to final beatitude; மோட்சநெறி. *முத்திநெறி யறியாத மூர்க்கரொடு* (*திருவாச.* 51, 1).

முத்திப்பேறு mutti-p-pēṟu, *n.* <id.+. Attainment of final beatitude; மோட்சவாழ்வு. (*யாழ். அக.*)

முத்திபஞ்சாட்சரம் mutti-pañcāṭcaram, *n.* < id. +. A form of *pañcākkaram* with *praṇava;* பிரணவஞ் சேர்ந்த பஞ்சாக்கர மந்திர வகை. (*பஞ்சாக்கர.* 45, *உரை.*)

முத்திபதம் mutti-patam, *n.* < id. +. 1. The state of final beatitude; மோட்சபதவி. 2. The state of spiritual knowledge; ஞானநிலை. (*யாழ். அக.*)

முத்திமார்க்கம் mutti-mārkkam, *n.* < id. +. 1. See முத்திநெறி. 2. The course of karma; கருமவிதிமார்க்கம். (*யாழ். அக.*)

முத்திமுத்திரை mutti-muttirai, *n.* The River Tāmiraparuṇi; தாமிரபருணி. (*நாமதீப.* 525.)

முத்திமுதல் mutti-mutal, *n.* < *முத்தி*[2] +. Soul, as eligible for salvation; முத்தியைப்பெறுதற்கு முதலாகிய ஆன்மா. *முத்திமுதற்கே மோகக் கொடி படர்ந்து* (*திருவுந்தி.* 41).

முத்தியெறி-தல் mutti-y-eṟi-, *v. tr.* prob. *முத்து-* + எறி-. To remove entirely, put away; கழித்தல். *முத்தியெறிந்து விடற்கு* (*கலித.* 64).

முத்திரமம் muttiramam, *n.* Cinnamon. See இலவங்கப்பட்டை. (*சங். அக.*)

முத்திராசாலை muttirā-cālai, *n.* < *mudrā* +. Printing office; அச்சுக்கூடம். *Colloq.*

முத்திராதாரணம் muttirā-tāraṇam, *n.* < id. +. Wearing the emblems of Viṣṇu impressed on one's body; சங்க சக்கர முதலிய முத்திரைகள் சரீரத்தில் ஒற்றிக்கொள்ளுகை.

முத்திராதானம் muttirā-tāṉam, *n.* < id. +. Ceremony of initiation by branding the emblems of *caṅku* and *cakkiram* on a person's shoulders; அக்கினியிற் சூடேறப் பெற்ற சங்கசக்கர முத்திரைகளைத் தோள்களில் ஒற்றும் சடங்கு. *சாத்தி மேன் முத்திராதானம* (*பிரபோத.* 11, 11).

முத்திரி[1] muttiri, *n.* < id. 1. A kind of ear ornament, in the form of a hollow cylinder; உட்டுளையமைந்த காதணிவகை. 2. Sign, seal; அடையாளம். (*யாழ். அக.*)

முத்திரி[2]*-த்தல்* muttiri-, 11 *v. tr.* < *முத்திரி*. To seal; முத்திரையிடுதல்.

முத்திரிகை muttirikai, *n.* < *mudrikā*. Engraved signet or seal; எழுத்துப்பதிக்கப்பெற்ற மோதிரம். (W.)

முத்திருக்கஞ்செடி muttirukkañ-ceṭi, *n.* Safflower. See செந்துருக்கம். (*யாழ். அக.*)

முத்திருக்கன்செவி muttirukkaṉ-cevi, *n.* cf. *முத்தெருக்கன்செவி.* A plant. See நிலக்கடம்பு. (*மூ. அ.*)

முத்திருங்கஞ்செவி muttiruṅkañ-cevi, *n.* See முத்திருக்கன்செவி. (W.)

முத்திரை muttirai, *n.* < *mudrā* 1. Impress, mark; அடையாளம். *அசோகனை முத்திரை யோடே வரவேணு மென்கிறார* (ஈடு. *பெரியாழ்.* 1, 8, 9, *வ்யா.*). 2. Seal, signet; இலாஞ்சனை. *பொறித்த முத்திரையும் வேறுய* (*திருவாலவா.* 21, 8). 3. Stamp, as for postage, for court fees; தபால் முத்திரை முதலியன. 4. Badge of a soldier or peon; போர்ச்சேவகன் அல்லது சேவகனுக்குரிய அடையாள வில்லை. 5. Composer's name introduced at the end of a song or poem, as his mark; பதிகம், பிரபந்தம், பாட்டு முதலியவற்றின் இறுதியில் வரும் ஆக்கியோன் பெயர்க்குறிப்பு. 6. cf. *முத்திரி.* Ear ornament; காதில் அணியும் குண்டலவகை. *காதினமேற் செய்ய முத்திரையும* (*திருவாலவா.* 13, 4). 7. Hand-pose in worship; பூசை செய்யும்போது காட்டும் கையடையாளம். *திருந்த முத்திரை சிறப்பொடு காட்டி* (*பதினொ. திருக்கண். மறம. அடி*, 55). 8. (Nāṭya.) Hand-pose; கையாற் காட்டும் அபிநயாகிருதி. *இறைவன் மோனமுத்திரையைத்தருமெய்* (*திருமுரு.* 112, *உரை*). 9. The hole in a flute or pipe which is not fingered while playing; வங்கியம் நாகசுரம் வாசிக்கும்போது தொழிற்படாத துளை. (*சிலப்.* 17, 3, *உரை.*) *முத்திரையே முதலனைத்து முறைத்தானஞ் சோதித்து* (*பெரியபு. ஆனாய.* 24).

முத்திரைக்கடுதாசி muttirai-k-kaṭutāci, *n.* < *முத்திரை* +. Stamped paper; முத்திரையிட்ட பத்திரம். (C. G.)

முத்திரைக்கம்பு muttirai-k-kampu, *n.* < id. +. See முத்திரைக்கோல், 1. (W.)

முத்திரைக்கூடம் muttirai-k-kūṭam, *n.* < id. +. 1. Prison, சிறைச்சாலை. (*யாழ். அக.*) 2. Place where goods are stamped; பண்டங்களின் மேல் முத்திரையிடும் இடம். (W.)

முத்திரைக்கோல் muttirai-k-kōl, *n.* < id. +. 1. Seal; முத்திரையச்சு. (W.) 2. Wooden seal for marking a heap of grain; தானியக் குவியலிற் குறியிடுதற்குதவும் மரத்தாலியன்ற அடையாளக்கோல்.

முத்திரைக்குத்திப்பாப்பார் muttirai-kutti-p-pāppār, *n.* < id. + *குத்து-* +. Mādhva Brahmins, who impress, with sandal paste, the marks of *pañcāyutam* of Viṣṇu on different parts of their persons; சங்குசக்கர முதலிய பஞ்சாயுத அடையாளங்களைச் சரீரத்திற் சந்தனத்தாற் பதித்துக் கொள்வோரான மாத்துவப்பிராமணர். *Loc.*

முத்திரைச்சங்கு muttirai-c-caṅku, *n.* < id. +. A kind of conch; சங்குவகை. *முத்திரைச் சங்கொன் றாக* (S. I. I. ii, 275, 11).

முத்திரைச்சூடு muttirai-c-cūṭu, *n.* <id. +. Branding of animals; கால்நடைகளுக்கு இடும் சூடு. (W.)

முத்திரைச்சேவகன் muttirai-c-cēvakaṉ, *n.* <id.+. Peon wearing a badge; வில்லைச் சேவகன்.

முத்திரைத்தலை muttirai-t-talai, *n.* <id. +. Postage stamp; court fee stamp; தபாற் கட்டணம் முதலிய கட்டணத்திற்காக ஏற்பட்ட தலை பதிக்கப்பட்ட முத்திரை.

முத்திரைத்தாள் muttirai-t-tāḷ, *n.* <id. +. See முத்திரைக்கடுதாசி.

முத்திரைதானம் muttirai-tāṉam, *n.* See முத்திராதானம். (W.)

முத்திரைப்படி muttirai-p-paṭi, *n.* <முத்திரை +. Madras measure, as stamped as the standard measure; அரசாங்க அடையாளமிடப் பட்ட படி.

முத்திரைப்பல்லவம் muttirai-p-palla-vam, *n.* <id.+. A *pallavi* repeated at the end of each *patam;* இசைப்பதத்தினடிதோறும் ஒட்டிப் படிக்கும் பல்லவி. (யாழ். அக.)

முத்திரைப்பல்லவி muttirai-p-pallavi, *n.* <id.+. See முத்திரைப்பல்லவம். (W.)

முத்திரைப்பலகை muttirai-p-palakai, *n.* <id.+. Plank with some writing or mark thereon, used as a seal on a heap of grain; தானியக்குவியலுக்கு முத்திரையிடுதற்குரிய எழுத்து அல்லது அடையாளமமைந்த பலகை. (C. G.)

முத்திரைமண் muttirai-maṇ, *n.* <id.+. *Loc.* 1. Seal of earth affixed to a grain heap; தானியக் குவியலிலிடும் மண்குறி 2. Any soft substance that will hold an impression, in sealing; முத்திரையிடற்குரிய மண் முதலிய பொருள்.

முத்திரைமனிதன் muttirai-maṉitaṉ, *n.* <id.+. King's ambassador; இராசதூதன். (R.)

முத்திரைமோதிரம் muttirai-mōtiram, *n.* <id.+. Seal-ring; முத்திரையிட்ட மோதிரம். *Colloq.*

முத்திரையரக்கு muttirai-y-arakku, *n.* <id.+. Sealing wax; முத்திரைபதித்தற்கு உரிய அரக்குவகை.

முத்திரையிலாஞ்சனை muttirai-y-ilāñ-caṉai, *n.* <id.+. Impress of a seal; முத்திரைக் குறி. (W.)

முத்திரையுட்சிக்கு muttiraiyuṭ-cikku, *n.* <id.+. Defect in the impress of a coin; நாணய முத்திரையில் உள்ள கேடுவகை. (பணவிடு. 179.)

முத்திவிக்கினம் mutti-vikkiṉam, *n.* <முத்தி² +. Obstacles to salvation, three in number, viz., *aiyam, tiripu, aṟiyāmai;* முத்திக்குத் தடையுறுகளான ஐயம் திரிபு அறியாமைகள். (W.)

முத்திவிலக்கு mutti-vilakku, *n.* <id.+. See முத்திவிக்கினம். (W.)

முத்திளம் muttiḷam, *n.* Kakri-melon. See கக்கரி. (சங். அக.)

முத்திறங்குதல் muttiṟaṅkutal, *n.* <முத்து² +. Waning of pustules, in smallpox; வைசூரியில் முத்துக்கள் பால் வடிந்து மறைகை. (W.)

முத்திறமணி mu-t-tiṟa-maṇi, *n.* <மூன்று +. (Buddh.) The three objects of veneration. See திரிமணி. முத்திறமணியை . . . வணங்கி (மணி. 30, 4).

முத்தீ mu-t-tī, *n.* <id.+. 1. The three sacrificial fires, viz., *kārukapattiyam, ākava-ṉīyam, taṭciṇākkiṉi;* காருகபத்தியம், ஆகவனீயம், தட்சிணாக்கினி என்ற மூவகை வேதாக்கினி. இருபிறப் பாளர் முத்தீப் புரைய (புறநா. 367). 2. The three-fold fires of the body, viz., *utara-t-tī, kāma-t-tī, ciṉa-t-tī;* உதரத்தீ, காமத்தீ, சினத்தீ என்னும் மூவகை யக்கினி. (சூடா.) 3. Fire used in preparing medicines, of three kinds or degrees. See ஆயுர்வேதாக்கினி.

முத்தீமரபினர் muttī-marapiṉar, *n.* <முத்தீ +. Brahmins, as guardians of the sacrificial fires; [வேதாக்கினி மூன்றையும் பேணும் குலத்தவர்] பார்ப்பார். (பிங்.)

முத்து¹-தல் muttu-, *5 v. tr.* 1. To unite, join; சேர்தல். திருமுத்தாரம (சீவக. 504). 2. To kiss; முத்தமிடுதல். புதல்வர் பூங்கண் முத்தி (புறநா. 41).

முத்து² muttu, *n.* <*muktā*. 1. Pearl, one of *nava-maṇi*, q.v.; நவமணியி லொன்று. முல்லை முகைமுறுவல் முத்தென்று (நாலடி, 45). 2. Tears; கண்ணீர். பருமுத்துறையும் (சீவக. 1518). 3. Castor bean; ஆமணக்கு விதை. முத்திருக்கும் கொம்பசைக்கும் (தனிப்பா. 1, 3, 2). 4. Pock of smallpox, pustule; வைசூரிக்கொப்புளம். *Colloq.* 5. Oil-seed, as rape, castor, etc.; நெய்யுள்ள விதை. (நாமதீப. 373.) 6. Succulent seed of pomegranate; மாதுளையின் விதை. 7. Rice; அரிசி. 8. A goldsmith's weight = ⅞ *paṇa-v-eṭai;* ⅞ பண வெடைகொண்டதோர் பொன்னிறை. 9. Seeds, shells etc., used in games; ஆட்டக் காய்கள். *Loc.* 10. That which is excellent or praiseworthy; மேலானது. (யாழ். அக.)

முத்து³ muttu, *n.* <*mugdha*. 1. Beauty; அழகு. அடியாற் படியளந்த முத்தோ (திவ். இயற்.

பெரியதிருவந். 27). 2. Joy, happiness; மகிழ்ச்சி. (திவ். இயற். பெரியதிருவந். 27, வ்யா.) 3. Love, endearment; பிரியம். (W.) வேலைமுத்தோ, பிள்ளை முத்தோ?

முத்து[4] muttu, *n.* <*முத்து-*. Kiss; முத்தம். *Colloq.*

முத்து[5] muttu, *n.* A water-bird; வெண் குருகு. (அரு. நி.)

முத்துக்கடுக்கன் muttu-k-kaṭukkaṉ, *n.* <*முத்து*[2]+. Pearl ear-ring; முத்துக்கட்டிய கடுக்க னென்னுங் காதணி. (W.)

முத்துக்கண்டி muttu-k-kaṇṭi, *n.* <id.+. Pearl necklace; முத்தாலாகிய கழுத்தணிவகை.

முத்துக்கற்கம் muttu-k-kaṟkam, *n.* <id. +. (W.) 1. Oil cake of castor beans; முத்துக் கொட்டைப் பிண்ணாக்கு. 2. Medicine prepared by calcining pearls, முத்தைப்புடமிட்டுச் செய்யும் மருந்துவகை.

முத்துக்கருப்பன் muttu-k-karuppaṉ, *n.* <id.+. A village deity; ஒரு கிராமதேவதை.

முத்துக்குடை muttu-k-kuṭai, *n.* <id.+. One of the three umbrellas of Arhat; அருகனது மூன்று குடையுளொன்று. (W.)

முத்துக்குத்து-தல் muttu-k-kuttu-, *v. intr.* <id.+. 1. To reject inferior pearls which may readily break; தாழ்ந்த முத்தை நீக்கு தல். 2. To pound rice, for using it for sacred purposes, chanting mantras; கடவுட்பலிக்காக மந்திரஞ் சொல்லி அரிசி குத்துதல்.

முத்துக்குமாரன் muttu-k-kumāraṉ, *n.* <id.+. Skanda; முருகக்கடவுள். *முத்துக் குமாரனைத் தனிப்புரக்க* (குமர. பிர. முத்துக்குமார. பிள். 2).

முத்துக்குளி[1]*-த்தல்* muttu-k-kuḷi-, *v. intr.* <id.+. To dive for pearl-oysters; முத்துச் சிப்பி யெடுப்பதற்காகக் கடலுள் மூழ்குதல்.

முத்துக்குளி[2] muttu-k-kuḷi, *n.* <id.+. Pearl-fishery; நீரில் மூழ்கி முத்தெடுக்கை. (W.)

முத்துக்குறி muttu-k-kuṟi, *n.* <id.+. Divination by means of a handful of pearls; கையிலுள்ள முத்துக்களைக் கணக்கிட்டுப் பலன் சொல்லுங் குறி. *Loc.*

முத்துக்கொட்டை muttu-k-koṭṭai, *n.* <id.+. See முத்து[2], 3. (தைலவ. தைல. 124, உரை.)

முப்பத்துமூவர் mu-p-pattu-mūvar, n. < id +. The 33 celestials in four groups, viz., aṣṭa-vacukkaḷ, ēkātaca-ruttirar, tuvāta-cātittar, accuvini-tēvar; அஷ்டவசுக்கள் ஏகாதச ருத்திரர், துவாதசாதித்தர், அசுவினிதேவர் இருவர் ஆக முப்பத்துமூன்று தேவர். (பிங.) முப்பத்து மூவரம ரர்க்கு (திவ். திருப்பா. 20).

முப்பதம் mu-p-patam, n. < மூன்று +. The formula tat-tuvam-aci, as comprising three words; 'தத்துவமசி' என்னும் வாக்கியம். முப்பதப் போதாந்தமான பிரணவத்துள் (திருமந். 225)

முப்பது mu-p-patu, n. < id. + பத்து. Thirty; மூன்றுபத்து. (திவ். திருப்பா. 30.)

முப்பதுநோன்பு muppatu-nōṉpu, n. < முப்பது +. 1. Fast observed by Muhammadans daily in the month of Ramzān; ரம்ஸான் மாதத்திற் முகம்மதியர் பிரதிதினமும் கொண்டாடும் விரதம். Colloq. 2. Ceremonial observance practised by newly married Telugu girls in Tamil districts, as lasting for 30 days from the date of marriage; தமிழ் நாட்டில் வசிக்கும் தெலுங்கரில் மணம்பெற்ற நாள்முதல் பெண்கள் 30 நாள் நோற்கும் நோன்புவகை. Loc.

முப்பலம் mu-p-palam, n. See முப்பலை. (W.)

முப்பலை mu-p-palai, n. cf. triphalā. The three myrobalans. See திரிபலை. (யாழ். அக.)

முப்பழம் mu-p-paḻam, n. < மூன்று +. 1. The three fruits. See முக்கனி. (சிலப். 6, 76, உரை.) (சூடா.) 2. The three myrobalans. See திரிபலை. முப்பழ நீரபனிகளை இ (சீவக. 2356).

முப்பாட்டன்[1] mu-p-pāṭṭaṉ, n. < முன்[1] + பாட்டன். Great-grandfather; பாட்டனுக்குத் தந்தை.

முப்பாட்டன்[2] mu-p-pāṭṭaṉ, n. prob. மூன்று + பாட்டன். Grandfather's grandfather; பாட்டனுக்குப் பாட்டன். (W.)

முப்பாட்டி[1] muppāṭṭi, n. Fem. of முப் பாட்டன்[1]. Great-grandmother; பாட்டியின் தாய்.

முப்பாட்டி[2] mu-p-pāṭṭi, n. Fem. of முப் பாட்டன்[2]. Grandfather's grandmother; பாட்டனுக்குப் பாட்டி. (யாழ். அக.)

முப்பால் mu-p-pāl, n. < மூன்று +. [T. muppālu.] 1. The three divisions, aṟam, poruḷ, iṉpam; அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பகுப்புக்கள். 2. Tiru-k-kuṟaḷ, as dealing with mu-p-pāl; [முப்பாலை விரித்துக் கூறுவது] திருக்குறள். வள்ளுவர் முப்பாலாற் றலைக்குத்துத் தீர்வு

சாத்தற்கு (வள்ளுவமா. 11). 3. (Gram.) The three genders, viz., *āṇ-pāl*, *peṇ-pāl*, *ali-p-pāl*; ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்பன. அஃறிணை மருங்கின் முப்பாற்கு முரித்தே (தொல். சொல். 212). 4. The three preparations of milk, viz., *kāyc-cu-p-pāl*, *tiraṭṭu-p-pāl*, *kuḻampu-p-pāl*; காய்ச்சுப்பால், திரட்டுப்பால், குழம்புப்பால் என்ற மூன்று வகைப்பட்ட பால். (யாழ். அக.) 5. The three kinds of milk, viz., mother's milk, cow's milk, goat's milk; தாய்ப்பால், பசுவின்பால், ஆட்டுப்பால் என்னும் மூவகைப் பால். (தமிழ்விடு. 25, உரை.)

முப்பாலகர் mu-p-pālakar, *n.* < id. + பாலகன்². Children of three kinds, viz., those who drink milk alone, those who take milk and rice and those who take rice alone; பால்குடிப்பவர், பாலும் அன்னமும் உண்பவர், அன்னமாத்திரம் உண்பவர் என மூவகைப்பட்ட குழந்தைகள். (தைலவ. தைல. 117, உரை.)

முப்பாலர் mu-p-pālar, *n.* < id. + பாலன்¹. See முப்பாலகர். (தைலவ. தைல. 117.)

முப்பாழ் mu-p-pāḻ, *n.* < id. +. 1. The three forms of ruin which a land is subject to, viz., *veyiṟ-pāḻ*, *veḷḷa-p-pāḻ*, *kuṭi-p-pāḻ*; நிலத்திற் குண்டாம் வெயிற்பாழ், வெள்ளப்பாழ், குடிப்பாழ் என்ற மூவகையான கேடு. 2. The three entities, viz., *civaṉ*, *īcuvaraṉ*, *cakam*; சிவேசுவர ஜகத்துக்கள். (சங். அக.) 3. The three vacant regions believed to exist in the body; உடம்புக்குட் சூனியமான மூன்றிடம். (W.)

முப்பாற்புள்ளி mu-p-pāṟ-puḷḷi, *n.* < முப்பால் +. 1. The letter ஃ, as having three dots; ஆய்தவெழுத்து. (தொல். எழுத். 2.) 2. The three letters *kuṟṟiyalukaram*, *kuṟṟiyalikaram* and *āytam*, as written with dots; குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்ற புள்ளியுள்ள மூன்றெழுத்துக்கள். (தொல். விருத். பக். 26.)

முப்பான் mu-p-pāṉ, *n.* See முப்பது. (W.)

முப்பிடாரி mu-p-piṭāri, *n.* < id. +. A village goddess; ஒரு கிராமதேவதை.

முப்பிணி mu-p-piṇi, *n.* < id. + பிணி. See முத்தோஷம், 1, 2. (பிங்.)

முப்பிறைச்சுமை mu-p-piṟai-c-cumai, *n.* < id. + பிறை +. Whooping cough; கக்குவான். (இங். வை. 234.)

முப்பு muppu, *n.* 1. See முப்பூ. 2. A medical treatise by Agastya; அகஸ்தியரியற்றிய வாகடநூல். (மூ. அ.)

முப்புடி mu-p-puṭi, *n.* cf. *tri-puṭi*. 1. The three factors of knowledge. See திரிபுடி. (W.) 2. See முக்குணம். (யாழ். அக.)

முப்புடைக்கனி mu-p-puṭai-k-kaṉi, *n.* < மூன்று + புடை +. See முப்புடைக்காய். முப்புடைக்கனிசிதத மோதி (மீனாட். பிள்ளைத். 55).

முப்புடைக்காய் mu-p-puṭai-k-kāy, *n.* < id. + id. +. Coconut, as having three vertical sections; [மூன்று பிரிவுகளுடையது] தேங்காய். (பெரும்பாண். 364.)

முப்புரம் mu-p-puram, *n.* < id. +. The three aerial cities burnt by Śiva. See திரிபுரம். ஒகக முப்புர மோயவெரி நாவ (தேவா. 485, 5).

முப்புரமெரித்தான் muppuram-erittāṉ, *n.* < முப்புரம் +. (சங். அக.) 1. Śiva; சிவபெருமான். 2. Wiry indigo. See சிவனார்வேம்பு. 3. Worm-killer. See ஆடுதீண்டாப்பாளை.

முப்புரி¹ mu-p-puri, *n.* < மூன்று + புரி³ [T. *muppiri*, K. *muppuri*.] Cord of three strands; மூன்று நூல்சேர்ந்துத் திரித்த கயிறு. (புரிநூலொடு) முப்புரி யாக்குதலின (திருமுரு. 183, உரை).

முப்புரி² mu-p-puri, *n.* < id. + புரி⁵. See முப்புரம். (W.)

முப்புரிச்சவுக்கம் muppuri-c-cavukkam, *n.* < முப்புரி¹ +. Cloth woven from yarn of three strands; முப்புரிநூலாலமைந்த சிறிய ஆடை. *Loc.*

முப்புரிநூல் muppuri-nūl, *n.* < id. +. The sacred thread, as of three strands; பூணூல். முப்புரி நூலொடு மானுரி யிலங்கு மார்பினின் (... இயற். திருவெழு. வரி. 7).

முப்புரிநூலோர் muppurinūlōr, *n.* < முப்புரிநூல். Brahmins, as wearing the sacred thread; பார்ப்பார். (திவா.)

முப்புரிமுண்டு muppuri-muṇṭu, *n.* < முப்புரி¹ +. See முப்புரிச்சவுக்கம். *Loc.*

முப்புவனம் mu-p-puvaṉam, *n.* < மூன்று +. The three worlds, *cuvarkkam*, *pūmi*, *pātāḷam*, சுவர்க்கம், பூமி, பாதாளம் ஆகிய மூன்று உலகங்கள். (திருவிளை. தலவிசேட. 2.)

முப்புள்ளி mu-p-puḷḷi, *n.* < id. + புள்ளி. The letter ஃ, as having three dots; ஆய்தம். (இலக். அக.)

முப்பூ mu-p-pū, *n.* prob. id. + உப்பு. A salt believed to have the power of transmuting baser metals into gold, and to enable one to live 1,00,000 years; இரும்பு முதலியவற்றைப் பொன்னாக்கவும் ஓரிலக்கம் ஆண்டுகள் உயிர்வாழச் செய்யவும் வல்ல ஒரு சித்தௌஷதம்.

முப்பூப்புடம் mu-p-pūpputam, *n.* < id. +. The three modes of calcining medicines, viz., *maṇavai-p-pūpputam*, *kuḻi-p-*

pūpputam, pūpatana-p-pūpputam; மணவைப் பூப்புடம், குழிப்பூப்புடம், பூபதனப்பூப்புடம் என்ற மூவகைப் பூப்புடங்கள். (தைலவ. தைல.)

முப்பூரம் mu-p-pūram, *n.* <id.+. The three *nakṣatras*, viz., *pūram, pūrāṭam, pūraṭṭāti;* பூரம், பூராடம், பூரட்டாதி என்னும் நட்சத்திரங்கள். ஆயில் முப்பூரஞ் சோதி (சூடா. உள். 165).

முப்பேதம் mu-p-pētam, *n.* <id.+. (Phil.) The three differences, viz., *cukata-pētam, cucāti-pētam, vicāti-pētam;* சுகதபேதம், சுசாதி பேதம், விசாதிபேதம் என்ற மூன்றுவகை வேறு பாடு. (வேதா. சூ. 27, உரை.)

முப்பொருள் mu-p-poruḷ, *n.* <id.+. 1. (Śaiva.) The three fundamental entities, *pati, pacu, pācam;* பதி, பசு, பாசம் என்னும் மூன்று முதற் பொருள்கள். (சி. போ. பா. 6, 2, பக். 328.) 2. The Hindu triad. See திரிமூர்த்தி. (W.)

முப்பொழுது mu-p-poḻutu, *n.* <id.+. See முப்போது. முப்பொழு தேத்திய நால்வர்க்கு (தேவா. திருவெழுகூற. 142, வரி, 7).

முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார் muppoḻutun-tiru-mēṉi-tīṇṭuvār, *n.* < முப்பொழுது + திருமேனி +. Ādi-śaiva Brahmins, as entitled to touch the sacred idol of Śiva morning, noon and evening for anointing and decorating, one of *tokai-y-aṭiyār*, q.v.; தொகையடியாருள் காலை, உச்சி, மாலை என்ற மூன்று பொழுதுகளிலும் சிவனது திருமேனியைத் தொட்டுப் பூசனை செய்தற்குரிய ஆதி சைவப்பிராமணர். (தேவா. 738, 10.)

முப்பொறி mu-p-poṟi, *n.* <மூன்று+. The three organs of sense. See திரிகரணம். (திவா.)

முப்போது mu-p-pōtu, *n.* <id.+. The three portions of a day, viz., *kālai, ucci, mālai;* காலை, உச்சி, மாலை என்ற மூன்று வேளைகள். முப்போதுங் கடைந் தீண்டிய வெணணெயினொடு (திவ். பெரியாழ். 3, 1, 5).

முபலகு mupalaku, *n.* <U. *mublag*. Total, especially written in words instead of figures; எண்ணினாலன்றி எழுத்தினாற் காட்டும் மொத்தத்தொகை. (C. G.)

முபாதலா mupātalā, *n.* <Arab. *mubadl* Sum lent on a running account; temporary loan; கைம்மாற்றுக்கடன். (C. G.)

மும்மடங்கு mu-m-maṭaṅku, *n.* <மூன்று +. [T. *mummaḍugu*.] Three times over, three-fold; மூன்று பங்கு. மும்மடங்கு பொலிந்த முகத்தினன் (கம்பரா. காட்சிப். 19).

மும்மடி mu-m-maṭi, *n.* <id.+. [K. *mummaṭi*.] 1. See மும்மடங்கு. பதாதி மும்மடி சேனு முகமே (பிங். 6, 540). 2. Three creases in a woman's abdomen, considered as a sign of beauty; அழகின் குறியாக மகளிர் வயிற்றிற் காணப் படும் மூன்று மடிப்பு. *Loc.*

மும்மடியாகுபெயர் mummaṭi-y-āku-peyar, *n.* <மும்மடி+. (Gram.) An *āku-peyar* of treble transference, as *kār* which literally means black and figuratively means first cloud, secondly rainy season and thirdly the crop of the rainy season; கருமையென்று பொருள்படுங் கார் என்பது மேகத்தையுணர்த்திப் பின் மழைக்காலத்தையுணர்த்திப் பின் மழைக்காலத்துப் பயிரை யுணர்த்துவதுபோல ஒன்றன்மேலொன்றாக மும்முறை சென்று பொருளுணர்த்தும் ஆகுபெயர் வகை. (நன். 290, உரை.)

மும்மண்டலம் mu-m-maṇṭalam, *n.* <மூன்று+. (சங். அக.) 1. The three regions, viz., *cūriya-maṇṭalam, cantira-maṇṭalam, akkiṉi-maṇṭalam;* சூரியமண்டலம், சந்திரமண்டலம், அக்கினிமண்டலம் என்ற மூன்று பகுதிகள். 2. The triple regions, viz., *pūmi, antaram, cuvarkkam;* பூமி அந்தரம் சுவர்க்கம் என்ற மூன்று பகுதிகள்.

மும்மணி mu-m-maṇi, *n.* <id.+. 1. The three gems, viz., *puruṭa-rākam, vaiyi-ṭūriyam, kōmētakam;* புருடராகம், வயிடூரியம், கோமேதகம் என்ற மூவகை இரத்தினங்கள். மும் மணியாவன சொன்னபுருடராக முறுவயிடூரியங் கோமேதகமே (திருவாலவா. 25, 22). 2. See மும் மணிக்காசு. முத்தவள்ளியொடு மும்மணிசுடர (பெருங். உஞ்சைக். 34, 203). 3. (Buddh.) The three objects of veneration. See திரிமணி. (மணி. அரும.)

மும்மணிக்காசு mu-m-maṇi-k-kācu, *n.* <மும்மணி+. An ornament; ஆபரணவகை. மும்மணிக்காசும் பன்மணித் தாலியும் (பெருங். நரவாண. 9, 49).

மும்மணிக்கோவை mummaṇi-k-kōvai, *n.* <id.+. 1. Necklace of three strings of beads; மூன்று கோத்துள்ள கழுத்தணிவகை. (W.) 2. A poem of 30 stanzas, in which *akaval, veṇ-pā* and *kali-t-tuṟai* occur serially one after another in *antāti-t-toṭai*, one of 96 *pirapantam*, q.v.; பிரபந்தம் 96-னுள் அகவலும் வெண்பாவும் கலித் துறையும் முறையே மாறிவர அந்தாதித்தொடையாகப் பாடப்பெறும் முப்பது பாடல்களையுடைய பிரபந்த வகை. (இலக். வி. 815.)

மும்மணிமண்டலம் mummaṇi-maṇṭalam, *n.* <id.+. See மும்மண்டலம். (பொருட். நி.)

மும்மணிமாலை mummaṇi-mālai, n. <id.+. A poem of 30 stanzas in which *veṇpā*, *kali-t-turai* and *akaval* occur serially one after another in *antāti-t-toṭai*, one of 96 *pirapantam*, q.v.; பிரபந்தம் 96-னுள் வெண்பாவும் கலித்துறையும் அகவலும் முறையே மாறிவர அந்தாதித்தொடையாகப் பாடப்பெறும் முப்பது பாடல்களையுடைய பிரபந்தவகை. (இலக். வி. 820.)

மும்மதக்கோடு mummatakkōṭu, n. A mineral poison. See தாலம்பபாஷாணம். (யாழ். அக.)

மும்மதத்தன் mummatattaṉ, n. <மும்மதம். Gaṇēśa; விநாயகர். *மும்மதத்த னுலவா யையங்கரத்தன்* (சி. சி. காப்பு).

மும்மதம் mu-m-matam, n. <மூன்று+. Exudations of a must elephant, as from three places, viz., *kaṉṉa-matam*, *kai-matam*, *kōca-matam*; மதயானையின் கன்னமதம் கைமதம் கோசமதம் என்ற மூவகைப்பட்ட மதநீர். *பொழிந்திழி மும்மதக் களிற்றின் மருப்பும* (தேவா. 184, 5).

மும்மதன் mummataṉ, n. <மும்மதம். See மும்மதத்தன். (பிங.)

மும்மதில் mu-m-matil, n. <மூன்று+. 1. See முப்புரம். (பிங.) 2. (Jaina.) The three fortifications of *camavacaraṇam*, viz., *utaya-taram*, *pirīti-taram*, *kalyāṇa-taram*; சமவசரணத்துள்ள உதயதரம், பிரீதிதரம், கல்யாணதரம் என்னும் மூன்று மதில்கள். (மேருமந். 61, உரை.)

மும்மரம் mummaram, n. [T. *mummara*.] 1. Impetuosity, severity, vehemence, fierceness; கடுமை. *வியாதி மும்மரமா யிருக்கிறது.* 2. Swiftness; விரைவு. *மும்மரமாய்ப் போனான்.* 3. Pomp; ஆடம்பரம். *கலியாணம் மும்மரமாய் நடக்கிறது.* 4. Attentiveness, concentration of mind; eagerness; கவனம். *மும்மரமாய்ப் படிக்கிறான்.*

மும்மரி-த்தல் mummari-, v. intr. <மும்மரம். See மும்முரி-.

மும்மலத்தார் mummalattār, n. <மும்மலம். 1. (Šaiva.) Souls of the lowest class. See சகலர். 2. (Šaiva.) *Viññāṉakalar*, as having three of the *pañca-malam*, viz., *āṇavam*, *māyē-yam*, *tirōtāṉam*; பஞ்சமலத்துள் ஆணவம், மாயேயம், திரோதானம் என்னும் மூன்று மலமுடைய விஞ்ஞானகலர். (தத்துவப். 21, உரை.)

மும்மலம் mu-m-malam, n. <மூன்று+. 1. (Šaiva.) The three impurities of the soul which cling to it until it attains final liberation, viz., *āṇava-malam*, *kaṉma-malam*, *māyā-malam*; ஆணவமலம், கன்மமலம், மாயாமலம் என்ற மூவகை மலங்கள். *மயக்கமாயதோர் மும்மலப் பழவல்வினைக்குள்* (திருவாச. 30, 7). 2. The three out of the five impurities of the soul, viz., *āṇavam*, *māyēyam*, *tirōtāṉam*; பஞ்சமலத்துள் ஆணவம், மாயேயம், திரோதானம் என்ற மூவகை மலங்கள். 3. See முக்குற்றம். (சீவக. 96, உரை.)

மும்மறை mu-m-maṟai, n. <id.+. The three Vēdas, viz., *irukku*, *ecus*, *cāmam*; இருக்கு, எசுஸ், சாமம் என்ற மூன்று வேதங்கள்.

மும்மா mu-m-mā, n. <id.+மா[3]. The fraction $\frac{3}{20}$, as three *mās*; ௩ᩅ என்று குறியுள்ள பின்ன வெண்.

மும்மாங்காய் mu-m-māṅkāy, n. <id. Rare cases of pregnancy, believed to extend to three years; மூன்றுவருடம்வரை வெளிப்படாது நிற்பதாகிய கருப்பம். (சீவரட்.)

மும்மாமுக்காணி mummā-mukkāṇi, n. <மும்மா+. The fraction $\frac{13}{80}$, as a sum of *mummā* and *mukkāṇi*; ௩ᩅ௲ என்று குறியுள்ள பின்ன வெண்.

மும்மாமுந்திரி mummā-muntiri, n. <id.+. The fraction $\frac{49}{320}$, as a sum of *mummā* and *muntiri*; ௩ᩅ௲ என்று குறியுள்ள பின்னவெண்.

மும்மாரி mu-m-māri, n. <மூன்று+மாரி. Three showers in a month; ஒரு மாதத்திற் பெய்யும் மூன்றுமழை. *வான மும்மாரி பொழிக* (மணி. 1, 33).

மும்மீன் mu-m-mīṉ, n. <id.+மீன்[1]. The fifth *nakṣatra*. See மிருகசீருடம். (திவா.)

மும்முக்காணி mu-m-mukkāṇi, n. <id.+. See மும்மாமுக்காணி.

மும்முட்டி mu-m-muṭṭi, n. <id.+. The three plants whose names end in *muṭṭi*, viz., *ciṟṟāmuṭṭi*, *pērāmuṭṭi*, *nākamuṭṭi*; சிற்றாமுட்டி பேராமுட்டி நாகமுட்டி யென்ற செடிகள். (தைலவ. தைல. 76.)

மும்முடிச்சோழன் mu-m-muṭi-c-cōḻaṉ, n. <id.+முடி+. Rājarāja I, as wearing the crowns of the three kings of the Tamil country; [தமிழ்நாட்டு வேந்தர் மூவருக்குமுரிய முடிகளைத்தரித்த சோழன்] முதல் இராசராசன். (Insc.)

மும்முரசு mu-m-muracu, n. <id.+. 1. The three drums, viz., *niyāya-muracu*, *vīra-muracu*, *tiyāka-muracu*; நியாயமுரசு, வீரமுரசு, தியாகமுரசாகிய மூன்று முரசுகள். *மும்முரசு முத்தமிழு* (வளருவமா. 10). (கலித். 132, உரை.) 2. The three drums, viz., *vīra-muracu*, *niyāya-muracu*, *maṇa-muracu*; வீரமுரசு, நியாயமுரசு, மணமுரசாகிய மூன்று முரசுகள். (புறநா. 58, உரை.) 3. The drums of Cēraṉ, Cōḻaṉ and Pāṇḍyaṉ; சேர சோழபாண்டியர்க்குரிய மூன்று முரசுகள். (கலித். 132, உரை.)

மும்முரம் mummuram, *n.* See மும்மரம். *மும்முரமாய . . . புக்கார* (குலோத். கோ. 429).

மும்முரி-த்தல் mummuri-, *11 v. intr.* < மும்முரம். [T. *mummaramtsu.*] To rage, storm; to be violent, vehement or impetuous; உக்கிரங்கொள்ளுதல்.

மும்முறை mu-m-murai, *n.* < மூன்று +. Three times; மூன்றுதரம். *திருந்தடி மும்முறை வணங்கி* (மணி. 12, 6, உரை).

மும்மூட்சு mummūṭcu, *n.* See முமுட்சு, 1. (W.)

மும்மூடம் mu-m-mūṭam, *n.* < மூன்று +. (Jaina.) The three kinds of folly, viz., *ulōka-mūṭam, tēvatā-mūṭam, pācaṇṭa-mūṭam;* உலோகமூடம், தேவதாமூடம், பாஷண்டமூடம் என்ற மூவகை அறிவீனம்.

மும்மூடர் mummūṭar, *n.* < மும்மூடம். Downright fools; முழுமூடர். (திருநூற். 53, உரை.)

மும்மூர்த்தி mu-m-mūrtti, *n.* < மூன்று +. 1. The Hindu Triad; திரிமூர்த்தி. *பொற்பூடணா மும்மூர்த்திகளாம் விமலனாகவே* (சிவரக. கணபதிவந்தனை. 15). 2. Three medicinal stuffs. See திரிகடுகம். (தைலவ. தைல.)

மும்மூன்று mu-m-mūṉṟu, *n.* < id. +. 1. Three times three; ஒன்பது. 2. Three by three, threes; தனித்தனி மூன்று.

மும்மை mummai, *n.* < id. [K. *mūme.*] 1. The state of being three; மூன்றயிருக்குந் தன்மை. (யாழ். அக.) 2. Three, threefold; மூன்று. *தெரிமாண் டமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்* (குறள், 23, உரை). 3. The three states of existence, viz., *ummai, immai, maṟumai;* உம்மை, இம்மை, மறுமையாகிய மூவகை நிலைபேறு. (திவா.) 4. (Gram.) The three tenses, viz., *iṟappu, nikaḻvu, etirvu;* இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற மூன்று காலங்கள். *எதிர்மறை மும்மையு மேற்கும்* (நன். 145).

மும்மைத்தமிழ் mummai-t-tamiḻ, *n.* < மும்-மை +. 1. See முத்தமிழ். 2. The three sections of Tamil grammar, viz., *eḻuttu, col, poruḷ;* எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பகுதிப்பட்ட தமிழ் இலக்கணம். (மாறனலங். சிறப்புப் பாயிரம்.)

மும்மையணு mummai-y-aṇu, *n.* < id. +. Mote in a sunbeam. See திரிசரேணு. (சி. போ. பா. 1, 1, பக். 30, சுவாமிநா.)

மும்மொழி mu-m-moḻi, *n.* < மூன்று +. The three kinds of speech, viz., *paḻi-kūṟal, pukaḻ-kūṟal, mey-kūṟal;* பழிகூறல், புகழ்கூறல், மெய்கூறல் ஆகிய மூன்றுவகைப்பட்ட மொழி. (சூடா.)

முமுக்கு mumukku, *n.* See முமுட்சு, 1. (நாமதீப. 134.)

முமுட்சு mumutcu, *n.* < *mumukṣu.* 1. One who is eager for salvation; மோட்சவிச்சையுள்ளவன். *முத்தனு மவனே நாடரிய முமுட்சு* (வேதா. சூ. 14). 2. Renunciation; துறவு. (யாழ். அக.)

முமுட்சுத்துவம் mumutcuttuvam, *n.* < *mumukṣu-tva.* Desire for liberation or salvation, one of four *cātaṉa-catuttayam,* q.v.; சாதனசதுட்டயம் நான்கனுள் வீடுபேற்றின் விருப்பம். *முத்தி விருப்பதுவே வயங்கு முமுட்சுத்துவம்* (வேதா. சூ. 10).

முமுட்சுப்படி mumutcu-p-paṭi, *n.* < முமுட்சு + படி. A Vaisnava treatise by Piḷḷai-lōkācāriyar, a section of *aṣṭātaca-rahasyam;* பிள்ளைலோகாசாரியர் இயற்றிய அஷ்டாதசரஹஸ்யத்தில் ஒரு பகுதி.

முமுடம் mumuṭam, *n.* Total or complete renunciation; முழுத்துறவு. (W.)

முமூட்சு mumūṭcu, *n.* See முமுட்சு, 1. (W.)

முயக்கம் muyakkam, *n.* < முயங்கு-. 1. Embrace; தழுவுகை. *பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்* (குறள், 913). 2. Copulation; புணர்ச்சி. *முயக்கம் பெற்றவழி* (ஐங்குறு. 93, உரை). 3. Connection; uniting, joining; சம்பந்தம். *ஆணவத்தின் முயக்கமற்று* (தணிகைப்பு. நந்தி. 110).

முயக்கு muyakku, *n.* See முயக்கம். *வளியிடை போழப் படாஅ முயக்கு* (குறள், 1108). *முன்பு மாதவப்பயத்தினாலவண முயக்கமாவாா* (தணிகைப்பு. நாட்டுப். 48).

முயங்கிக்கொள்(ளு)-தல் muyaṅki-k-koḷ-, *v. intr.* < முயங்கு- +. To live together as man and wife; புருஷனும் மனைவியுமாக வாழ்தல். (W.)

முயங்கு-தல் muyaṅku-, *5 v. tr.* 1. To embrace; தழுவுதல். *முயங்கிய கைகளை யூக்க* (குறள், 1238). 2. To copulate with; புணர்தல். *அறனில்லான் மைய முயங்கியுழி* (கலித். 144). 3. To join; to cling to; பொருந்துதல். *முலையு மார்பு முயங்கணி மயங்க* (பரிபா. 6, 20). 4. To do, perform; செய்தல். *மணவினை முயங்கலில்லென்று* (சூளா. தூது. 100).

முயல்[1](லு)-தல் muyal-, *3 v. tr. & intr.* 1. To practise, persevere, make continued exertion; விடாது பற்றி ஊக்கத்தோடு செய்தல். *செய்தவ மீண்டு முயலப்படும்* (குறள், 265). 2. To take pains; வருந்துதல். *தவங்கள் முயன்று செய்தாலும்*

(தஞ்சைவா. 19). 3. To begin, undertake; தொடங்குதல். (W.)

முயல்² muyal, n. <முயல்-. War; போர். (சது.)

முயல்³ muyal, n. [K. mola.] Hare, *Lepus nigricollis*; சிறுவிலங்குவகை. கான முயலெய்த வம்பினில் (குறள், 772).

முயல்மீன் muyal-mīn, n. prob. முயல்³+. A sea-fish; கடல்மீன்வகை.

முயல்வலி muyal-vali, n. <id.+. [M. *muyalvalippu*.] Epilepsy. See முசல்வலிப்பு. பெருவியாதி முயல்வலி பீனசம (குற்குற். தல. மந்தமா. 102).

முயல்வாதம் muyal-vātam, n. <id.+. See முயல்வலி. *Loc.*

முயல்வு muyalvu, n. <முயல்-. Endeavouring, persevering; exercising; effort; முயலுகை. முயல்வா லளித்த நின்னருளால் (ஞானவா. இட்ச. 10).

முயலகன் muyalakan, n. <முயல்³. 1. A Bhūta over whose body Naṭarāja dances; நடராசப்பெருமான் ஏறி நடிக்கும் பூதம். மூடாய முயலகன் (தேவா. 878, 3). 2. See முயல்வலி. மன்னு பெருமபிணியாகும் முயலகன் வந்தணைவுற (பெரியபு. திருஞான. 311).

முயலடி muyal-aṭi, n. <முயல்³+. (Erot.) Nail mark resembling a hare's foot, made on the body of a woman, during sexual union, one of six *naka-k-kuṟi*, q.v.; கலவியில் நிகழும் நகக்குறி ஆறனுள் மகளிரின் அவயவத்தில் முயலடி போன்று ஆடவர் நகத்தினூற் பதிக்கும் அடையாளம். முயலடி யென்னவே மொழிய வேணமொல் (கொக். கோ. 5, 61).

முயலாக்கிரம் muyalākkiram, n. <*musalāgra*. Head of a pestle; உலக்கைத்தலை. (யாழ். அக.)

முயலின்கூடு muyalin-kūṭu, n. <முயல்³+கூடு. See முயற்கூடு. (சூடா.)

முயலுப்பு muyal-uppu, n. perh. id.+. Glass-gall; வளையலுப்பு. (மூ. அ.)

முயலை muyalai, n. See முசலை. (J.)

முயற்களங்கம் muyar-kaḷaṅkam, n. <முயல்³+. See முயற்கறை. (W.)

முயற்கறை muyar-kaṟai, n. <id.+. Spots on the moon, as like a hare; சந்திரனிடத்துள்ள களங்கம். முயற்கறை மதிதவழ் முன்றிற் குன்றுகள (கம்பரா. சேது. 10).

முயற்காது muyar-kātu, n. Fly-nut; இருபுறமும் காதுடைய மரைவகை. *Mod.*

முயற்கூடு muyar-kūṭu, n. <முயல்³+. Moon; சந்திரன். (பிங.) முயற்கூடு கணடு சாலத் தாம் பனிக்கும் பொய்கைத் தாமரை (சீவக. 2284).

முயற்கொம்பு muyar-kompu, n. <id.+. Lit., hare's horns. [முயலின் கொம்பு] Non-existent thing, unreality; இல்பொருள். கான்முயற் கொம்பே யென்கோ (தாயு. தேன்முகம. 1).

முயற்கோடு muyar-kōṭu, n. <id.+. See முயற்கொம்பு. (W.)

முயற்சி muyarci, n. <முயல்-. 1. Effort, exertion, activity, application; பிரயத்தனம். முயற்சி மெய்வருத்தக் கூலிதரும் (குறள், 619). 2. Perseverence, diligence, industry; ஊக்கம். (சூடா.) 3. Employment; வேலை. உனக்கு முயற்சி என்ன? 4. Performing religious ceremonies, of two kinds, viz., *cāttira-muyarci*, *acāttira-muyarci*; சாத்திரமுயற்சி அசாத்திரமுயற்சி என்று இருவகையாகச் சடங்குகளைச் செய்கை. (W.)

முயற்சி-த்தல் muyarci-, 11 v. tr. <முயற்சி. See முயல்-. *Colloq.*

முயற்செவி muyar-cevi, n. <முயல்³+. [M. *muyalcevi*.] Hare's-ear, shrub, *Emilia sonchifolia*; செடிவகை. (M. M. 339.)

முயற்செவிக்கள்ளி muyar-cevi-k-kaḷḷi, n. <id.+செவி+. Five-tubercled spurge. See இலைக்கள்ளி, 1. (யாழ். அக.)

முயற்சை muyarcai, n. Corr. of முயற்சி. See முயற்சி, 1, 2.

முயற்புல் muyar-pul, n. prob. முயல்³+. Hariallı grass. See அறுகு, 1. (மூ. அ.) (M. M. 349.)

முயற்றி muyarri, n. See முயற்சி, 1, 2. முயற்றியா விடாகள் வந்தால் (தேவா. 1104, 9).

முயற்றிசை muyarricai, n. <முயல்³+திசை². The north-eastern quarter, as the region of the hare; வடகீழ்த்திசை. (W.)

முயற்று muyarru, n. See முயற்சி, 1, 2. முயற்றின்மை யின்மை புகுத்திவிடும (குறள், 616).

முயன்மாக்கம் muyan-mākkam, n. <முயல்³+. A pace of horse. See சசகதி. (திருவாலவா. 28, 58.)

முயனோய் muyanōy, n. <id.+நோய். See முயல்வலி. (கூரமபு. நிதநியகன்ம. 10.)

முயிற்றுப்புல் muyirru-p-pul, n. <முயிறு+. Ant-grass, *Pommereulla*; புல்வகை. (மூ. அ.)

முயிற்றெறும்பு muyirrerumpu, n. <id.+. See முசிறு, 1.

முயிறு muyiṟu, n. See முசிறு, 1. முயிறுமூசு குடம்பை (நற். 180).

முரகரி murakari, n. < Mura-hari. See முராந்தகன். (சங். அக.)

முரங்கினம் muraṅkiṉam, n. Pepper; மிளகு. (சங். அக.)

முரச்சு-தல் muraccu-, 5 v. tr. Caus. of முரஞ்சு. To accomplish, make ready; முற்றுவித்தல். முரசுசெய முரச்சி (பதிற்றுப. 44, 16).

முரசக்கொடியோன் muraca-k-koṭiyōṉ, n. < முரசம் +. Dharmaputra, as having the emblem of a drum on his banner; [முரசத்தைக் கொடியிலுடையவன்] தருமன். (பிங்.)

முரசகேது muraca-kētu, n. < muraja-kētu. See முரசக்கொடியோன். கேட்டிநீ முரசகேது (பாரத. அருச்சுனன்றவ. 16).

முரசபந்தம் muraca-pantam, n. < muraja-bandha. A kind of cittira-kavi; மிறைக்கவி வகை. (தண்டி. 96, உரை.)

முரசபலம் muraca-palam, n. < muraja-phala. Jack-tree. See பலா[1]. (யாழ். அக.)

முரசம் muracam, n. < muraja. 1. Drum, tabour; பறைப்பொது. (சூடா.) ஆனக முரசஞ் சங்க முருட்டொடு மிரட்டவாடி (கம்பரா. களியாட். 3). 2. A drum of the agricultural tracts; மருத நிலப்பறைவகை. (பிங்.) 3. War drum; போர்ப் பறை. முரச மிடைப்புலத் திரங்க வாரமர் மயங்கிய ஞாட்பில் (புறநா. 288).

முரசல் muracal, n. perh. முரஞ்சு-. That which is brittle; ஒடியக்கூடிய முருடுள்ளது. இந்த வெற்றிலை முரசல். Loc.

முரசவாகை muraca-vākai, n. < முரசம் +. (Puṟap.) Theme describing the ceremony of offering oblations to the vīra-muracu in a king's palace; அரசனது மாளிகையிற் பலிபெறும் வீரமுரசினுடைய தன்மையைக் கூறும் புறத்துறை. (பு. வெ. 8, 4.)

முரசவுழிஞை muraca-v-uḻiñai, n. < id. +. (Puṟap.) Theme describing the vīra-muracu being decorated with a garland of uḻiñai flowers made of gold and being offered goat-sacrifice; பொன்னாலே செய்த உழிஞைமாலை யணிந்து ஆடுவெட்டியிடும் பலியை நுகரும் வீரமுரசின் நிலைமையைக் கூறும் புறத்துறை. (பு. வெ. 6, 4.)

முரசறை-தல் muracaṟai-, v. intr. < முரசு[2] +. 1. To announce by beat of drum; யாவரும் அறியப் பறையடித்துச் சொல்லுதல். 2. To proclaim; வெளியிடுதல். அருமறைகள் முரசறையவே (தாயு. திருவருள. 3).

முரசு[1] muracu, n. The gums; பல்லினடித் தசை. (J.)

முரசு[2] muracu, n. < முரசம். 1. See முரசம். இடியெனு முழங்கு முரசின் (புறநா. 17). 2. The 26th nakṣatra. See உத்திரட்டாதி. (திவா.)

முரசுகட்டில் muracu-kaṭṭil, n. < முரசு[2] +. Dais for the royal drum; அரசர்க்குரிய முரசு வைக்கும் ஆசனம். (புறநா. 50, தலைப்பு.)

முரசுயர்த்தோன் muracuyarttōṉ, n. < id. + உயர்[2]-. See முரசக்கொடியோன். முரசுயர்த் தோ 'புனதருளுக் கஞ்சினேனே (பாரத. கிருட்டிணன்றூ. 13).

முரசுவைத்தல் muracu-vaittal, n. < id. +. Possessing or being allowed to keep drums, as a paraphernalia; பேரிகையுடன் செல்லும் மரியாதையுடைமை. (W.)

முரசை muracai, n. < Murajā. Wife of Kubera; குபேரன் மனைவி. (அபி. சிந்.)

முரஞ்சு[1]-தல் murañcu-, 5 v. intr. 1. To mature; to be old, ancient; முதிர்தல். முரஞ்சன் முதிர்வே (தொல். சொல். 333) 2. To gain strength; வலிபெறுதல். நோயுடல் முன்செயல் முரஞ்சியதெவண (ஞானா. 59). 3. To be full or abundant; நிரம்புதல். பூண்களெல்லா முரஞ்சொளி கான்று மின்ன (காஞ்சிப்பு. தீர்த்த. 89).

முரஞ்சு[2] murañcu, n. < முரஞ்சு-. 1. Maturing; முதிர்கை. முரஞ்சுகொண் டிறைஞ்சின வலங்குசினைப் பலவே (மலைபடு. 144). 2. Rock, ledge; பாறை. (சூடா.)

முரட்கை muraṭkai, n. Kali verse. See முறற்கை, 3. (சது.)

முரட்டடி muraṭṭaṭi, n. < முரடு +. Rough, rude, reckless, lawless behaviour; இணக்கமற்ற குணம். முரட்டடித் தவத்தக்கன்றன் வேள்வி (தேவா. 710, 5).

முரட்டாட்டம் muraṭṭāṭṭam, n. < id. +. See முரட்டடி. (யாழ். அக.)

முரட்டுக்கழுத்து muraṭṭu-k-kaḻuttu, n. < id. +. 1 Stiff neck, as of an ox not broken to the yoke; நுகம்பூணா எருத்தின் கழுத்து. (W.) 2. See முரட்டடி. (யாழ். அக.)

முரட்டுக்குணம் muraṭṭu-k-kuṇam, n. < id. +. See முரட்டடி. (W.)

முரட்டுத்தனம் muraṭṭu-t-taṉam, n. < id. +. See முரட்டடி.

முரட்டுப்பாட்டு muraṭṭu-p-pāṭṭu, n. <id. +. *Loc.* 1. Music harsh to the ear; இனிமையற்ற இசைப்பாடல். 2. Melody difficult to be sung; அரிதிற்பாடும் பாட்டு.

முரட்டுப்பெண் muraṭṭu-p-peṇ, n. <id. +. Obstinate, unyielding woman; பிடிகோடாப் பெண். *முரட்டுப்பெண்ணும சுருட்டுபெபாயும்.*

முரட்டோலை muraṭṭōlai, n. <id.+ஓலை. Uneven strip of palm-leaf; வளைந்திருக்கும் ஓலை முறி. (W.)

முரட்பயம்பு muraṭ-payampu, n. <முரண் +. Pit or trench in an uneven tract; ஏற்றிழிவையுடைய நிலத்திலுள்ள குழி. *பரன்முரட் பயமபிடை* (சீவக. 1900).

முரடன் muraṭaṉ, n.<முரடு. [K. *morada.*] 1. Rude man; மரியாதை தெரியாதவன். 2. Obstinate man; பிடிவாதக்காரன். 3. See முருடன், 3.

முரடு muraṭu, n. <முருடு. 1. Roughness, unevenness; ruggedness; கரடு. *முரட்டுக்கட்டை.* 2. Knob or knot, as in timber; மரக்கணு. 3. Joint of the body; சரீரத்தின் மூட்டு. (W.) 4. Ill-temper, wildness, rudeness; மரியாதையின்மை 5. Obstinacy; பிடிவாதம். 6. Largeness, bigness; பருமன். *முரட்டுப் பாம்பு.*

முரண்¹-தல் [முரண்டல்] muraṇ-, 7 v. intr. To be at variance; to be opposed; பகைத்தல். *முரணடு மாய்க்கவே* (பாரத. குரு. 49).

முரண்² muraṇ, n. <முரண்-. [M. *muran.*] 1. Variance, opposition; perversity; மாறுபாடு. *கடுமுரண முதலைய நெடுநீ ரிலஞ்சி* (புறநா. 37). 2. Spite, hatred; பகைமை. (திவா.) *முரணியோரா முரணடப* (கலித். 132). 3. Fight, battle; போர். (திவா.) 4. See முரண்டொடை. (தொல். பொ. 407.) 5. Strength; வலிமை. (திவா.) 6. Greatness; பெருமை. (மாறனலங். 265, உதா. 749.) 7. Roughness; stubbornness; முருட்டுக் குணம். (W.) 8. Fierceness; கொடுமை. (W.) 9. A flaw in rubies; மாணிக்கக்குற்றங்களுள் ஒன்று. (திருவாலவா. 25, 14.)

முரண்டன் muranṭaṉ, n. <முரண்டு. 1. Cross-tempered, quarrelsome person; மாறுபாடுள்ளவன். (சங். அக.) 2. Obstinate person; பிடிவாதக்காரன். *Loc.* 3. Impatient person; பொறுமையில்லாதவன். (யாழ். அக.) 4. Hasty, impetuous person; அவசரக்காரன். (யாழ். அக.)

முரண்டு¹-தல் muranṭu-, 5 v. intr. <முரண்-. *Colloq.* 1. To be obstinate, persistent; பிடிவாதமாதல். 2. To be opposed, cross-grained; மாறுபடுதல்.

முரண்டு² muranṭu, n. <முரண்டு-. 1. Persistence, obstinacy; பிடிவாதம் *Colloq.* 2. Opposition, variance; மாறுபாடு. (நாமதீப. 628.) (யாப். வி. 3, உரை, பக். 38.) 3. Disagreement; அமையாமை. (யாழ். அக.) 4. Unyielding nature; வளையாமை. (யாழ். அக.)

முரண்டொடை muraṉ-toṭai, n. <முரண் +. (Pros.) A mode of versification in which there is antithesis of words or ideas, one of five *toṭai*, q.v.; தொடையைந்தனுள் மொழியானும் பொருளானும் மறுதலைப்படப் பாட்டுந் தொடுப்பது. (இலக். வி. 723, உரை.)

முரண்படு-தல் muraṇ-paṭu-, v. intr. <id. +. To be perverse; மாறுபடுதல். (யாழ். அக.)

முரண்மொழி muraṇ-moḻi, n. <id.+. 1. (Rhet.) Contrast, antithesis; பொருள் மாறுபடுஞ் சொல். 2. Contradictory statement; எதிர்மொழி (யாழ். அக.)

முரண்விளைந்தழிவணி muraṇ-viḷain-taḻivaṇi, n.<id.+. (Rhet.) A figure of speech in which there is an apparent contradiction; மேனோக்கில் மாறுபாடு தோன்றக் கூறும் அணி.

முரண்வினைச்சிலேடை muraṇ-viṉai-c-cilēṭai, n. <id.+. (Rhet.) A figure of speech which consists in a *cilēṭai* in verbs relating to persons or objects of opposite characteristics; மொழியப்பட்ட வினைப்பொருள் முரணச் சிலேடைப்படுத்தும் அணிவகை. (மாறனலங். 152.)

முரணணி muraṇ-aṇi, n. <id.+. (Rhet.) A figure of speech in which words or ideas are used in antithesis; சொல்லேனும் பொருளேனும் முரண அமையும் ஓரலங்காரம். (சீரசே. அலங். 12.)

முரணர் muraṇar, n. <முரணு-. Enemies; பகைவர். *அரணையுறு முரணைர பலா* (தேவா. 118, 7).

முரணு-தல் muraṇu-, 5 v. <முரண்-. intr. To be at variance; மாறுபடுதல். *நீ முரணிய நீரும்* (புறநா. 2).—tr. (Arith.) To multiply; பெருக்குதல். *இரு திணையும பொதுவுமான மூன்றினையும் முரணப் பதினெட்டாம்* (நன். 269, மயிலை.).

முரதம் muratam, n. <*mura-da.* Viṣṇu's conch; பாஞ்சசன்னியம். (W.)

முரப்பா murappā, n. <Hind. *murabbā.* Preserve, jam; பாகில் ஊறவைத்த தின்பண்டம்.

முரப்பு murappu, n. cf. முரம்பு. Roughness; கைக்கு மென்மையற்றுத் தோன்றுந்தன்மை. *தோல் முரபபேறி* (அசுவசா. 66).

முரபா murapā, n. See முரப்பா. *இஞ்சி முரபா.*

முரம் muram, *n.* < முரம்பு. Granite crushed to dust for road-making; கருங்கற்பொடி. (C. E. M.)

முரம்பு murampu, *n.* cf. முரப்பு. [T. *moramu.*] 1. Mound of gravel or stone; பருக்கைக் கல்லுள்ள மேட்டுநிலம். *முரம்பு கண்ணுடைந்த நடவை* (மலைபடு. 432). 2. Mound, elevation; மேடு. (சூடா.) 3. Rock; பாறை. (பிங்.) 4. Rough, hard ground; வன்னிலம். *பரன்முரம்பாகிய பயமில கானம்* (அகநா. 5). 5. Backwater, creek, small arm of the sea; கழி. (சூடா.) 6. Salt-pan; உப்பளம். (யாழ். அக.)

முரமுரவெனல் muramuravenal, *n.* See முரமுரெனல்.

முரமுரெனல் muramurenal, *n.* Onom. expr. of (a) foaming, effervescing; நுரைத்தற் குறிப்பு. *முரமுரெனவே புளித்ததமோரும்* (தனிப்பா. i, 103, 34): (b) crackling in the mouth; வாய்க்குள் கரகரப்பாயிருத்தற்குறிப்பு: (c) being clean and neat; சுத்தமாயிருத்தற்குறிப்பு.

முரரை murarai, *n.* prob. முரடு + அரை. Hard, stout trunk of a tree; மரத்தின் முருட்டரை. *முரரை முழுமுதல் துமியப் பண்ணி* (பதிற்றுப. 5-ஆம் பத. பதி.).

முரல்¹(லு)-தல் mural-, *3 v.* cf. *murala.* [K. *moral.*] *intr.* 1. To make sound; ஒலித்தல். *மதுகரமுரலுந் தாரோனை* (திருவாச. 5, 16). 2. To cry; கதறுதல். *குடுமிக் கூகை குராலொடு முரல* (மதுரைக். 170).—*tr.* To sing; பாடுதல். *ஏழ்புணர் சிறந்திசை முரல்பவர்க்கல்லதை* (கலித். 9).

முரல்² mural, *n.* < *murala.* Needle-fish, *Syngnathus;* மீன்வகை. (சாமதீப. 271.)

முரல்வு muralvu, *n.* < முரல்-. Soft sound, as of a lute; யாழின் மெல்லோசை. *வண்டின் றொழுதி முரல்வு* (பரிபா. 8, 36).

முரலல் muralal, *n.* < id. [T. *mora,* K. *more,* M. *muralu.*] 1. Sounding; ஒலிக்கை. (W.) 2. Confused noise; கலப்போசை. (சது.) 3. High pitch; எடுத்தலோசை. (சூடா.)

முரலி murali, *n.* See முரளி, 1. (W.)

முரவம் muravam, *n.* prob. முரல்-. 1. A drum; பறைவகை. *முரவமொந்தை* (தேவா. 385, 5). 2. Noise; reverberation; resonance; முழக்கம். *முரவம்படு மண்ணுமலை* (தேவா. 1025, 5).

முரவு¹ muravu, *n.* < முரி¹-. Break; broken condition, as of the mouth of a pot; முரிவு. *முரவு வாய்க் குழிசி* (பெரும்பாண். 99).

முரவு² muravu, *n.* See முரவம், 1. *முரவுந் தூம்பு முழங்குபு துவைப்ப* (பெருங். மகத. 25, 16).

முரவை muravai, *n.* < முரி¹-. Streaks in unpolished rice; அரிசியிலுள்ள வரி. *முரவை போகிய முரியா வரிசி* (பொருந. 113).

முரள் mural, *n.* prob. முரல். A shell-fish; இப்பிவகை (தொல். பொ. 584.)

முரளி murali, *n.* < *muralī.* 1. Flute or pipe made of bamboo; வேய்ங்குழல். (சது.) 2. A small flute, blown by the nose; மூக்கால் வாசிக்குஞ் சிறுகுழல். (W.)

முரளீதரன் muralītaran, *n.* < *muralī-dhara.* Kṛṣṇa, as holding a flute; [வேய்ங் குழல் கொண்டவன்] கண்ணன்.

முரற்கை murarkai, *n.* < முரல்-. 1. Sound; ஒலி. *பாணர் நரம்புளர் முரற்கைபோல* (ஐங்குறு. 402). 2. See முரற்சி, 2. *பாணர் நயம்படு முரற்கையின்* (ஐங்குறு. 407). 3. *Kali* verse; கலிப்பா. (தொல். பொ. 382.) 4. (Mus.) A time-measure; தாள வகை. *இன்புறு முரற்கை நும்பாட்டு* (மலைபடு. 390).

முரற்சி¹ murarci, *n.* < id. 1. Sound; ஒலி. *கொளைநிறை தீங்குழல் முரற்சியா* (கலித். 106). 2. Song; பாட்டு. *நரம்பின் முரலும் நயம்வரு முரற்சி* (மதுரைக். 217).

முரற்சி² murarci, *n.* < முரணு. 3. Cord; கயிறு. *பெண்டிர் கூந்தல் முரற்சியால்* (பதிற்றுப். 5-ஆம் பத. பதி.)

முரற்று-தல் murarru-, *5 v. intr.* < முரல்-. 1. To make sound; ஒலித்தல். *இடபமோ முரற்ற வினறி* (கம்பரா. மீட்சி. 308). 2. To cry; கதறுதல். *அரற்றியு மயங்கியு முரற்றியு முயிர்த்தும* (பெருங். இலாவாண. 19, 208). (பிங்.)

முரற்றுமம் murarrumam, *n.* Water-pot; குடம். (அக. நி.)

முரன் muran, *n.* < *Mura.* An Asura killed by Viṣṇu; திருமாலால் வதஞ்செய்யப்பட்ட ஓர் அசுரன். *முரனை சிரமவை காலனொடுகூட* (திவ். திருச்சந். 104).

முரன்றுபாடு-தல் muranru-pāṭu-, *v. tr.* < முரல்- +. To elaborate a musical note or melody; ஆலாபனஞ் செய்தல். *களிவண்டு முரன்று பாட* (சீவக. 1959).

முராந்தகன் murāntakan, *n.* < *Murāntaka.* Viṣṇu, as the slayer of Muran; [முரனென்ற அசுரனைக் கொன்றவன்] திருமால். *மற்றை முராந்தகன் முனிவன் முன்னு* (கம்பரா. பிணிவீ. 115).

முராரி murāri, *n.* < *Murāri.* See முராந்தகன். *விடுத்தனு முராரி யேகி* (கந்தபு. ததீசி. யுத். 39).

முரி¹-தல் muri-, 4 v. intr. [K. muri.] 1. To break off, snap off; ஒடிதல். (சூடா.) 2. To perish; to be ruined; கெடுதல் இடைக்கண் முரிந் தார் பலர் (குறள், 473). 3. To be scattered; சிதறு தல். பஞ்சினம் புகைமுரிந் தெழுந்தென விண்ணத லமர (கல்லா. 7). 4. To go wrong; தவறுதல். முரி யுங்காலைத் தெரிய மற்றதிற் றட்டினள் . . . எழுபி (பெருங். வத்தவ. 12, 99). 5. To be defeated; தோல்வியுறுதல். முற்றிய வமராசேனை முரிந்தன (விநாயகபு. 34, 15). 6. To separate, leave; நீங்கு தல். (சீவக. 372) 7. To lose one's position; நிலை கெடுதல். இடை முரிந்து வேந்தனும் வேந்து கெடும் (குறள், 899). 8. To be spoiled; துணங் கெடுதல். ஒழுகுபால் கதிர்வெயிற் படமுரிந்து (திருச்செந்தூர். பிள்ளைத். செங்கீரை. 1). 9. To bend; வளைதல். முரிந்து கடைநெரிய வரிந்த சிலைப்புருவமும் (மணி. 18, 161) 10. To lack in strength; to be gentle, as in gait; தளர்தல். முரிநடைமடந்தையர் முழவொலியும் வழங்கொலியும் (திருவிளை. கருவூ 5, 10).

முரி²-த்தல் muri-, 11 v. tr. Caus of முரி¹-. [T. muriyu, M. murikka.] 1. To break off, snap off; ஒடித்தல். நன்சிலை முரித்திட்டமையை வாடினன பிடித்துநின்றான் (சீவக. 2185). 2. To ruin; அழித்தல். மதிலொடு வடவாயிலை முரித்து (திருவாலவா. 24, 4). 3. To defeat; தோற்கச் செய்தல். (யாழ். அக.) 4. To manage, as a business; நடத்துதல். (W.)

முரி³ muri, n. < முரி¹-. [T. K. M. Tu. muri.] 1. Piece, bit, half; துண்டு. 2. Broken rice; நொய்யரிசி. குத்திய வரிசி யெல்லா முரியறக் கொழிக்கவாரீர் (தக்கயாகப். 736). 3. Anything short or dwarfish; முழுதிற் குறைவானது. மக் கண் முரியே (கலித். 94). 4. Scratch, blemish; சிதைவு. (சிலப். 25, 146, அரும்.) 5. Curve, bend; வளைவு. முரியா ரளகத் தடாதகை (திருவிளை. பயகர. 8). 6. Written bond. See முறி, 4. Loc. 7. (Mus.) The closing section of a musical composition; இசைப்பாவில் இறுதிப் பகுதி. (சிலப். 6, 35, உரை.) 8. The *curitakam* at the close of a poem in *nāṭaka-t-tamiḻ;* நாடகத்தமிழின் இறுதியில் வருஞ் சுரிதகம். (தொல். பொ. 444, உரை.)

முரிகம் murikam, n. < முரி. [T. muri.] Woollen blanket; மயிர்ப்படாம். (சூடா.)

முரிகிரந்தி muri-kiranti, n. < முரி¹-+. Disease becoming incurable because of the non-observance of the prescribed diet; பத்திய முறிந்ததால் தீராததாகும் நோய். (W.)

முரிகிரந்திப்படு-தல் murikiranti-p-paṭu-, v. intr. < முரிகிரந்தி+. To grow worse from neglect of the prescribed diet; பத்தியக்குறைவால் வியாதி மிகுதல். (W.)

முரிச்சாத்து muri-c-cāttu, n. < முரி+. (Mus.) A kind of *cāttu-vari;* சாத்துவரிப்பாட்டு வகை. (சிலப். கானல். அரும.)

முரித்தல் murittal, n. (அரு. நி.) 1. Laughter; நகை. 2. Shining; இலங்குகை.

முரிநிலை muri-nilai, n. < முரி+. Closing part of a song; இசைப்பாவில் இறுதியிற் பாடுந் தாளம். (சிலப். 6, 35, உரை.)

முரிப்பு murippu, n. < முரி²-. [T. murippu.] 1. Breaking, bruising, cracking from external force; முரிக்கை. (W.) 2. Hump of an ox; திமில். (திவா.)

முரிமுரி¹-தல் muri-muri-, v. intr. < முரி¹- +. To bend, curve; வளைதலைச் செய்தல். புருவ மும முரிமுரிந்தவே (சீவக. 2310).

முரிமுரி² murimuri, n. Nux vomica. See எட்டி. (சங். அக.)

முரியல் muriyal, n. < முரி¹-. 1. Bit, fragment; துண்டு (யாழ். அக.) 2. That which is brittle; எளிதில் முரிவது.

முரிவரி muri-vari, n. < முரி+. Closing part of a dance-song, வரிப்பாட்டுவகை. (சிலப். 3, 16, அரும்.)

முரிவாய் muri-vāy, n. < முரி¹-+. 1. Opening made in a wall, used as entrance; இடித்து உண்டாக்கின வாசல். கண்டவெயின் முரி வாயாற் கொண்டு புக்கான் (திருவாலவா. 24, 4). 2. Opening made in house-breaking; கன்னவாயில். களவுபோகினற வென்றுந் தாபிய முரிவாயில்லை (திரு வாலவா. 55, 5). 3. Pitted pial; முரிந்த குறடு. முரி வாய முற்றம் (புறநா. 261).

முரிவு murivu, n. < id. [K. murivu.] 1. Breaking, snapping; ஒடிகை. (யாழ். அக.) 2. Contracting; சுருக்குகை. புருவமுரிவு கண்டஞ்சி (முதுதொள். களம்). 3. Leaving, separation; நீங்குகை. இளையார் மார்ப முரிவிலரொழுகி வாழும் (சீவக. 372). 4. Trouble, difficulty; வருத்தம். பாவைமார் முரிவுற்றார்களின் மூர்ச்சனை செய்பவால் (சீவக. 1627). 5. Fate; ஊழ். (அரு. நி.) 6. Greatness; பெருமை. (அரு. நி.) 7. Fold; மடிப்பு. (யாழ். அக.) 8. Laziness; சோம்பு. (அரு. நி.)

முருக்கம்புளி murukkam-puḷi, n. < முருக்கு- +. Citric acid; எலுமிச்சம்புளிப்பு. (அமுதாகரம்.)

முருக்கள்ளி muru-k-kaḷḷi, n. prob. முருக்கு +. Prickly climbing cockspur. See சூரிண்டு. (L.)

முருக்கன்மரம் murukkaṉ-maram, n. < முருக்கு+. Bengal kino tree, *Butea frondosa;* மரவகை.

முருக்கிஷம் murukkisam, n. See முருங்கிஷம். (சங். அக.)

முருக்கு[1]-தல் murukku-, 5 v. tr. Caus. of முருங்கு-. 1. To destroy, crush, ruin; அழித்தல். விறல்வேன் மன்னர் மன்னெயில் முருக்கி (சிறுபாண். 247). 2. To kill; கொல்லுதல். (திவா.) எற்றி முருக்குவ ரரக்கர் முன்பர் (கம்பரா. மகரக். 12). 3. To break in pieces; முறித்தல். காப்புடைய வெழு முருக்கி (புறநா. 14). 4. To melt; உருக்குதல். (W.) 5. To dissolve; கரைத்தல். (W.)

முருக்கு[2] murukku, n. < முருக்கு-. Killing; கொலை. (அக. நி.)

முருக்கு[3] murukku, n. 1. See முள்ளுமுருக்கு, 1. 2. Palas-tree. See பலாசம்[1], 4. முருக்குத்தாழ் பெழிலிய நெருப்புறழ் அடைகரை (பரிபா. 23, 20). 3. Sour lime, எலுமிச்சை. (தைலவ. தைல.) 4. Italian lemon; கொடியெலுமிச்சை. (W.) 5. White fig; தருது. (குறிஞ்சிப. 73, உரை.)

முருக்குத்தடி murukku-t-taṭi, n. prob. முறுக்கு+. A piece of wood, used in climbing palm-trees; பனையேறிகள் பனைமுட்டிற் சார்த்தி மிதித் தேறுவதற்கு வைக்கும் தடி. Nāñ.

முருகக்கடவுள் muruka-k-kaṭavul, n. < முருகன்+. Skanda; குமரக் கடவுள்.

முருகநாயனார் muruka-nāyaṉār, n. A canonized Śaiva saint, one of 63; நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவர். (பெரியபு.)

முருகயர்-தல் murukayar-, v. intr. < முருகு +. 1. To offer worship to Skanda; முருகக் கடவுளுக்குப் பூசை செய்தல். 2. To dance while under possession by Skanda; வெறியாடுதல். முருகயர்ந்து வந்த முதுவாய் வேலன் (குறுந். 362). 3. To give feast, as in sacrifice; விருந்திடலாகிய வேள்விசெய்தல். படையோர்க்கு முருகயர (மதுரைக். 38).

முருகவுருட்டிசுறா murukavuruṭṭi-curā, n. A sea-fish; கடல்மீன்வகை. (J.)

முருகவேள் muruka-vēl, n. < முருகன+. See முருகக்கடவுள். (பட்டினப. 158, உரை.)

முருகன் murukaṉ, n. < முருகு. [K. muruga, M. murugan.] 1. Youth; கட்டிளமை யோன். (திவா.) 2. See முருகக்கடவுள். (திருமுரு. பக். 56, உரை.) 3. One possessed by Skanda; வெறியாட்டாளன். (பிங்.) முநியாளோடு முருகனை முறையிற் கூவி (கந்தபு. வள்ளி. 155). 4. Chief of the desert tract; பாலைநிலத்தலைவன். (அக. நி.) 5. An inebriating preparation. See மாஜூன். Loc.

முருகனாடல் murukaṉ-āṭal, n. < முருகன் +. Skanda's dance, of two kinds, viz., tuṭi and kuṭai; துடி குடை என்ற இருவகைக் கூத்து. (பிங்.)

முருகியம் murukiyam, n. < முருகு + இயம்[1]. Drum used in the worship of Skanda, in hilly tracts; குறிஞ்சிநிலத்தில் முருகனுக்குரிய வெறியாட்டுப் பறை. (தொல். பொ. 18, உரை.)

முருகு[1] muruku, n. 1. Tenderness, tender age; youth; இளமை. (திவா.) 2. Skanda; முருகன். அருங்கடி வேலன் முருகொடு வளைஇ (மதுரைக். 611). 3. Fragrance; மணம். முருகமர்பூ முரணகிடக்கை (பட்டினப. 37). 4. [T. muruvu.] Beauty; அழகு. (பிங்.) 5. Divinity, god; தெய்வம். முருகு மெய்ப் பட்ட புலைத்திபோல (புறநா. 259) 6. Dancing while under possession by Skanda; வெறியாட்டு. முருகயர்ந்துவந்த முதுவாய் வேலன் (குறுந். 362). 7. Sacrificial feast; வேள்வி. படையோர்க்கு முரு கயர (மதுரைக். 38). 8. Festival; திருவிழா. (திவா.) முருகயர்பாணியும் (சூளா. நாட். 7). 9. Flower-salver; பூத்தட்டு. (நாமதீப. 429.) 10. Honey; தேன். முருகு வாய்மடுத்துண்டளி மூசும் (நைடத. மணமபுரி. 23). 11. Toddy; கள். (பிங்.) 12. Sour lime; எலுமிச்சை. (பிங்.) 13. Elevation, height; எழுச்சி. (திவா.) 14. Eagle-wood. See அகில், 1. (திவா.) 15. A poem in Pattu-p-pāṭṭu. See திருமுருகாற்றுப்படை. முருகு பொருநாறு (பத்துப் பாட்டு, தனிப்பா.). 16. cf. முருடு. Fuel; விறகு. (திவா.)

முருகு[2]-தல் muruku-, 5 v. intr. < முறுகு-. 1. To be ripe or mature; முதிர்தல். முருகு காத லின் (கம்பரா. அகலிகை. 54). 2. To exceed the proper limit in heating; காய்ச்சுதலிற் பக்குவம் மிஞ்சுதல். நெய் முருகிவிட்டது.

முருகு[3] muruku, n. perh. முறுக்கு-. [T. K. murugu.] An ornament worn in the helix of the ear; காதணிவகை. வசர முருகை யெந்தக் கோனுன் றன் கையிற் கொடுத்தானே (விறலிவிடு. 703).

முருகேசன் murukēcaṉ, n. < முருகு+ ஈசன். See முருகக்கடவுள். (யாழ். அக.)

முருகை murukai, n. A kind of stone; ஒருவகைக் கல். (J.)

முருகைநண்டு murukai-naṇṭu, n. prob. முருகை+. A kind of crab; நண்டுவகை. (J.)

முருங்கன் muruṅkaṉ, n. A coarse kind of kār paddy sown in Āvaṇi and maturing in four months; ஆவணியில் விதைக்கப்பட்டு நான்கு மாதங் களில் விளைவதும் கார்நெல்வகை.

முருங்கிஷம் muruṅkiṣam, n. Bow-string hemp. See பெருங்குரும்பை. (சங். அக.)

முருங்கு[1]-தல் muruṅku-, 5 v. intr. [T. murugu.] 1. To perish; to be destroyed; அழிதல். அமரு ளேற்றூர் முரண முருங்க (பு. வெ.

1, 7). 2. To break; முறிதல். கூம்பு முதன் முருங்க (மதுரைக். 377). 3. To simmer; அடங்கியெரிதல். முருங்கெரியிற் புக (கம்பரா. காாமுக. 29).

முருங்கு² murunku, *n.* See முருக்கு³, 1, 2. (சங். அக.)

முருங்கை murunkai, *n.* <Sinh. <*muruṅgā* <*muruṅgī*. [T *munaga*, M. *muriñña*.] Horse-radish tree, m.tr., *Moringa pterygosperma;* மரவகை. முருங்காவெனனுஞ் சிங் களச் சொல முருங்கையென வந்தவாறும (வீரசோ. தத். 8).

முருட்டுக்கையர் muruṭṭu-k-kaiyar, *n.* <முருடு + கை⁵. Persons of rude behaviour; அடங்கா வொழுக்கமுள்ளவர். முருட்டுக்கையர் புறப் பட்டார் புரட்டுப் பேசி (திருவாலவா. 38, 14).

முருட்டுத்தன்மை muruṭṭu-t-tanmai, *n.* <id. +. Recklessness; ஓராது செய்யுந் துணிவு. (குறள், 1063, உரை.)

முருடன் muruṭan, *n.* <id. [K. *moraḍa*.] 1. Obstinate person; பிடிவாதமுள்ளவன். முருட ரான ராவணுக்கிளை (ரகு, 2, 7, 10). 2. Reckless person; முன்பின் யோசனையில்லாதவன். 3. Ignorant, foolish person; மூடன். கல்லா முருடரும (அஷ்டப. அழக. 30) 4. Hunter; வேடன். (சூடா.) 5. Rude person; savage; அநாகரிகன்.

முருடு muruṭu, *n.* <முரண்-. [K. *moraḍu*.] 1. Coarseness, roughness; கரடுமுரடு. முருட்டுச் சிரமொன் றுருட்டினை (சங்கற்ப. ஈசுவரவிகார. வரி. 26). 2 Obstinacy, obdurateness; பிடிவாதம். 3. Cruelty; கொடுமை. அரக்கர் குலம் முருடு தீர்த்தபிரான் (திவ். திருவாய். 2, 7, 10). 4. Knot in wood; மரக்கணு. (திருவாலவா. 23, 4.) 5. Stump; வெட்டுமரத்தினடி. (சங். அக.) 6. Firewood; விறகு. (பிங்.) முருட்டு மெத்தையின முன் கிடத்தா முனம் (தேவா. 710, 5). 7. Piece of wood; மரக்கட்டை. வன்பராய் முருடொக்கு மென் சிந்தை (திருவாச. 23, 4). 8. Drum; பறைப்பொது. (பிங்.) 9. Hand drum with two faces; மத்தள வகை. முருடதிர்ந்தன (சிலப். மங்கல.). 10. A kind of bucket; பத்தல். (சங். அக.) 11. Largeness; பருமை. முருட்டு மோதகத்தைத் தலைபெற்றமை (தக்க யாகப். 47). 12. Large tongs; பெருங்குறடு. (W.)

முருத்து muruttu, *n.* Corr. of மிருத்தியு.

முருந்தம் muruntam, *n.* See முருந்து, 5. (சூடா.) குருந்த நின்றரும்பின முருந்தம் (கம்பரா. வனம்புகு. 45).

முருந்தன் muruntan, *n.* prob. முருந்து. 1. Person of ability; சமர்த்தன். டெருந்தகைப பெரி யோனைப் பிணித்தபோர் முருந்தன் (கம்பரா. பிணி வீட். 37). 2. Famous man; பிரசித்தன். (இலக். அக.)

முருந்து muruntu, *n.* prob. *mṛdu*. 1. Quill of a feather; இறகினடிக்குருத்து. (பிங்.) 2. Root of peacock's feather; மயிலிறகினடிக்குருத்து. முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினுய (ஏலா. 7). 3. White and fresh sprout of a palm; தென்னை முதலியவற்றின் அடி வெண்குருத்து. (சூடா.) 4. Tendril; கொழுந்து. (சங். அக.) 5. Tender leaf; இளந்தளிர். (அரு. நி.) 6. Stalk of plant just above the roots; வேரின் மேற்றண்டு. பைஞ் சாயக் கோரையின் முருந்தினைன்ன (அகநா. 62). 7. Cartilage, tendon, இளவெலும்பு. (W.) 8. Bone; எலும்பு. முருந்தின காறுயு கூழையை (சீவக. 1661). 9. Whiteness; வெண்மை. (சூடா.) 10. Pearl; முத்து. (அரு. நி.)

முருமுரு-த்தல் murumuru-, 11 *v. tr.* See முறுமுறு-.

முருவிலி muruvili, *n.* prob. முருகு + வல்லி. [K. *murikil*, M. *mural*.] 1. See முருவிலிக்கொடி. (மலை.) 2. Wind-killer; வாதமடக்கி. (சங். அக.)

முருவிளிக்கொடி muruviḷi-k-koṭi, *n.* <முருவிலி +. Prickly climbing cock-spur. See காரிண்டு. (L.)

முறைசு muraicu, *n.* See முரசு. முரைசு மூன்றுளபவா (கலித். 132).

முல்லை mullai, *n.* [T. *molla*, K. *molle*, M. *mulla*.] 1. Arabian jasmine, m. sh., *Jasminum sambac;* கொடிவகை. முல்லை வைந்நுனை தோன்ற (அகநா. 4). 2. Trichotomus-flowering smooth jasmine, m.cl., *Jasminum trichotomum;* கொடி வகை. (L.) 3. Wild jasmine. See காட்டுமல் லிகை. (L.) 4. Eared jasmine. See ஊசிமல் லிகை, 1. (L.) 5. Pointed leaved wild jasmine, m. cl., *Jasminum malabaricum;* கொடிவகை. (L.) 6. Indian birthwort. See ஈசுரமூலி. 7. Forest, pastoral tract, one of *aŋ-ṉ-tiṇai*, q.v.; ஐந்திணையுள் ஒன்றான முல்லைநிலம். (தொல். பொ. 5.) 8. (Mus.) A melody-type of the forest tracts; முல்லைநிலப்பண்வகை. 9. (Mus.) A secondary melody-type. See சாதாரிப்பண். (பிங்.) 10. (Akap.) Patient endurance of a lady during the period of separation from her lover; உரிப்பொரு ளில் ஒன்றாகிய இருத்தல். முல்லை சான்ற புறவு (மது ரைக். 285). 11. Chastity; கற்பு. தாறுடை முல்லை யெல்லாந் தாதுகப் பறித்திட்டானே (சீவக. 686). 12. Chief characteristic; சிறப்பியல்பு. (பு. வெ. 8, 17, உரை.) 13. Victory; வெற்றி. முல்லைத்தார்ச் செம்பியன் (பு. வெ. 9, 34). 14. See முல்லைப்பாட்டு. பாணிரண்டு முல்லை (பத்துப்பாட்டு, தனிப்பா.). (தக்க யாகப். 54, உரை.) 15. See முல்லைக்குழல். (சிலப். 17, பாட்டு 3.)

முல்லைக்காரன் mullai-k-kāraṉ, *n.* <முல்லை +. (J.) 1. Lessee; குத்தகைக்காரன். 2.

2. One who cultivates the land and looks after the cattle, etc., of a land-owner; பண்ணைவேலை பார்ப்பவன்.

முல்லைக்குழல் mullai-k-kuḻal, n. <id.+. A flute or pipe with mouth-piece made of *mullai* creeper; முல்லைக்கொடியால் அமைத்த வளையத்தை வாயினிடத்தே செறித்த இசைக்குழல். (சிலப். 17, பாட்டு, 3, உரை.)

முல்லைச்சிலந்தி mullai-c-cilanti, n. See முலைச்சிலந்தி. (இராசவைத். 98, உரை.)

முல்லைச்சூட்டு mullai-c-cūṭṭu, n. <முல்லை +. Chaplet of *mullai* flowers, as the emblem of chastity; சற்பிற்சிறந்தியாகத் தலையிலணியும் முல்லைப் பூவாலான மாலை. பனிமுல்லைச் சூட்டு வேயநதார (சீவக. 624).

முல்லைப்பண் mullai-p-paṇ, n. <id.+. (Mus.) Primary melody-type of the forest tract; முல்லை நிலத்துக்குரிய பெரும்பண்வகை. (திவா.)

முல்லைப்பாட்டு mullai-p-pāṭṭu, n. <id. +. A poem in Pattu-p-pāṭṭu by Nappūtaṉār; பத்துப்பாட்டினுள் நப்பூதனார் பாடிய பாட்டு.

முல்லைமாறி mullai-māṟi, n. Pickpocket; முடிச்சுமாறி. *Loc.*

முல்லையர் mullaiyar, n. <முல்லை. See முல்லையாளர். (திவா.)

முல்லையாழ் mullai-yāḻ, n. <id.+. (Mus.) Primary melody-type of the forest tract; முல்லைப் பண். (பிங.)

முல்லையாழ்த்திறம் mullai-yāḻ-t-tiṟam, n. <முல்லையாழ்+. (Mus.) Secondary melody-type of *cevvaḻi* class; செவ்வழிப்பண்ணினம். (பிங.)

முல்லையாளர் mullai-y-āḷar, n. <முல்லை +. Herdsmen and shepherds, as inhabitants of the forest tracts; முல்லைநிலமாக்கள். (திவா.)

முல்லையுரிப்பொருள் mullai-y-uri-p-poruḷ, n. <id.+. (Akap.) See முல்லை, 10.

முல்வயன் mulvayaṉ, n. See முல்வாயன். (யாழ். அக.)

முல்வாயன் mul-vāyaṉ, n. perh. முள்+. A kind of white ant; கறையான்வகை. (யாழ். அக.)

முலகாத் mulakāt, n. <Arab. *mulāqāt.* Interview, meeting; சந்திப்பு. *Loc.*

முலங்கம் mulaṅkam, n. Liquorice-plant. See அதிமதுரம்², 1. (சங். அக.)

முலமுலெனல் mula-muleṉal, n. Onom. expr. signifying humming, buzzing, as of flies; ஓரொலிக்குறிப்பு. (W.)

முலவை mulavai, n. cf. முஞ்ஞை. Dog; நாய். (சங். அக.)

முலாகாத் mulākāt, n. See முலகாத். *Loc.*

முலாஞ்சனை mulāñcaṉai, n. cf. Arab. *mulāhizā.* Favour; தயவு. *Loc.*

முலாம் mulām, n. <Arab. *mulammā.* Gilding, electro-plating; பொன்வெள்ளிப்பூச்சு.

முலாம்பண்ணு-தல் mulām-paṇṇu-, v. tr. <முலாம்+. See முலாம்பூசு-. (W.)

முலாம்பழம் mulām-paḻam, n. <E. *melon* +. Musk-melon, *Cucumis melo;* பழவகை. *Loc.*

முலாம்பூசு-தல் mulām-pūcu-, v. tr. & intr. <முலாம்+. To gild; உலோகங்களின்மேல் வெள்ளி தங்கங்களை இளக்கி மேற்பூச்சிடுதல். (W.)

முலாம்போடு-தல் mulām-pōṭu-, v. tr. & intr. <id.+. See முலாம்பூசு-.

முலை mulai, n. [K. *mole,* M. *mula,* Tu. *murei.*] 1. Woman's breast; ஸ்தனம். முலையு முகனுஞ் சேர்த்திக்கொண்டோன் (தொல். பொ. 77). 2. Beast's dug; பெண்பிராணியின் உடலில் பாலுண்டாம் இடம்.

முலைக்கச்சு mulai-k-kaccu, n. <முலை +. Bodice, stays for the breast; இரவிக்கை.

முலைக்கட்டி mulai-k-kaṭṭi, n. <id.+. Mammary abscess; ஸ்தனத்தில் உண்டாம் கட்டி.

முலைக்கட்டு mulai-k-kaṭṭu, n. <id.+. 1. See முலைக்கச்சு. (W.) 2. Accumulation of milk in the breast; ஸ்தனங்களிற் றிரண்டு நிற்கும் பாற்கட்டு.

முலைக்கடுப்பு mulai-k-kaṭuppu, n. <id.+. Pain in the breast or udder, due to excessive secretion of milk; பால் அதிகம் தங்குவதால் ஸ்தனத்திலுண்டாம் வலி. முலைக்கடுப்புக்கெடக் கறந்து (திவ். திருப்பா. 11, உரை).

முலைக்கண் mulai-k-kaṇ, n. <id.+. [M. *mulakkaṇ.*] See முலைக்காம்பு. (திவா.) துணை முலைக்கணகடோய் சுவடு (திருவாச. 29, 5).

முலைக்காம்பு mulai-k-kāmpu, n. <id.+. Nipple, teat; ஸ்தனத்தின் நுனிப்பகுதி. (C. G.)

முலைக்காம்புவீக்கம் mulai-k-kāmpu-vīkkam, n. <முலைக்காம்பு+. Inflammation of the breast, *Mastitis;* ஸ்தனம் வீங்குகை. (M. L.)

முலைக்கால் mulai-k-kāl, *n.* < *முலை* +. 1. See முலை. *தட முலைக்கால்கள்சாய* (சீவக. 2542). 2. Grinding stone; ஆட்டுக்கல். (*யாழ். அக.*)

முலைக்கிரந்தி mulai-k-kiranti, *n.* < id. +. (W.) 1. Venereal eruption in the breasts; ஸ்தனத்தில் உண்டாம் கிரந்திப்புண். 2. A plant, *Barleria vitida*; பூடுவகை.

முலைக்குத்து mulai-k-kuttu, *n.* < id. +. See முலைக்கடுப்பு. (W.)

முலைக்கோள் mulai-k-kōḷ, *n.* < id. +. Suckling; முலைப்பால் உண்ணுகை. *முலைக்கோள விடாஅ மாதிரை* (பொருந. 141).

முலைகுடி mulai-kuṭi, *n.* < id. + குடி-. [M. *mulakuṭi*.] 1. See முலைகுடிப்பிள்ளை. (W.) 2. Simpleton, inexperienced person; பேதையன். *Loc.*

முலைகுடிப்பிள்ளை mulai-kuṭi-p-piḷḷai, *n.* < *முலைகுடி* +. Suckling child; பால்குடிக்கும் இளம் பிள்ளை. (W.)

முலைகுயன்மீன் mulai-kuyaṉ-mīṉ, *n.* prob. *முலை* +. A sea-fish; கடல்மீன்வகை. (J.)

முலைகொடு-த்தல் mulai-koṭu-, *v. intr.* < id. +. To suckle a child; பிள்ளைக்கு முலைப் பால் ஊட்டுதல். (C. G.)

முலைச்சிலந்தி mulai-c-cilanti, *n.* < id. +. A kind of tumour in the breasts; ஸ்தனத்தில் உண்டாம் புண்கட்டிவகை. (W.)

முலைத்தளம் mulai-t-taḷam, *n.* < id. +. A kind of metal stays for the breast, used for images in temples; கோயிலில் விக்கிரகங்களுக்கு இடும் பொன் முதலியவற்றாற்செய்த முலைக்கச்சு. *Nāñ.*

முலைத்தாய் mulai-t-tāy, *n.* < id. +. Wet nurse, one of *ai-vakai-t-tāyar*, q.v.; ஐவகைத் தாயரில் குழந்தைக்குப் பால்கொடுப்பவள். *பல் வினைக்கும் முலைத்தாய் பயந்தார* (சீவக. 3096). (பிங.)

முலைப்பரிசம் mulai-p-paricam, *n.* < id. +. See முலைப்பாற்கூலி. *Loc.*

முலைப்பால் mulai-p-pāl, *n.* < id. +. Mother's milk; தாய்ப்பால். *முலைப்பாற் காலத்து முடிமுறையெய்தி* (பெருங. உஞ்சைக். 33, 52).

முலைப்பால்மீன் mulai-p-pāl-mīṉ, *n.* prob. id. +. A sea-fish; கடல்மீன்வகை. (J.)

முலைப்பால்விரை mulaippālvirai, *n.* Black horse-gram. See கருங்காணம். (M. M. 658.)

முலைப்பாலி mulai-p-pāli, *n.* perh. *முலை* + *பாலி*-. Termites in an ant-hill; புற்றிலுள்ள கறையான் திரள். (*யாழ். அக.*)

முலைப்பாலெண்ணெய் mulai-p-pāl-eṇṇey, *n.* < *முலைப்பால்* +. 1. Mixture of mother's milk and castor oil, given to babies; தாய்ப்பாலுடன் கலந்து பச்சைக்குழந்தைகளுக்கு ஊட்டும் ஆமணக்கெண்ணெய். (W.) 2. A medicinal oil used for the head; தலைக்கு இடும் மருந்தெண்ணெய் வகை. *Loc.*

முலைப்பாற்கூலி mulai-p-pāṟ-kūli, *n.* < id. +. Bride-price, money presented by the bridegroom to the bride's mother as compensation for having nourished her during her infancy; பெண்ணின் தாய்க்குப் பெண்ணை வளர்த்ததன் பொருட்டு மணமகன் கொடுக்கும் பரிசப்பணம். (G. Tj. D. I, 73.)

முலைமற-த்தல் mulai-maṟa-, *v. intr.* < *முலை* +. To be weaned; பால்குடி மறத்தல். (W.)

முலைமறு-த்தல் mulai-maṟu-, *v. intr.* < id. +. To cease to give milk, as a cow; பசு முதலியன பால்கொடுக்க மறுத்தல். *Loc.*

முலைமார்பு mulai-mārpu, *n.* < id. +. (W.) 1. Heart; இருதயம். 2. Breast; மார்பு.

முலைமுகம் mulai-mukam, *n.* < id. +. 1. See முலைக்காம்பு. (C. G.) 2. Woman's breast; ஸ்தனம். *முததாமாரபின் முலைமுகந்திருகி* (சிலப. பதிக. 34).

முலைமூக்கரிவாள் mulaimūkkarivāḷ, *n.* A knife for cutting the stems of betel leaf. See இலைமூக்கரிகத்தி. (*நாமதீப.* 421.)

முலையமுது mulai-y-amutu, *n.* < *முலை* +. See முலைப்பால்.

முலையழற்சி mulai-y-aḻaṟci, *n.* < id +. Inflammation of the udder, garget; பால்மடியி லுண்டாம் வலி. (M. L.)

முலைவிலை mulai-vilai, *n.* < id. +. See முலைப்பாற்கூலி. *வரைந்தெய்தற்கு முலைவிலையோடு புகுந்து பொன்னணிவா ளின்றுரு முளா* (இறை. களவி. 23, பக். 715). *முலைவிலையும் பள்ளியாரே கொள்ளப்பெறுவார்* (T. A. S. ii, 81).

முலைவெடிப்பு mulai-veṭippu, *n.* < id. +. Sore teats; முலைக்காம்பு புண்படுகை.

முவ்வை muvvai, *n.* cf. *முலவை*. Dog; நாய். (*பரி. அக.*)

முவட்டிபண்டு muvaṭṭipaṇṭu, *n.* < T. *musṭipaṇḍu*. Fruit of nux vomica; எட்டிப் பழம். (*பரி. அக.*)

முவலம் muvalam, *n.* cf. *aupala*. A mineral poison; அவுபலபாஷாணம். (*யாழ். அக.*)

முழ muḻa, *n.* See முழவு, 1, 2, 3. *இன்வளி விசைத்த முழவொடா குளி* (மலைபடு. 3).

முழக்கட்டை mula-k-kaṭṭai, *n.* < முழம் + Anything short of the full measure, as a piece of cloth; நீளக்குறைவானது. (W.)

முழக்கம் mulakkam, *n.* < முழங்கு-. (W.) 1. Loud sound, as of thunder or of drums; பேரொலி. 2. Clamour, hubbub, roar; ஆரவாரம்.

முழக்கு¹-தல் mulakku-, *5 v. tr.* Caus. of முழங்கு-. 1. To sound; to beat a sounding instrument; ஒலிப்பித்தல். *குணில் வலந்தேந்தி முழக்கினுமென* (*கம்பரா. கும்பக.* 346). 2. To do a thing pompously; விமரிசைபெறச் செய்தல்.

முழக்கு² mulakku, *n.* < முழக்கு-. [K. *molagu.*] Sound, noise; ஒலி. (W.)

முழக்கோல் mula-k-kōl, *n.* < முழம் +. (W.) 1. Measuring rod; அளவுகோல். 2. A measuring rod of eight cubits; எட்டுமுழங் கொண்ட அளவுகோல். 3. Mason's rule of two cubits, about 33 inches; இரண்டு தச்சு முழமுள்ள அளவுகோல்.

முழங்கால் mulaṅ-kāl, *n.* < id. +. [T. *mōkālu*, K. *molakālu*, M. *mulakkāl.*] 1. See முழங்கால்முட்டு, 1. 2. Part of the leg from knee to ankle; முழங்கால் முட்டுக்கும் கணுக்காலுக்கும் இடையிலுள்ள உறுப்பு.

முழங்கால்முட்டி mulaṅkāl-muṭṭi, *n.* < முழங்கால் +. 1. Knock- knee. See முட்டிக்கால், 2. 2. Coming down heavily on the knees, as a punishment; முழங்காற்சில்லைத் தரையி லூன்றிப் போடுவதாகிய தோப்பிக்கரண தண்டனை. *Loc.*

முழங்கால்முட்டு mulaṅkāl-muṭṭu, *n.* < id. +. 1. Knee; தொடையும் காலும் சேரும் இடம். (M. L.) 2. See முழங்கால்முட்டி, 1.

முழங்கால்வலி mulaṅkāl-vali, *n.* < id. +. Arthritis, inflammation of the knee; முழங்கால் முட்டில் உண்டாம் வலி. (M. L.)

முழங்கால்வாதம் mulaṅkāl-vātam, *n.* < id. +. Synovitis, inflammation of the synovial membrane of the knee; கீல்பிடிப்பு. (M. L.)

முழங்காற்சிப்பி mulaṅkāṟ-cippi, *n.* < id. +. See முழங்காற்சில். (W.)

முழங்காற்சில் mulaṅkāṟ-cil, *n.* < id. +. Knee-cap, patella; காலையும் தொடையையும் சேர்க்கும் எலும்புப்பூட்டின் மேற்பாகம். (W.)

முழங்காற்சில்லி mulaṅkāṟ-cilli, *n.* < id. +. See முழங்காற்சில். *Loc.*

முழங்காற்படியிடு-தல் mulaṅkāṟ-paṭi-y-iṭu-, *v. intr.* < id. +. To kneel down; முழந் தாளைக் கீழிட்டு வணங்குதல். (W.)

முழங்காற்பிடிப்பு mulaṅkāṟ-piṭippu, *n.* < id. +. See முழங்கால்வாதம். (M. L.)

முழங்கு-தல் mulaṅku-, *5 v. intr.* [K. *molagu.*] 1. To roar; thunder, to make a loud noise; பெரிதொலித்தல். *எழிலி முழங்குந் திசை யெல்லாம்* (*நாலடி*, 392). 2. To be noised abroad; to be made public; பலருமறியக் கூறப்படுதல். *தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார் மூன்றினு முழங்கும்* (*இலக். கொத்.* 7).

முழங்கை mulaṅ-kai, *n.* < முழம் +. [K. *molakai.*] 1. Forearm; கையில் மணிக்கட்டுக்கும் தோளுக்கும் இடையிலுள்ளபாகம். 2. Elbow; கையின் மேற்பாகமும் அதன் கீழ்ப்பாகமும் கூடும் இடம். (W.)

முழந்தாட்கச்சு mulantāṭ-kaccu, *n.* < முழந்தாள் +. (J.) 1. Garter; முழங்காலிற் சுட்டுங் கச்சை. 2. Short drawers; half pantaloons; shorts; சல்லடம்.

முழந்தாள் mulan-tāḷ, *n.* < முழம் +. See முழங்கால். (சூடா.)

முழந்து mulantu, *n.* See முழங்கால். (சூடா.)

முழம் mulam, *n.* [T. *mura*, K. *mola*, M. Tu. *mulam.*] Cubit, measure from the elbow to the tip of the middle finger = 2 span; இருசாண் கொண்டதான முழங்கை நீள அளவு. *ஒரு முழமுயர்ந்த* (*கம்பரா. இலங்கைகா.* 15).

முழம்போடு-தல் mulam-pōṭu-, *v.* < முழம் +. *tr.* 1 To measure with the forearm; கையால் முழவளவாக அளத்தல். (W.) 2. To sound a person; ஆழம் பார்த்தல். *Loc.*—*intr.* To utter baseless falsehood; பொருந்தாப் பொய் பேசு தல். *Loc.*

முழமிடு-தல் mulam-iṭu-, *v. tr.* < id. +. See முழம்போடு-, 1. (W.)

முழல் mulal, *n.* Molucca-bean. See கழற்சி, 1. (சூடா.)

முழவம் mulavam, *n.* < முழவு. 1. See முழவு, 1. (பிங்.) *மணகளை முழவம் விம்ம* (*சீவக.* 628). 2. See முழவு, 2. *தண்ணுமைப்பின்வழி நின்றது முழவே* (*சிலப்.* 3, 141).

முழவு¹ mulavu, *n.* prob. முழங்கு-. [M. *mulāvu.*] 1. Drum; முரசு. *முழவின் முழக்கீண்டிய* (*சீவக.* 2399). 2. Large loud-sounding drum, hemispherical in shape; குடமுழா. (பிங்.) 3. Tom-tom; தம்பட்டம். (பிங்.) 4. [T. *modava.*] Vessel for milk; பால்கறத்தற்குரிய பாத்திரம். *முழவிற் பிழிந்த பால்வழிநுரை* (*கம்பரா. கார்கால.* 47). 5. Mould for casting a vessel; பாத்திர முதலியன வார்ப்பதற்குரிய கரு.

முழவு²-தல் muḻavu-, *5 v. intr.* To move on intimate terms; நெருங்கிப் பழகுதல். *Loc.*

முழவுக்கனி muḻavu-k-kaṉi, *n.* <முழவு+. Jack-fruit; பலாப்பழம். (சங். அக.)

முழவுகட்டு-தல் muḻavu-kaṭṭu-, *v. intr.* <id.+. To prepare mould for casting vessels; பாத்திரஞ்செய்யக் கருக்கட்டுதல். *Loc.*

முழவுமண் muḻavu-maṇ, *n.* <id.+. 1. Black paste smeared on the head of a drum. See மார்ச்சனை, 1. (யாழ். அக.) 2. Clay used in making moulds; கருக்கட்டுங் களிமண்.

முழவுமேளம் muḻavu-mēḷam, *n.* <id.+. 1. Band of musical instruments, including *muḻavu;* முழவுமுதலிய கருவிகளின் கூட்டம். *Loc.* 2. Kettle-drum; பறைவகை. (W.)

முழா muḻā, *n.* <id. 1. See முழவு, 1. (பிங்.) 2. See முழவு, 2. (சிலப். 3, 141.) 3. See முழவு, 3. (பிங்.)

முழாசு¹-தல் muḻācu-, *5 v. intr.* To burst into a flame, blaze up; சுவாலித்தல். (J.)

முழாசு² muḻācu, *n.* <முழாசு-. Blaze, conflagration; சுவாலை. (J.)

முழால் muḻāl, *n.* prob. முழுவு-. Embracing; தழுவுகை. சிறூர் முலை முழாலிற் பில்கி (சீவக. 2541).

முழாவு-தல் muḻāvu-, *5 v. intr.* See முழவு-. *Loc.*

முழாவுசால் muḻāvu-cāl, *n.* The last or exterior furrow in ploughing; கடைசி உழவு சால். (J.)

முழாள் muḻāḷ, *n.* <முழு+ஆள். Adult workman; வயது வந்த வேலையாள். (W.)

முழி¹-தல் muḻi-, *4 v. tr.* Corr. of உமிழ்-, 1.

முழி² muḻi, *n.* <மொழி. [T. *mōḍa,* K. Tu. *muḍi,* M. *muḻi.*] Joint, as of the body; எலும்புப்பூட்டு.

முழி³ muḻi, *n.* Corr. of விழி.

முழி⁴-த்தல் muḻi-, *11 v. intr.* Corr. of விழி-.

முழிவாதம் muḻi-vātam, *n.* <முழி²+. Sciatica. See சந்துவாதம். (M. L.)

முழு¹ muḻu, *adj.* 1. All, entire, whole; எல்லாம். முழுவலி முதலை (திவ். பெரியதி. 5, 8, 3). 2. Large; பருத்த. முழுமுத லொருலைந்த கோளி யாலத்து (புறநா. 58).

முழு²-த்தல் muḻu-, *11 v. intr.* <முழு-மை. To be whole, entire; முழுமையாதல். (இலக். அக.)

முழுக்க muḻukka, *adv.* <முழு-. Wholly, entirely, altogether, completely; முழுதும். உயிரை முழுக்கச் சுடுதலின் (சீவக. 1966, உரை).

முழுக்களவாளி muḻu-k-kaḷavāḷi, *n.* <முழு+. Great thief, robber; பெருந்திருடன்.

முழுக்காட்டு-தல் muḻukkāṭṭu-, *v. tr.* <முழுக்கு+ஆட்டு-. To bathe; ஸ்நானம் பண்ணுவித்தல். கடல்வேந்தை யவன்புனலான் முழுக்காட்டு முறைமை யென்கோ (சௌந்த. 103).

முழுக்காடு-தல் muḻukkāṭu-, *v. intr.* <id. +ஆடு-. [K. *mulukādu.*] To bathe; ஸ்நானம் செய்தல். எண்ணெய் சோதநே முழுக்காடுவார் (அறப. சத. 50).

முழுக்காப்பு muḻu-k-kāppu, *n.* <முழு+. Ceremony of daubing the idol completely with sandal paste, in temples; ஆலயங்களில் விக்கிரகங்களின்மீது சந்தனமப்பி அலங்கரிக்குஞ் சடங்கு. *Loc.*

முழுக்காய் muḻu-k-kāy, *n.* <id.+. Fruit almost ripe; பழுக்கும் பருவத்துக் காய். (W.)

முழுக்காளி muḻukkāḷi, *n.* <முழுக்கு+. 1. Diver for pearls; முத்துக்குளிப்போன். (W.) 2. A near relation of a person, as one who is under obligation to bathe on his death; ஒருவன் இறந்தால் அவன்பொருட்டு ஸ்நானஞ் செய்யவேண்டிய நெருங்கிய உறவினன். *Loc.*

முழுக்கிரகணம் muḻu-k-kirakaṇam, *n.* <முழு+. Total eclipse; பூர்ணகிரகணம். (W.)

முழுக்கு¹-தல் muḻukku-, *5 v. tr.* Caus. of முழுகு-. [K. *mulugisu.*] See முழுத்து-. அரிவைகளை வாளுந்தோள்களின் முழுக்கினா (கம்பரா. அதிகாய. 98).

முழுக்கு² muḻukku, *n.* <முழுக்கு-. [T. *munugu,* K. *muluku,* M. *mulugu,* Tu. *mulu.*] 1. Bath, bathing; ஸ்நானம். பல நீட்டுக்கு ஒரு முழுக்கு. 2. Menses; மாதவிடாய். *Loc.*

முழுக்குமுறை muḻukku-muṟai, *n.* <முழுக்கு+. *Brāh.* 1. The period soon after child-birth, during which the mother takes baths on alternate days; பிரசவமானபின் ஒன்றுவிட்டொருநாள் முறையாக ஸ்நானம் செய்யுங் காலம். 2. The alternate days when a woman after child-birth takes baths; பிரசவமானபின் முறையாக ஸ்நானம் செய்யும் நாள்.

முழுக்குழவி muḻu-k-kuḻavi, *n.* <முழு+. Full-grown or weaned calf; முதுகன்று. மோட்டெருமை முழுக்குழவி (பட்டினப். 14).

முழுக muḻuka, *adv.* <முழுகு-. Wholly, entirely; முழுவதும். மதிலுமாடமு மாடக்செய் குன்று முழுகக் குழாமீண்டி (திருவாரூ. 142).

முழுகவிடு-தல் muḻuka-viṭu-, *v. tr.* <முழுகு-+. 1. To let a thing go to ruin; பொருள் முதலியன தொலையும்படி விடுதல். 2. To be unable to redeem, as a pledged thing; கடனுக்கீடான சொத்தை மீட்க முடியாதிருத்தல். *Loc.*

முழுகாமலிரு-த்தல் mulukāmal-iru-, v. intr. <id. + ஆ neg. +. To be pregnant; கருப்பமாதல். அவள் பெண்சாதி மூன்று மாதமாய் முழுகாமலிருக்கிறாள்.

முழுகிக்கிட-த்தல் muluki-k-kita-, v. intr. <id. +. 1. To be involved completely; முழுவதும் அடங்கிக்கிடத்தல். அவன்சொத்து முழுவதும் வியாபாரத்தில் முழுகிக்கிடக்கிறது. 2. To be absorbed, engrossed; ஈடுபட்டிருத்தல். அவன் சூதாட்டத்தில் முழுகிக் கிடக்கிறான். 3. To be under water; நீரிலாழ்தல். பயிர் முழுகிக் கிடக்கிறது.

முழுகிப்போ-தல் muluki-p-pō-, v. intr. <id. +. 1. To sink, founder; to be drowned; அமிழ்தல். 2. To be ruined, swallowed up; அடியோடு கெடுதல். அவன் குடித்தனம் முழுகிப் போயிற்று. 3. To be entirely lost beyond redemption; சொத்து மீட்கமுடியாது கடனுக்கு உட்பட்டுவிடுதல். *Loc.*

முழுகு-தல் muluku-, 5 v. intr. [T. munugu, K. mulu, M. muluguga.] 1. To bathe the entire body by dipping or pouring; ஸ்நானம் செய்தல். 2. To be entirely immersed, as in business; அழுந்தி யிருத்தல். 3. To sink; அமிழ்ந்து போதல். கப்பல் முழுகிவிட்டது. 4 To be in menses; மாதவிடாயடைதல். (W.) 5. To be irretrievably involved in debts; சொத்து மீட்கமுடியாமல் கடனுள் அமிழ்ந்து போதல். *Loc.*

முழுங்கு-தல் mulunku-, 5 v. tr. [T. mingu.] Corr. of விழுங்கு-.

முழுச்சவரம் mulu-c-cavaram, n. <முழு +. Shaving the body and not merely the head; உடல் முழுதுமுள்ள மயிர் கழிக்கை. *Colloq.*

முழுச்செம்பு mulu-c-cempu, n. <id. +. An ancient South Indian coin; தென்னிந்தியாவில் வழங்கிய பழைய நாணயவகை. (பணவிடு. 140.)

முழுச்சோம்பேறி mulu-c-cōmpēri, n. <id. +. Great sluggard; அதிகச் சோம்பலுள்ளவ-ள்-ன்.

முழுச்சௌரம் mulu-c-cauram, n. <id. +. See முழுச்சவரம். (W.)

முழுசு[1]-தல் mulucu-, 5 v. intr. cf. முழுவு-. 1. To dive, dip, get in, enter; உட்புகுதல். முழுசி வண்டாடிய தண்டுழாயின் (திவ். பெரியதி. 2, 8, 7). 2. See முழுவு-. அமுங்கத் தழுவாதே முழுசாதே (திவ். பெருமாள். 9, 6). 3. To rub, strike against; முட்டுதல். பிள்ளைகள் முலைக்கீழ் முழுசினவாறே பால்சுரக்கும் (ஈடு, 5, 3, 3).

முழுசு[2] mulucu, n. <முழுது. Entirety; whole. See முழுமை, 1. *Colloq.*

முழுத்த mulutta, <முழு. adj. Fully developed; முதிர்ச்சி பெற்ற. முழுத்த வின்பக்கடல் (திருக்கருவை. கலித். அந்.).—adv. See முழுதும்.

முழுத்தசுரம் mulutta-curam, n. prob. முழுத்த +. A kind of fever; சுரநோய்வகை. (யாழ். அக.)

முழுத்தம் muluttam, n. <muhūrta. See முகூர்த்தம். தாமரைச்சேவடி பணியு முழுத்த மீங்கிது (சிலப. 26, 30).

முழுத்து-தல் muluttu-, 5 v. tr. prob. அமிழ்த்து-. [T. munugu.] To plunge, dip in, drown; அமிழ்த்துதல். துதிக்கை முழுத்திற்று (ஈடு, 3, 5, 1).

முழுத்தும் muluttum, adv. See முழுதும். முழுத்தும பழுதற்ற முத்தமிழின் (சிலப. உரைச்சிறப். பக். 11).

முழுத்துவி-த்தல் muluttuvi-, 11 v. tr. Caus. of முழுத்து-. See முழுத்து-. மன்னவரை. . . முழுத்துவிப்பன் செங்குருதிமுன் (பாரதவெண். 126.)

முழுத்தேங்காய் mulu-t-tēṅkāy, n. <முழு +. Coconut not broken into two halves; உடைபடாத தேங்காய். (W.)

முழுத்தொகை mulu-t-tokai, n. <id. +. 1. Capital and interest; வட்டியுடன் கூடிய முதல். 2. Total; மொத்தம்.

முழுது mulutu, <முழு-மை. n. All, whole, entirety; எஞ்சாமை.—adv. See முழுதும். (தொல். சொல். 326.)

முழுதும் mulutum, adv. <முழுது Wholly, entirely; எஞ்சுதலின்றி. முழுதும் வெண்ணெ யளைந்து தொட்டுண்ணும் (திவ். பெருமாள். 7, 8).

முழுதுமபாவம் mulutum-apāvam, n. <முழுதும +. (Log.) Absolute non-existence, one of four apāvam, q.v.; அபாவம் நான்கனுள் முழுதுமின்மை. (தருக்கசங.)

முழுதொருங்குணர்ந்தோன் mulu-torunkuṇarntōṉ, n. <முழுது + ஒருங்கு +. 1. Arhat; அருகன். (திவா.) 2. God; கடவுள். (யாழ். அக.) 3. Siva; சிவபிரான். (யாழ். அக.)

முழுதோன் mulutōṉ, n. <id. God; கடவுள். முழுதோன் காணக (திருவாச. 3, 29).

முழுந்து muluntu, n. <id. See முழுமை, 1. முழுந்து சுகவடிவாம் (ஞானவா. சனக. 14).

முழுநாயகம் mulunāyakam, n. A creeper; கொடிவகை. (சங். அக.)

முழுநாள் mulu-nāḷ, n. <முழு +. *Nakṣatra* falling entirely within a zodiacal sign; ஓர் இராசிக்குள்ளாகவே முழுதும் அமையும் நட்சத்திரம். (சங். அக.)

முழுநீறுபூசியமுனிவர் mulu-nīru-pūciya-muṉivar, n. <id.+. Śaiva devotees who besmear sacred ashes all over their bodies, one of tokai-y-aṭiyār, q.v ; தொகையடியாருள் ஒருசாராரும் உடல் முழுவதும் திருநீற்றை அணிபவருமான சிவனடியார் கூட்டம். (தேவா. 738, 10.)

முழுநெறி mulu-neṟi, n. <id.+. 1. Full flower with the calyx; இதழொடிக்கப்படாத முழுப்பூ. (சிலப. 2, 14, உரை.) 2. Full flower without the calyx; புறவிதழொடிக்கப்பட்ட முழுப்பூ. குவளைக் கூம்பவிழ் முழுநெறி (புறநா. 116, 2).

முழுநோக்கு mulu-nōkku, n. <id.+. Full aspect of a planet, one of four kiraka-nōkku, q.v.; ஒரு கிரகம் முழுப்பலத்தோடு நோக்குகை. சனனி மதி முழுநோக்கெய்தி (பிரபுலிங. மாயையினுற்பத்தி. 58).

முழுப்பங்கு mulu-p-paṅku, n. <id.+. Whole or undivided share, as in land owned in definite shares; நிலத்துரிமையில் உட்பிரிவில்லாத தனிப்பங்கு. (W.)

முழுப்பாய்சுருட்டி mulu-p-pāy-curuṭṭi, n. <id.+பாய்²+. Swindler, great cheat; பெருமோசக்காரன். Colloq.

முழுப்பார்வை mulu-p-pārvai, n. <id. +. See முழுநோக்கு. (மங்களே. 3, 32, உரை.)

முழுப்புரட்டன் mulu-p-puraṭṭaṉ, n. <id.+. 1. See முழுப்புளுகன். 2. See முழுப்பாய்சுருட்டி. (W.)

முழுப்புளுகன் mulu-p-pulukaṉ, n. <id. +. Downright liar; பெரும்பொய்யன். (W.)

முழுப்பொய் mulu-p-poy, n. <id.+. Downright lie; பெரும்பொய்.

முழுப்பொருள் mulu-p-porul, n. <id.+. The Supreme Being; கடவுள். மனவாக்கினுக்கு மெட்டாத முழுப்பொருளா முதல்வா (சிவரக. கணபதி குமா. 7).

முழுமக்கள் mulu-makkal, n. <id.+. Fools, as barely satisfying the definition of human beings; அறிவிலார். முழுமக்கள் காதலவர் (திரிகடு. 9).

முழுமகன் mulu-makaṉ, n. <id.+. Fool; அறிவிலான். (திவா.)

முழுமணி mulu-maṇi, n. <id.+. 1. Unpierced gem; துளையிடா மணி. 2. Flawless gem; குற்றமற்ற இரத்தினம். முற்ற முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா (நீதிநெறி. 13).

முழுமதி mulu-mati, n. <id.+. Full moon; பூர்ணசந்திரன். முழுமதி புரைமுகமே (சிலப். 7, பாட்டு, 14).

முழுமன்[1] mulu-maṉ, n. <id.+prob. மகன். See முழுமகன். சனகியைக் கவர்ந்து போய முழுமனே (அரிசமய. குலசேகர. 143).

முழுமன்[2] muluman, n. <முழு. Grain escaping unbroken in the process of grinding; அரைக்கும்போது சிதைபடாது விழும் முழுந்தானியம். Loc.

முழுமனசு mulu-maṉacu, n. <id.+. Entire willingness, full accord; whole-heartedness; முழுச்சம்மதம். Colloq.

முழுமனை mulu-maṉai, n. <id.+. Ground measuring 2400 sq ft.; 2400 சதுர அடி கொண்ட நிலப்பகுதி. (W.)

முழுமிடறுசெய்-தல் mulu-miṭaṟu-cey-, v. tr. <id.+மிடறு+. To drink in large mouthfuls; வாய்நிறையப் பருகுதல். முழுமிடறு செய் தனுபவித்து (ஈடு, 2, 3, 9).

முழுமுதல் mulu-mutal, n. <id.+. 1. God, as the Sole Cause; கடவுள். பொன்னம்பலத் தெம் முழுமுதலே (திருவாச. 21, 3). 2. Stem, as of a tree; மரத்தின் அடிப்பகுதி. யாஅத்து . . . முழுமுதல் (குறுந். 255).

முழுமுற்றும் mulu-muṟṟum, adv. <id. +. See முழுதும். முழுமுற்றுந் தானே விளக்காய (சீவக. 1870).

முழுமூச்சு mulu-mūccu, n. <id.+. 1. Utmost effort, as with full breath; முழுபலத்துடன் செய்யும் முயற்சி. Colloq. 2. Inflexible determination; விடாத்தீர்மானம். Loc. 3. Breathlessness; மூச்சுத்திணறுகை. (W.)

முழுமூடன் mulu-mūṭaṉ, n. <id.+. Great fool; பெருமூடன். (திருவேங். சத. 49.)

முழுமை mulumai, n. <முழு. 1. Entireness, perfection, completeness; எல்லாம். (பிங்.) 2. Great size; பருமை. (பெரியபு. திருநா. 39.)

முழுவது muluvatu, n. & adv. <முழு-மை. See முழுவதும்.

முழுவதும் muluvatum, <id. n. All, whole; முழுமை. முழுவதும் படைப்போற் படைக்கும் பழையோன் (திருவாச. 3, 12).—adv. Wholly, totally, completely; பூர்ணமாக. நின்னையேத்த முழுவதுமே (திருவாச. 5, 6).

முழுவல்[1] muluval, n. perh. முழுகு-. An aquatic bird; நீர்ப்பறவைவகை. ஒடுங்கு சிறை முழுவலும் (மணி. 8, 29).

முழுவல்[2] muluval, n. cf. உழுவல். Perfect love; விடாது தொடர்ந்த அன்பு. முழுவற்கடல் பெருத்தீான் (தணிகைப்பு. நந்தியு. 6).

முழுவலயம்[1] mulu-valayam, n. <முழு+வளை-. Full circle; முழுவட்டம். (யாழ். அக.)

முழுவலயம்[2] muḻu-valayam, n. prob. id. + வலம. Victory; வென்றி. (யாழ். அக.)

முழுவலி muḻu-vali, n. <id.+. 1. Great strength; நிறைந்த வலிமை. முழுவலி வயமா (பு. வெ. 7, 17). 2. Powerful person; person of great strength; பூர்ண பலமுள்ளவ ன்-ள்.

முழுவாசி muḻu-vāci, <id.+. n. 1. Whole; முழுமை. (W.) 2. Fully developed grain; முற்றின நென்மணி. Loc.—adv. See முழுவாசியும்.

முழுவாசியும் muḻuvāciyum, adv. <முழு வாசி. To a great extent, almost completely; பெரும்பகுதியும். வீட்டுவேலை முழுவாசியுந் தீர்ந்து விட்டது.

முழுவு-தல் muḻuvu-, 5 v. tr. To kiss; முத்தமிடுதல். வந்தென் முலைமுழுவித தழுவி (திருக் கோ. 227).

முழுவெலும்பு muḻu-v-elumpu, n. <முழு +. See முழுவென்பு.

முழுவென்பு muḻu-v-eṉpu, n. <id.+. Skeleton; எலும்புக்கூடு. (திவா.)

முழை[1] muḻai, n. cf. mūṣā. Large mountain cave, cavern, den; குகை. அவ்விசை முழை யேற்றழைபப (பரிபா. 19, 63).

முழை[2] muḻai, n. cf. மூழை. Spatula, ladle; துடுப்பு. (W.)

முழை[3]-த்தல் muḻai-, 11 v. tr. <முழை[1]. To pierce, bore; துளைத்தல். முழைத்த வான்புழை (பாரத. காண்டவ. 17).

முழை[4]-தல் muḻai-, 4 v. intr. prob. நுழை-. To enter; நுழைதல். Loc.

முழைஞ்சு muḻaiñcu, n. <முழை[1]. 1. See முழை[1]. மாரி மலை முழைஞ்சில் மன்னி (திவ். திருப்பா. 23). 2. Hole; துளை. குழன் முழைஞ்சு களினூடு குமிழ்த்து (திவ். பெரியாழ். 3, 6, 11).

முழைத்தல் muḻaittal, n. 1. Inarticulate sound, vocal sound having no corresponding written character; எழுத்திலாவோசை. (சது) 2. Language not possessing a written alphabet or characters; எழுத்தில்லா மொழி. (W.)

முள் muḷ, n. [T. K. M. muḷḷu, Tu. muḷ.] 1. Thorn, brier, thistle, bristle, spine; மரஞ் செடிகளில் கூர்மையுடையதாய்ச் சிறு தச்சிபோற் காணப்படும் பகுதி. இளைதாக முண்மரங் கொல்க (குறள், 879). 2. Anything sharp or pointed, as fish-bone, porcupine's quill, etc.; குத்தக்கூடிய கூர்மையுடைய பொருள். 3. Goad, spur; தாற்றுக் கோல். முள்ளிட் டூர்மதி வலவ (ஐங்குறு. 481). 4. Bit; கடிவாளம். முள்ளுறீஇச் செய்கயி றுயர்ந்தன (சீவக. 2214). 5. Quill or springing point of feather; இறகினடி. இதன் முட் செந்நனை (அகநா. 23). 6. The rough points on the rind of the jack fruit; பலாக்காய்மேற் காணப்படும் கூரிய முனைகள். (W.) 7. Fork; sharp-pointed instrument; முள்வடிவாகச் செய்யப்பட்ட கருவி. 8. Index of a balance; தராசுக் கோலின் நடுவில் சம நிலையைக் காட்டும் ஊசி. 9. Hand of a clock or time-piece; கடிகாரத்தில் காலத்தைக் காட்டும் ஊசி. Mod. 10. Male organ of a pigeon; புறவின் ஆண்குறி. Loc. 11. Sharpness; கூர்மை. முள் வாயச் சங்கம் (சிலப். 4, 78). 12. Minuteness; நுண்மை. (சூடா.)

முள்கா-த்தல் muḷkā-, 4 v. intr. prob. முளகு- + ஆ[7]-. To sit with arms and legs folded; குந்தியிருத்தல். சான்றோர் முசுப்போல முள்காந்திருப் பா (நன். 96, விருத்.).

முள்கு-தல் muḷku-, 5 v. intr. [T. meli-gonu, melagu.] 1. To embrace; முயங்குதல். இளமுலை முகிழ்செய முள்கிய (கலித். 125). 2. To enter, pierce; உட்செல்லுதல். அமரக்க ணமா னருநிற முள்காது (நற். 165).

முள்சீதா muḷ-cītā, n. See முள்ளுச்சீத்தா.

முள்மகிழ் muḷ-makiḻ, n. <முள் +. Woolly ironwood, m. tr., Sideroxylon tomentosum; மர வகை. (L.)

முள்முரண்டை muḷ-muraṇṭai, n. <id. +. Necklace berried climbing caper, l. cl., Mima arenaria; கொடிவகை. (L.)

முள்வறையன் muḷ-varaiyaṉ, n. <id.+. A kind of termite that consumes wood; மரத்தை அரிக்கும் கறையான்வகை. (J.)

முள்வாங்கி muḷ-vāṅki, n. <id. + வாங்கு-. Thorn pincers; முள்ளெடுக்குங் கருவி.

முள்வாயன் muḷ-vāyaṉ, n. <id. + வாய். See முள்வறையன். (J.)

முள்வாளி muḷ-vāḷi, n. <id.+. See முள் வேலி. Nāñ.

முள்வாளை muḷ-vāḷai, n. <id.+. [M. muḷḷavāḷa.] Large herring-like fish, bluish green, attaining 12 ft. in length, Chirocentrus dorab; நீலங்கலந்த பச்சை நிறமுடையதும் 12 அடி வரை வளர்வதுமான வாளைமீன்வகை.

முள்வெள்ளரி muḷ-veḷḷari, n. <id.+. Kakri-melon, Cucumis melo-utilissimus; கொடி வகை. (சூடா.)

முள்வேங்கை muḷ-vēṅkai, n. <id.+. Spinous kino tree. See மலைவேங்கை. (L.)

முள்வேல் muḷ-vēl, n. <id.+. (L.) 1. Buffalo thorn cutch. See குடைவேல், 2. 2. Entire leaved staff-tree, s. tr., Gymnosporia emarginata; முள்ளுடைய வேலமரவகை.

முள்வேலி mul-vēli, *n.* <id.+. 1. Fence of thorn; முள்ளாலான அடைப்பு. அமரினிட்ட வரு முள்வேலி (புறநா. 301). 2. Fence of barbed wire; முட்களையுடைய இரும்புக் கம்பியாலான வேலி. *Mod.*

முள்ளங்கத்தரி mullaṅ-kattari, *n.* <id. +. Woolly sinuate bluish-flowered prickly nightshade, m. sh., *Solanum melongena;* கத்தரி வகை. (L.)

முள்ளங்கி mullaṅki, *n.* <*mūlaka.* [T. *mullaṅgi,* K. *mūlaṅgi,* M. *mullaṅki.*] Radish, *Raphanus sativus;* செடிவகை. (பதார்த்த. 409.)

முள்ளங்கிழங்கு mullaṅ-kiḻaṅku, *n.* <முள் +. Thorny yam, *Dioscorea tomentosa;* ஒருவகை வள்ளிக்கொடி. (W.)

முள்ளங்கீரை mullaṅ-kīrai, *n.* <id.+. See முட்கீரை. (W.)

முள்ளஞ்சங்கு mullañ-caṅku, *n.* <id.+ சங்கு². A conch armed with spikes; முட்களையுடைய சங்குவகை. (W.)

முள்ளடி mul-l-aṭi, *n.* <id.+அடி. Clue; trace; துப்பு. *Loc.*

முள்ளடிக்கூலி mullaṭi-k-kūli, *n.* <முள்ளடி+. Payment for furnishing clue, as to a theft; துப்புக்கூலி. *Loc.*

முள்ளந்தண்டு mullan-taṇṭu, *n.* <முள் + தண்டு². Vertebral column, backbone, spine; முதுகிலுள்ள நடு எலும்பு. (C. G.)

முள்ளந்தண்டுக்கொடி mullan-taṇṭu-k-koṭi, *n.* <முள்ளந்தண்டு+. Spinal cord; முள்ளந்தண்டிற்குள் அமைந்த நரம்புச்சவ்வு. (இங். வை.)

முள்ளந்திருக்கை mullan-tirukkai, *n.* <முள்+. 1. Sting-ray, greenish, attaining 5 ft. in length and 2 ft. across the disc, *Urogymnus asperrimus;* பச்சைநிறமுடையதும் குறுக்கில் 2 அடியும் நீளத்தில் 5 அடியும் வளர்வதுமான திருக்கைவகை. 2. Sea-fish, pinkish, attaining 8 in. in length, *Halieutaea stellata;* வெண்சிவப்பு நிறமும் 8 அங்குலம் வரை வளர்ச்சியுமுடைய கடல் மீன்வகை.

முள்ளம்பலாச்சை mullam-palāccai, *n.* <id.+. 1. Sea-fish, light brown, attaining 2 ft. in length, *Diodon hystrix,* as covered with spines; வெளிறின பழுப்பு நிறமுள்ளதும் இரண்டடி வரை வளர்வதுமான கடல்மீன்வகை. 2. Sea-fish, brown or black, attaining 13 in. in length, *Tetrodon patoca;* பழுப்பு அல்லது கறுப்பு நிறமுடையதும் 13 அங்குலம் வரை வளர்வதுமான கடல் மீன்வகை.

முள்ளம்பன்றி mullam-panri, *n.* <id.+. [T. *mullampandi,* M. *mullampanni.*] Porcupine, *Hystrix hirsutirostris;* மேலே முள் அடர்ந்துள்ள பன்றிவகை. (பதார்த்த. 855.)

முள்ளன்பலாச்சை mullan-palāccai, *n.* See முள்ளம்பலாச்சை.

முள்ளாங்கத்தரி mullāṅ-kattari, *n.* See முள்ளங்கத்தரி. (மூ. அ.)

முள்ளாறு mullāṟu, *n.* <முள்+. Silvery sea-fish. See இராமழுழியன்.

முள்ளி¹ mulli, *n.* <id. [T. *mulaku,* K. M. *mulli.*] 1. Thorny plant; முள்ளுள்ள செடி. (நன். 62, உரை.) 2. Indian nightshade, m. sh., *Solanum indicum;* கத்தரிவகை. முளரிச் செழுமலரோன் (திவ். இயற். சிறிய. ம. தனியன்). 3. Nail dye, *Barleria;* மருதோன்றி. (L.) 4. Holly-leaved bear's-breech. See கழுதைமுள்ளி. 5. Fragrant screw-pine. See தாழை, 1. கூர்முண்முள்ளி (அகநா. 26) 6. Toddy; கள். (பரி. அக.)

முள்ளி² mulli, *n.* See முளி³, 3.

முள்ளிக்கீரை mulli-k-kīrai, *n.* <id.+. See முட்கீரை. (மூ. அ.)

முள்ளிடுக்கி mul-l-iṭukki, *n.* <id.+. See முள்வாங்கி. (W.)

முள்ளிப்பூ mulli-p-pū, *n.* A masquerade dance; வரிக்கூத்துவகை. (சிலப். 3, 13, உரை.)

முள்ளியார் mulliyār, *n.* Author of Ācāra-k-kōvai. See பெருவாயின்முள்ளியார்.

முள்ளிலவம் mul-l-ilavam, *n.* <முள்+. See முள்ளிலவு.

முள்ளிலவு mul-l-ilavu, *n.* <id.+. Red flowered silk-cotton tree, l. tr., *Bombax malabaricum;* இலவுவகை. (சீவக. 788.)

முள்ளிழைப்புளி mul-l-iḻaippuḷi, *n.* <id. +. Plane with serrated bit; இழைப்புளிவகை.

முள்ளுக்கடம்பு mullu-k-kaṭampu, *n.* <id.+. Nepal berberry, m. sh., *Berberis nepalensis;* செடிவகை. (L.)

முள்ளுக்கடம்பை mullu-k-kaṭampai, *n.* <id.+. See முள்ளுக்கடம்பு. (L.)

முள்ளுக்கத்திரி mullu-k-kattiri, *n.* <id. +. See முள்ளங்கத்தரி. *Loc.*

முள்ளுக்கரப்பன் mullu-k-karappan, *n.* <id. +. See முள்ளுக்கரப்பான். (W.)

முள்ளுக்கரப்பான் mullu-k-karappāṉ, *n.* <id.+. A kind of eruption with pimples; மேற்றோல்மீது படரும் நோய்வகை. *Colloq.*

முள்ளுக்களா muḷḷu-k-kaḷā, *n.* <id.+. 1. Fascicled leaved spinous berberry, m. sh., *Berberis aristata;* களாச்செடிவகை. (Nels.) 2. See முள்ளுக்கடம்பு. (L.)

முள்ளுக்காரை muḷḷu-k-kārai, *n.* <id.+. Common emetic nut, s. tr., *Randia dumetorum;* சிறுமரவகை. (W.)

முள்ளுக்கீரை muḷḷu-k-kīrai, *n.* <id.+. See முட்கீரை. (W.)

முள்ளுக்கூலி muḷḷu-k-kūli, *n.* <id.+. See முள்ளடிக்கூலி. *Loc.*

முள்ளுச்சங்கு^{1} muḷḷu-c-caṅku, *n.* <id. +சங்கு^{1}. Mistletoe berry thorn. See சங்கஞ்செடி. (L.)

முள்ளுச்சங்கு^{2} muḷḷu-c-caṅku, *n.* <id. +சங்கு^{2}. See முள்ளஞ்சங்கு. *Loc.*

முள்ளுச்சம்பா muḷḷu-c-campā, *n.* <id. +. A kind of paddy; நெல்வகை. (*நாமதீப.* 351, *குறிபபு.*)

முள்ளுச்சிரங்கு muḷḷu-c-ciraṅku, *n.* <id.+. Urticoria. See நாய்முள். (M. L.)

முள்ளுச்சீத்தா muḷḷu-c-cīttā, *n.* <id.+. Sour sop, s. tr., *Anona muricata;* மரவகை. (L.)

முள்ளுச்சுண்டெலி muḷḷu-c-cuṇṭeli, *n.* <id.+. Spiny mouse, a kind of field mouse, as having fine spinous fur; முட்போன்ற மயிருள்ள வயற்சுண்டெலிவகை.

முள்ளுடுப்பை muḷ-ḷ-uṭuppai, *n.* <id.+. Woody-fruited jujube. See கொட்டையிலந்தை. (L.)

முள்ளுடைமூலம் muḷ-ḷ-uṭai-mūlam, *n.* <id.+உடை+. 1. Thorny plant; முட்செடிப் பொது. (*பிங்.*) 2. Spiked root; முட்கள்பொருந்திய வேர். (W.)

முள்ளுநாயகம் muḷḷu-nāyakam, *n.* <id. +. A creeper whose leaves are used in extracting thorns; தைத்த முள்ளை வெளிப்படுத்துந் துணமுள்ள இலைகளையுடைய கொடிவகை.

முள்ளுப்படுகளம் muḷḷu-p-paṭukaḷam, *n.* <id.+. Bed of thorns or spikes on which people lie in fulfilment of vows; பிரார்த்தனை நிறைவேற்றுதற்கு மக்கள் படுக்கும் முள்ளாலான படுக்கை. *Loc.*

முள்ளுப்பலா muḷḷu-p-palā, *n.* <id.+. A kind of jack-fruit tree; பலாமரவகை. (*யாழ். அக.*)

முள்ளுப்பலாச்சி muḷḷu-p-palācci, *n.* <id.+. Sea-porcupine, light brown, attaining $2\frac{1}{3}$ ft. in length, *Diodon hystrix;* வெளிறின பழுப்பு நிறமுள்ளதும் $2\frac{1}{3}$ அடி நீளம் வளர்வதுமான கடல் மீன்வகை.

முள்ளுப்போட்டடை-த்தல் muḷḷu-p-pōṭṭaṭai-, *v. tr.* <id.+போடு-+. To hedge with thorny shrubs; முள்ளுடைய பூண்டுகளைக் கொண்டு வேலிவைத்தல். (W.)

முள்ளுப்போடு-தல் muḷḷu-p-pōṭu-, *v. intr.* <id.+. To throw obstacles in one's way; இடையூறு செய்தல்.

முள்ளுமுருக்கு muḷḷu-murukku, *n.* <id. +. 1. East Indian coral tree, m.tr., *Erythrina indica;* மரவகை. (L.) 2. Coral tree of the Eastern Ghats; வெள்ளைக்கலியாணமுருக்கு. (L.) 3. Coral tree of the Western Ghats. See கிஞ்சுகம், 1. (L.) 4. Palas tree. See பலாசம்^{1}, 4. 5. See முள்ளுமுருங்கை, 1.

முள்ளுமுருங்கை muḷḷu-muruṅkai, *n.* <id.+. 1. Holly-leaved berberry, m. tr., *Berberis nepalensis;* மரவகை. (L.) 2. See முள்ளுமுருக்கு, 1, 2, 3, 4.

முள்ளுவெள்ளரி muḷḷu-veḷḷari, *n.* <id. +. See முள்வெள்ளரி.

முள்ளுவேங்கை muḷḷu-vēṅkai, *n.* <id. +. Spinous kino-tree. See மலைவேங்கை. (L.)

முள்ளுளி muḷ-ḷ-uḷi, *n.* <id.+. Stone-cutter's smoothing chisel; கற்றச்சரின் உளிவகை.

முள்ளூர்மலை muḷḷūr-malai, *n.* A mountain belonging to Malaiyamāṉ Tirumuṭi-k-kāri; மலையமான்திருமுடிக்காரியினுடைய மலை. (*புறநா.* 123.)

முள்ளெலி muḷ-ḷ-eli, *n.* <முள்+. A hedge-hog, *Erinaceus micropus;* எலிவகை. (M. M. 290.)

முள்ளெலும்பு muḷ-ḷ-elumpu, *n.* <id.+. 1. Vertebra; முள்ளந்தண்டின் எலும்பு. (இங். வை.) 2. See முதுகெலும்பு. *Loc.*

முளகரணை muḷakaraṇai, *n.* [T. *moḷaka-kūra.*] Lopez root. See மிளகுகரணை. (W.)

முளகரியம் muḷakariyam, *n.* West Indian pea-tree. See அகத்தி. (*சங். அக.*)

முளகி muḷaki, *n.* <மிளகி. A *campā* paddy of superior quality. See மிளகுச்சம்பா.

முளரி muḷari, *n.* perh. முள்+அலரி. [T. *muḷalaru,* K. M. *muḷalar.*] 1. Lotus; தாமரை. *முளரிமுக நாகம்* (*சீவக.* 2870). (*பிங்.*) 2. Ten million crores. See பதுமம், 8. *கடாமுகத்த முளரிக்கணக்கவால்* (*கம்பரா. வானரரக.* 32). 3. Brahma's world; பிரமலோகம். (*தக்கயாகப.* 240, *உரை.*) 4. Bramble; முட்செடி. (*பிங்.*) 5. Jungle; காடு. (*பிங்.*) 6. Thorny twig, used by birds

in building nests; முள்ளுள்ள சுள்ளி. *முளரி யங் குடம்பை* (*நற்.* 384). 7. Firewood; விறகு. *தகரமுளரி நெருப்பமைத்து* (நெடுநல். 55). 8. Sacrificial fuel; சமிதை. (*யாழ். அக.*) 9. Fire; நெருப்பு. (*பிங்.*) 10. Firebrand; கடைக்கொள்ளி. (*பிங்.*) 11. Fever; காய்ச்சல். (*இராச வைத்.* 163.) 12. Subtlety; நுண்மை. (*சூடா.*)

முளரிப்பகை mulari-p-pakai, *n.* < *முளரி* +. Moon, as the enemy of the lotus; சந்திரன்.

முளரிப்பாவை mulari-p-pāvai, *n.* <id. +. Lakṣmī, as seated on a lotus; [*தாமரையில் இருப்பவள்*] இலக்குமி. *பவளவாய் முளரிப்பாவை* (*பாகவத.* 1, *பரிட்சித்துவின்.* 64).

முளரியான் mulariyāṉ, *n.* <id. Brahmā, as seated on a lotus; [*தாமரையில் இருப்பவன்*] பிரமன்.

முளவு mulavu, *n.* < *முள்.* 1. Porcupine, *Hystrix leucura;* முள்ளம்பன்றி. *முளவுமாத தொலைச்சிய* (புறநா. 325, 5). 2. Goad; முட்கோல். *முளவுகோல் கயிறுபற்றி* (*கந்தபு. சூர. வதை.* 45).

முளா[1] mulā, *n.* <id. See முளவு, 1. (*நாமதீப.* 221.)

முளா[2] mulā, *n.* cf. *mūlaka.* See முள்ளங்கி. (*மலை.*)

முளி[1]*-தல்* muli-, 4 *v. intr.* [K. *muli.*] 1. To dry; உலர்தல். *முளிமுதல் மூழ்கிய வெம்மை* (*கலித்.* 16). (*பிங்.*) 2. To burn; to be scorched; வேதல். *ஆரெயி லோரழ லம்பின் முளிய* (*பரிபா.* 5, 25). 3. To perish; கெடுதல். *முளிந்த தீவினையான்* (*விநாயகபு.* 22, 2). 4. To mature; முற்றுதல். *முளி புல்லுங் கானமுஞ் சேரார* (*ஆசாரக்.* 57). 5 To curdle; தோய்தல். *முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்* (*குறுந்.* 167).

முளி[2]*-த்தல்* muli-, 11 *v. intr.* < *முளி*[1]-. 1. To dry; உலர்தல். (*நாமதீப.* 757.) 2. To become dried; வறத்தல். (*யாழ். அக.*) 3. To become scorched; காய்தல். (*யாழ். அக.*)

முளி[3] muli, *n.* <id. 1. Dryness; உலர்ச்சி. *முளிவெள்ளெலும்பும்* (*தேவா.* 326, 6). 2. Faded condition; வாட்டம். (*பிங்.*) 3. That which is dry; வற்றியபொருள். *நெல்லிமுளி.*

முளி[4]*-தல்* muli-, 4 *v. intr.* prob. *மிளிர்*-. To boil up; பொங்குதல். *சாதம் முளிந்து வருகிறது.*

முளி[5] muli, *n.* cf. *முழி*[2]. 1. Joint of the body; உடல்மூட்டு. *திகழ்முச்சாணென்பு முளியற* (*தத்துவப்.* 133). 2. Knot in trees; மரக்கணு. (*யாழ். அக.*) 3. Ankle; கணுக்கால். (W.)

முளி[6] muli, *n.* < *முள்.* Thorny nail-dye. See செம்முள்ளி, 2. (*தைலவ. தைல.* 72.)

முளு-தல் mulu-, 4 *v. intr.* See முளி[4]-. *சோறு முளுந்துவருகிறது. Loc.*

முளை[1]*-த்தல்* mulai-, 11 *v. intr.* cf. *mūl.* [T. *molatsu*, K. *mole*, M. *mulai.*] 1. To spring; to grow, as horns, hair; to sprout, as shoots; to germinate, as seeds; முளைமுதலியன தோன்றுதல். *ஒன்றுய முளைத்தெழுந்து* (*திருவாச.* 10, 8). 2. To rise, appear, come to light; உதித்தல். *காலை ஞாயிறு கதிர்விரித்து முளைப்ப* (*மணி.* 8, 18).

முளை[2]*-தல்* mulai-, 4 *v. intr.* < *முளை*[1]-. See முளை[1]-. *அந்த விதை இன்னும் முளையவில்லை.*

முளை[3] mulai, *n.* < *முளை*[1]-. [T. *molaka*, K. *mole*, M. *mula*, Tu. *mule.*] 1. Shoot, tender shoot of trees or plants; seed-leaf; வித்தினின்று வெளிப்படுவது. (*சூடா.*) *வித்திய வெண்முளை* (*ஐங்குறு.* 29). 2. Tenderness; இளமை. *முளையமை திங்கள* (*கம்பரா. கும்பக.* 16). 3 Young tender plant; seedling; மரச்சன்று. *அதன்றாள் வழியே முளையோங்குப* (*சீவக.* 223). 4. See முளையான். *Colloq.* 5. Bamboo; மூங்கில். (*பிங்.*) 6. Son; மகன். (*பிங்.*) 7. Core of a boil; புண்முளை. *கட்டியில் முளை இன்னும் வெளிவரவில்லை.* 8. Piles. See மூலமுளை. 9. Club with knobs; தண்டாயுதம். (*பிங்.*) *முசுண்டியு முளையும* (*கம்பரா. பிரமாத்.* 108). 10. Peg, stake; முளைக்குச்சி. *குத்தா முளை செறித்த விதானத்து* (*பெருங். இலாவாண.* 5, 24). 11. Handle, as of a millstone; திரிகையின் கைப்பிடி. *Loc.* 12. Pivot, as of a millstone; திரிகையின் அச்சு. *Loc.* 13. Wedge-shaped piece of wood used for tightening or securing; பிளப்பில் அடிக்க உதவும் கூருடைய சிறு மரத்துண்டு. 14. Pivot, pin of door; கதவு முதலியவற்றின் குடுமி. 15. Staple of a padlock; நாதாங்கி மாட்ட உதவும் சதவுறுப்பு. (W.) 16. Die; முத்திரையச்சு. (*யாழ். அக.*) 17. An ancient coin; ஒரு பழைய நாணயம். 18. Sharp end or point; முனை. *முளைஞறழ் முளை யெயிற்று* (*கலித்.* 4).

முளைக்கட்டு-தல் mulai-k-kaṭṭu-, *v. tr.* < *முளை* +. To season pigeon-pea by mixing it with wet red loam, in preparing dholl; செம்மண் கொண்டு துவரையைப் பதப்படுத்துதல்.

முளைக்காற்கோதை mulai-k-kāṟ-kōtai, *n.* <id. + *கால்*[1] +. A garland of paddy-sprouts; நெல் முளைகளால் தொடுக்கப்பட்ட மாலை. *முளைக் காற் கோதை துயல்வர* (*பெருங். இலாவாண.* 5, 23).

முளைக்கீரை mulai-k-kīrai, *n.* <id. +. [T. *molakkūra.*] A kind of greens, *Amarantus blitum;* கீரைவகை. (*பதார்த்த.* 587.)

முளைக்குச்சி mulai-k-kucci, *n.* <id. +. Pin, as of a yoke; நுகத்திற் பூட்டுங்கோல். *Colloq.*

முளைக்குச்சு mulai-k-kuccu, *n.* <id. +. See முளைக்குச்சி. *Loc.*

முளைக்குடம் mulai-k-kuṭam, n. <id.+. Pot in which pulses are sown and allowed to sprout on auspicious occasions; பாலிகைக் குடம். முளைக்குடந் தூபம . . . வைம்மின் (திருவாச. 9, 1).

முளைக்கூச்சு mulai-k-kūccu, n. <id.+. See முளைக்குச்சி. (யாழ். அக.)

முளைக்கூர்ச்சு mulai-k-kūrccu, n. <id.+ kūrca. See முளைக்குச்சி. (W.)

முளைக்கொட்டு[1] mulai-k-koṭṭu, n. <id.+. 1. Ceremony of women taking the mulai-k-kuṭam to a river or tank and casting it away, as at the close of a karakam festival; கரக மெடுத்தல் முதலிய விழாவிறுதியில் மகளிர் பாலிகையை எடுத்துக் கொண்டுபோய் நீரில் விடுஞ் சடங்கு. Loc. 2. Singing and dancing by women around pots of growing sprouts; மகளிர் முளைப் பாலிகையைச் சுற்றி ஆடும் கும்மிக்கூத்து. (W.)

முளைக்கொட்டு[2]-தல் mulai-k-koṭṭu-, v. tr. <id.+. See முளைக்கட்டு-. Tinn.

முளைக்கோல் mulai-k-kōl, n. <id.+. Pole or stake set up on the ground; நட்டு நாட்டிய கோல். முளைக்கோற பெருநதிரை விளைதத விட்டத்து (பெருங். உஞ்சைக். 47, 45).

முளைகட்டல் mulai-kaṭṭal, n. <id.+. Ceremony of sowing nine kinds of seeds in pots and allowing them to sprout, as in weddings, festivals, etc.; விவாக முதலியவற்றில் நவதானியங்களைப் பாலிகைகளில் விதைக்கும் ஒரு சுபச்சடங்கு.

முளைகட்டு-தல் mulai-kaṭṭu-, v. tr. See முளைக்கட்டு-. (W.)

முளைகடாவு-தல் mulai-kaṭāvu-, v. <முளை+. (W.) intr. To drive a wedge; ஆப்படித்தல்.—tr. To restrain, restrict; அடக்கிவைத்தல்.

முளைத்தண்டு mulai-t-taṇṭu, n. <id.+. See முளைக்கீரை. Loc.

முளைத்தண்ணீர் mulai-t-taṇṇīr, n. <id. +. 1. Water for seedlings; நெல் முளைக்குப் பாய்ச்சிய நீர். 2. Water drained from fields after the sprouting of the seeds; முளைகிளம்பியதும் வயலினின்று வடிக்கு நீர். Loc.

முளைத்தாலி mulai-t-tāli, n. <id.+. A kind of gold bead for stringing in a necklace, shaped like tender shoots; கழுத்தணியிற் கோக்கும் முளைபோன்ற பொன்னுருபரணம். (திவ். திருப்பா. 7, வ்யா. பக். 99.)

முளைத்தாழ்வு mulai-t-tālvu, n. <id.+. Failure of seeds to sprout; விதை முளையாமை. (W.)

முளைத்தானியம் mulai-t-tāṉiyam, n. <id.+. 1. The nine kinds of grain. See நவதானியம். Loc. 2. Malt; grain steeped in water and dried in a kiln; நனைத்து முளையுண்டானபின் உலர்த்தி வறுத்த தானியம்.

முளைத்திங்கள் mulai-t-tiṅkaḷ, n. <id.+. Crescent moon; பிறைச்சந்திரன். முளைத்திங்கள் சூடி (தேவா. 257, 2).

முளைத்தேங்காய் mulai-t-tēṅkāy, n <id. +. Coconut that has sprouted before planting; முளை வெளிப்பட்ட தேங்காய். Colloq.

முளைதெளி-த்தல் mulai-teḷi-, v. intr. <id.+. 1. To perform the ceremony of sowing nine kinds of seeds in pots, as at weddings, festivals, etc.; சுபச்சடங்கிற் பாலிகைகளில் நவதானியம் விதைத்தல். Loc. 2. To sow a field with grains that have been allowed to sprout; முளைத்த விதையை வயலில் இடுதல். (W.)

முளைப்பயறு mulai-p-payaṟu, n. <id.+. Pulses which have just sprouted; முளையுடன் கூடிய பயறு.

முளைப்பருப்பு mulai-p-paruppu, n. <id. +. Dholl prepared from pigeon-pea seasoned by mixing it with wet red loam; முளைகட்டிய பருப்பு.

முளைப்பாரி mulai-p-pāri, n. <id.+. See முளைப்பாலிகை. Loc.

முளைப்பாலிகை mulai-p-pālikai, n. <id. +. Pot in which nine kinds of seeds are sown, as at weddings, festivals, etc.; சுபச்சடங்குகளில் நவதானியவிதை முளைக்கவைத்த மட்பாண்டம். வெண்டாமரை முளைப்பாலிகை (வெங்கைக்கோ. 97).

முளைமால் mulai-māl, n. <id.+. 1. Boundary fixed by pegs, marking the utmost spread of water in a tank; ஏரியில் நீர்பெருகும் அளவைக் குறித்தற்கு முளையடித்த எல்லைக்கட்டு. Loc. 2. A certain limit in the bed of a tank within which cultivation is prohibited; ஏரியின் உள்வாயிற் சாகுபடி செய்யக்கூடாதென வரையறுத்த வேல்லை. (R. T.)

முளைமூலம் mulai-mūlam, n. <id.+. Piles, fistula in ano; மூலநோய். (பதார்த்த. 416, உரை.)

முளையடி-த்தல் mulai-y-aṭi-, v. intr. <id. +. 1. To nail; to drive pegs; முளையை அடித்து உட்செலுத்துதல். 2. To coin; to stamp metal; நாணயத்தில் முத்திரை பதித்தல். (W.)

முளையரில் mulai-y-aril, n. <id.+. Thicket of bamboos; மூங்கிற்றூறு. முளையரிற்

பிணங்கிய முள்ளுடை யிலவத்து (பெருங். உஞ்சைக். 56, 9).

முளையாணி mulai-y-āṇi, *n.* <id.+. 1. Iron pin of a door; கதவு நின்றிடும் இரும்புக் குமிழ். (யாழ். அக.) 2. Staple; தாழ்ப்பாள்விழும் இரும்புக்கூடு. (W.)

முளையான் mulaiyāṉ, *n.* <id. Little child; சிறுகுழந்தை. இந்த முளையான் பேச்சை யார் கேட்கிறது. (W.)

முளையுருளி mulai-y-uruḷi, *n.* <id.+உருள்-. *Loc.* 1. Withered crops; வாடியழிந்த பயிர். 2. Person spoilt even in his boyhood; இளமையிற் கெட்டழிந்தவன்.

முளையெறி-தல் mulai-y-eṟi-, *v. intr.* <id. +. To sow grain that has been allowed to sprout; முளைத்தவிதையை வயலில் விசிறுதல்.

முற்கட்டு muṟ-kaṭṭu, *n.* <முன்[1]+. (Mus.) The opening section of a song; பாட்டின் ஆரம்பத்திலுள்ள எடுப்பு. முற்கட்டும் பாகமுஞ் சீர்மேளை களும் (விறலிவிடு. 493).

முற்கந்தெறி-த்தல் muṟkan-teṟi-, *v. intr.* <முற்கம்[1]+. 1. To cluck, as a lizard; பல்லி கொட்டுதல். 2. To make a sound with the tongue, like the cluck of a lizard; நாவாற்கொட்டுதல். (W.) 3. To express disapprobation by a clucking sound; சம்மதமின்மைக் குறிப்பாகச் சத்தங் காட்டுதல். (யாழ். அக.)

முற்கம்[1] muṟkam, *n.* <முற்கு. 1. The cluck of a lizard; பல்லி செய்யும் ஒலி. 2. A sound made with the tongue, like the cluck of a lizard; நாவாற் கொட்டும் ஒலி. (W.) 3. Loud noise; கர்ச்சிதம். (யாழ். அக.)

முற்கம்[2] muṟkam, *n.* <*mudga*. 1. See முதிரை, 1. 2. Green gram. See சிறுபயறு. முற்கந் தருவாரும் (உத்தரரா. அசுவ. 30). (திவா.)

முற்கரம் muṟkaram, *n.* <*mudgara*. 1. See முசுண்டி. (பிங்.) முற்கரங்களு முசலமும் (கம்பரா. பிரமாத்திர. 108). 2. Large club; பெரிய தடி. (இலக். அக.) 3. Hammer; சம்மட்டி. (யாழ். அக.)

முற்கரவன் muṟkaravaṉ, *n.* prob. *mudgara*. Kubera; குபேரன். (திவா. MSS.)

முற்கலம் muṟkalam, *n.* See முத்கலை. (யாழ். அக.)

முற்காசு muṟkācu, *n.* cf. முத்தக்காசு. Sedge-tuber; கோரைக்கிழங்கு. (சங். அக.)

முற்கார் muṟ-kār, *n.* <முன்[1]+. A *kār* paddy sown in Āvaṇi; ஆவணியில் விதைக்கும் கார்ப்பயிர். (G. Sm. D. I, i, 213.)

முற்கான்னம் muṟkāṉṉam, *n.* <*mudgānna*. A kind of preparation made of rice, green-gram and coconut-scrapings; அரிசியும் சிறுபயறும் தேங்காய்த்துருவலுங் கூட்டிப் பக்குவப் படுத்தின சோறு. (இலக். அக.)

முற்கு muṟku, *n.* <முக்கு[4]. 1. Inarticulate sound; எழுத்திலா ஒலி. முற்கு வீளை முதலியன (தொல். சொல். 1, உரை). 2. See முற்கம்[1], 2. (W.)

முற்குலத்தோர் muṟ-kulattōr, *n.* <முன்[1] +. Brahmins; பார்ப்பார். (பிங்.)

முற்குளம் muṟ-kuḷam, *n.* <id.+. The 20th *nakṣatra*. See பூராடம். (பிங்.)

முற்கூறு muṟ-kūṟu, *n.* <id.+கூறு[2]. 1. Earlier part; முன்பகுதி. முற்கூற்றுல் . . . உபாய மாகப் பற்றுகிறது (அஷ்டாதச. முமுட்சுப். தலை. 6). 2. Beginning; துவக்கம். (யாழ். அக.)

முற்கொழுங்கால் muṟ-koḻuṅkāl, *n.* <id. +. The 25th *nakṣatra*. See பூரட்டாதி. (சூடா.)

முற்கொழுங்கோல் muṟ-koḻuṅkōl, *n.* <id.+. See முற்கொழுங்கால். (யாழ். அக.)

முற்கொள்(ளு)-தல் muṟ-koḷ-, *v. tr.* <id. +. To go ahead of; to anticipate; முந்துதல். முற்கொண்டா னரக்க னென்று (கம்பரா. நாகபாச. 116). இவரென்மேல் விடாமுன் முற்கொள்வேன் (கம்பரா. பிரமாத். 85).

முற்கொளுங்கால் muṟ-koḷuṅkāl, *n.* <id. +prob. கொள்-+. See முற்கொழுங்கால். (இலக். அக.)

முற்கோபம் muṟ-kōpam, *n.* See முன் கோபம்.

முற்சனி muṟ-caṉi, *n.* <முன்[1]+. The 10th *nakṣatra*. See மகம். (நாமதீப. 107.)

முற்சீர் muṟ-cīr, *n.* <id.+. See முதற்சீர். அசையிரண்டொன்றின் முற்சீர (வீரசோ. யாப். 1).

முற்பக்கம் muṟ-pakkam, *n.* <id.+. 1. The front part; முன்பகுதி. 2. Bright fortnight, as the earlier part of a lunar month; [சாந்திர மான மாதத்தின் முற்பகுதி] வளர்பிறை. (பரிபா. 11, 31, உரை.)

முற்பகல் muṟ-pakal, *n.* <id.+. [T. *munpagalu*.] 1. Forenoon; பகலின் முற்பகுதி. பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் (குறள், 319). 2. The preceding day; முன்னாள். (W.) 3. Former time; முற்காலம். (W.)

முற்படர்-தல் muṟ-paṭar-, *v. intr.* <id. +. 1. To go before; முன்னேசெல்லுதல். 2. To become exalted; மேம்படுதல். முற்படர்ந்த மொழி மிகுத்தன்று (பு. வெ. 9, 32).

முற்படு-தல் mur-paṭu-, v. intr. <id.+. 1. To precede, go ahead; முந்துதல். 2. To come before; முன் அமைதல். பிற்படக் கிளவாா முற்படக் கிளத்தல் (தொல். சொல். 286). 3. To meet; எதிர்ப்படுதல். சிறுமந்தி முற்பட்ட தந்தையை (நாலடி, 237).

முற்பணம் mur-paṇam, n. <id.+. Advance, earnest money; அச்சாரம். முற்பணந் தாரும் (திருப்பு. 730).

முற்பவம்[1] mur-pavam, n. <id.+பவம்[1]. Past birth; முற்பிறப்பு. முற்பவத்திற் செய்த வினை (வாக்குண. 20).

முற்பவம்[2] mur-pavam, n. <id.+பவம்[2]. (யாழ். அக.) 1. Past sins of the present birth; இப்பிறவியில் முன்செய்த பாவம். 2. Sins of past birth; முற்பிறவியிற்செய்த பாவம்.

முற்பழி mur-paḻi, n. <id.+. See முற்பவம்[2]. (யாழ். அக.)

முற்பனி mur-paṉi, n. See முன்பனி. (பிங்.)

முற்பா mur-pā, n. <முன்[1]+. Veṇpā, as the first of the four main metres in Tamil; நால்வகைப் பாவினுள் முதலாவதாகிய வெண்பா. (சூடா.)

முற்பாடன் murpāṭaṉ, n. <முற்பாடு. One who is ahead of others or first; முற்பட்டவன். ஆாத்திக்கு முற்பாடனாய் (திவ். திருப்பா. 4, வ்யா. பக். 73).

முற்பாடு mur-pāṭu, n. <முன்[1]+படு-. 1. Being first or in advance; முற்படுகை. இன்பனுமிடத்தில் முற்பாடு இங்கேயாய் (ஈடு, 4, 5, 8). 2. Front; முன்னிடம். பகைவாாநாட் டெல்லையின் முற்பாடு சென்றுவிட்ட தூசிப்பெரும்படை (பதிற்றுப். 33, 5, உரை).

முற்பாடை murpāṭai, n. A defect in cattle; மாட்டுக்குற்றம். (பெ. மாட். 21.)

முற்பாதி mur-pāti, n. <முன்[1]+. The first or earlier half; முந்திய பகுதி. (W.)

முற்பார் mur-pār, n. <id.+prob. பால். See முற்பாதி. (யாழ். அக.)

முற்பால் mur-pāl, n. <id.+. See முன்பு. முற்பாலிகழ்ந்தவும் (பெருங். இலாவாண. 11, 162).

முற்பாற்கிழமை murpāṟ-kiḻamai, n. <முற்பால்+. Long-standing attachment, enduring friendship; பழமையான நட்புரிமை. முற்பாற் கிழமை முதலற வின்றி (பெருங். மகத. 18, 25).

முற்பிறப்பு mur-piṟappu, n. <முன்[1]+. Past birth; முன்சன்மம்.

முற்பூண் mur-pūṇ, n. <id.+. Marriage-badge; திருமங்கலியம். தெம்மாதர் முற்பூண்கவா முன்னன் (பாரத. திரௌபதி. 87).

முற்பெரியான் mur-periyāṉ, n. <id.+. Brahmā; பிரமன். முற்பெரியானை யாகத்தருபவை யான் முடிநது (சீவக. 2464).

முற்போக்கு mur-pōkku, n. <id.+. Progress, advancement; முன்னேற்றம். Mod.

முற்ற muṟṟa, adv. <முற்று-. [T. muṭṭa.] 1. Entirely, fully, totally; முழுதும். முற்ற மண்ணிடந்தாவி (திவ். நாய்ச். 2, 9). 2. Exceedingly; மிகவும். முற்றமூத்து (திவ். பெரியதி. 1, 3, 1).

முற்றகப்படு-தல் muṟṟakappaṭu-, v. intr. <id.+. [T. muṭṭaḍipaḍuta.] To be caught in a siege; முற்றுகையில் அகப்படுதல். முற்றகப்பட்டோனை முற்றவிடுத்தலும் (தொல. பொ. 181, உரை).

முற்றத்திற்குப்போ-தல் muṟṟattiṟku-p-pō-, v. intr. <முற்றம்+. To make water; ஒன்றுக்குப்போதல். Brāh.

முற்றத்துற-த்தல் muṟṟa-t-tuṟa-, v. tr. <முற்ற+. To renounce completely; முழுதுந் துறத்தல். முற்றத்துறந்தார் வீட்டினைத் தலைப்பட்டார் (குறள், 348, உரை).

முற்றம் muṟṟam, n. prob. முன்[1]. 1. Courtyard of a house; வீட்டின் முன்னிடம். மணன் மலிமுற்றம் புக்க சான்றோா (புறநா. 178). 2. Inner yard of a house; தொட்டிமுற்றம். 3. Esplanade, open space; ஊரின் வெளியிடம். வஞ்சி முற்றம் வயக்கள னாக (புறநா. 373). 4. Expanse; பரப்பு. ஏந்து முலைமுற்றம் வீங்க (அகநா. 51).

முற்றமுடிய muṟṟa-muṭiya, adv. <முற்ற+முடி-. To the very end; கடைசிவரை. (W.)

முற்றல் muṟṟal, n. <முற்று-. [K. muttu.] 1. Maturing; முதிர்ச்சி. 2. Anything that is fully grown or developed; முற்றியது. முற்றன் மூங்கில் (திவ். திருச்சந். 52). 3. Hardness, as of the core of a tree; வைரங்கொள்ளுகை. (சூடா.) 4. Fruit almost ripe; பழுக்குந்தருவாயிலுள்ள முற்றியகாய். முற்றற் சிறுமந்தி . . . குற்றிப்பறிக்கும் (நாலடி, 237). 5. Completing; ending; முடிகை. (சூடா.) 6. Strength; திண்மை. முற்றல் யானை (திவ். திருச்சந். 52). 7. Old age; மூப்பு. (சூடா.) 8. See முற்றுகை. அரணமுற்றலும (தொல். பொ. 65). 9. Surrounding, encircling; வளைவு. (யாழ். அக.) 10. Hating; வெறுக்கை. (யாழ். அக.)

முற்றவிடு-தல் muṟṟa-viṭu-, v. tr. <id.+. 1. To allow to mature or ripen, as fruits; முதிர விடுதல். Colloq. 2. See முற்றத்துற-. மற்றவன் பாசங்கள் முற்றவிட்டு (திவ். திருவாய். 8, 2, 11).

முற்றவும் muṟṟavum, adv. <id. See முற்ற, 1. வீடுமின் முற்றவும் (திவ். திருவாய். 1, 2, 1).

முற்றவெளி murra-veḷi, n. <முற்றம் + வெளி. Open space; esplanade; வெளியிடம். திருமுற்றவெளி.

முற்றவை[1] murravai, n. <முற்று- + அவை. Assembly of wise men; அறிவால் முதிர்ந்தோர் கூடிய சபை. கற்றோர் மொய்த்த முற்றவை நடுவண (பெருங். உஞ்சைக். 36, 245).

முற்றவை[2] murravai, n. <id. + அவ்வை. [K. muttavve.] Grandmother; பாட்டி. நற்றவை யென்னைப் பெற்ற முற்றவை (தேவா. 186, 7).

முற்றளபெடை murraḷapeṭai, n. <முற்று +. (Pros.) Lengthening of sound by alapetai, in all the feet of a line; அடியின் எல்லாச் சீர்க் கண்ணும் அளபெடை வரத் தொடுப்பது. (யாப். வி. 48.)

முற்றறிவன் murrarivan, n. <id. +. God, as the omniscient; [எல்லாமறிந்தவன்] கடவுள்.

முற்றறிவு murrarivu, n. <id. +. Omniscience; முழுதுணரும் அறிவு.

முற்றன் murran, n. <id. Perfect being; பூர்ணன். முற்றிலாதானை முற்றனே யென்று மொழி யினும் (தேவா. 648, 9).

முற்றாமை murrāmai, n. <முற்று- + ஆ neg. 1. Incompleteness; முடிவுபெறாமை. (சங். அக.) 2. Impossibility; ஏலாமை. Colloq.

முற்றாய்தம் murrāytam, n. <முற்று +. The letter 'k' in its full quantity; தன்மாத்திரை யிற் குறைதலில்லாத ஆய்தவெழுத்து. முற்றாய்த மெட்டு (நன். 90, விருத்.).

முற்றாவுரு murrā-v-uru, n. <முற்று- + ஆ neg. +. Child; சிசு. ஓர் முற்றாவுருவாகி யாலம் பேரிலை யன்னவசஞ்செய்யு மம்மானே (திவ். திருவாய். 8, 3, 4).

முற்றி-த்தல் murri-, 11 v. tr. Caus of முற்று-. To complete, finish; முடித்தல். முடியாக் கருமமாயினும் முடியும் வாயின் முற்றித்து (பெருங். மகத. 1, 69).

முற்றிக்கை murrikkai, n. <முற்று-. [T. muttadi, K. muttige.] 1. See முற்றுகை, 1. (W.) 2. See முற்றுகை, 4. சாப்பாட்டுக்கு மெத்த முற் றிக்கையாயிருக்கிறது.

முற்றிகரம் murrikaram, n. <முற்று +. See முற்றியலிகரம். (சங். அக.)

முற்றிகை murrikai, n. See முற்றுகை, 1. Loc.

முற்றிமை murrimai, n. <முற்றி-. Mature wisdom; முதிர்ந்த ஞானம். முற்றிமை சொல்லின் (சீவக. 2511).

முற்றியலிகரம் murriyal-ikaram, n. <முற்று + இயல்- +. (Gram.) The letter 'i' in its full quantity or sound value; தனது மாத் திரையிற் குறையாத இகரம். (யாழ். அக.)

முற்றியலுகரம் murriyal-ukaram, n. <id. + இயல்- +. (Gram.) The letter 'u' in its full quantity or sound value; தனது மாத் திரையிற் குறையாத உகரம். (நன். 164, விருத்.)

முற்றியார் murriyār, n. <முற்று-. [T. muttadinstuvāru.] Besiegers; முற்றுகை செய்த வர். முற்றியார் முற்றுவிட (பு. வெ. 6, 25).

முற்றியைபு murriyaipu, n <முற்று + இயைபு. (Pros.) Rhyming of the last letter in all the feet of a line; அடியின் எல்லாச் சீர்க் கண்ணும் இயைபுவரத் தொடுப்பது. (யாப். வி. 48.)

முற்றில்[1] murril, n. prob. முற்று-. [K. moccal.] 1. Small winnow; சிறுமுறம். முற்றில் சிற்றிலுண்ணெருந்து வைத்து (சீவக. 1099). 2. The 16th naksatra, as resembling a winnow. See விசாகம். (திவா.) 3. A kind of shell-fish; சிப்பிவகை. (தொல். பொ. 584, உரை.)

முற்றில்[2] murril, n. <முன்றில். See முற்றம், 1. (யாழ். அக.)

முற்றிலும் murrilum, adv. <முற்று-. See முற்ற, 1. Colloq.

முற்றிழை murrilai, n. <id. +. Lady, as bedecked with ornaments of finished workmanship; [வேலைப்பாடு திருந்திய அணிகளை அணிந் தவள்] பெண். பெற்றிலேன் முற்றிழையை (திவ். பெரியதி. 3, 7, 8).

முற்றினவெள்ளை murrina-veḷḷai, n. <id. +. Gleet; மேகநோய்வகை. (M. L.)

முற்று[1]-தல் murru-, 5 v. [T. mudiuu, K. mudu, M. muttuga.] intr. 1. To become mature; to ripen; முதிர்தல். முற்றி யிருந்த கனி யொழிய (நாலடி, 19). 2. To be fully grown; முழுவளர்ச்சி பெறுதல். ஓர் முற்றாவுருவாகி (திவ். திரு வாய். 8, 3, 4). 3. To be advanced in age; முதுமையாதல். (பிங்.) 4. To abound, increase; பெருகுதல். முற்றெறிபோழ் பொங்கி (பு. வெ. 8, 16). 5. To become hardened, as the core of a tree; வைரங்கொள்ளுதல். (சூடா.) 6. To abide, dwell; தங்குதல். குடகடன் முற்றி (மதுரைக். 238). 7. To be fulfilled, as one's desire; நிறைவேறுதல். இமையோர்க்குற்ற குறைமுற்ற (கம்பரா. கடல்காண். 11). 8. To come to an end; to be finished; முடி தல். தமகரும முற்றுந் துணை (நாலடி, 231). 9. To die; இறத்தல். மாற்றமுந் தாரானு லின்று முற்றும் (திவ். பெரியாழ். 2, 10, 1). 10. To be similar; போலுதல். எழுமுற்றுந் தோளார் (சீவக. 1870).—tr.

1. To complete, finish; செய்துமுடித்தல். வேள்வி முற்றி (புறநா. 15). 2. To destroy, kill, அழித்தல். முற்றினன முற்றின னென்று முனபுவந்து (கமபரா. குமபகா. 311). 3. [K. muttu.] To surround; சூழ்தல். பாணமுற்றுக நின் ஞணமகி ழிருக்கை (புறநா. 29). 4. [K. muttu.] To besiege, blockade; வளைத்தல். முற்றிய வகத்தோன வீழ்ந்த நொச்சியும (தொல். பொ. 68). 5. To approach, reach; அடைதல். அணிகிளர் ரகிக்கன் முற்றிய வெழிலி (இலக். வி. 754, உரை). 6. To get upon; மேற்கொள்ளுதல். சுளிமுகத் துவாவின முற்றி (ஞானா. 26). 7. To become expert in; தேர்தல். புரவிபபோருமு கரப் பறக் கற்று முற்றி (சீவக. 1678).

முற்று[2] murru, n. < முற்று-. 1. Perfection, completeness; பூர்ணம். முற்றிலாதானை முற்றனே யென்று மொழியினுங் கொடுபபாரிலை (தேவா. 648, 9). 2. That which is complete; பூர்ணமானது. (அக. நி.) 3. Ripeness; maturity; முதிர்ச்சி. கற்றை யீந்தின் முற்றுக்குலை யன்ன (நற். 174). 4. End, termination; முடிவு. (சூடா.) 5. Finite verb; வினைமுற்று. வினையொடு முடியினும் விளமபிய முற்றே (நன். 333). 6. See முற்றுகை. முற்றியார் முற்று விட (பு. வெ. 6, 25).

முற்றுகரம் murrukaram, n. < முற்று+. (Gram.) See முற்றியலுகரம். (நன். 94, உரை.)

முற்றுகை murrukai, n. < முற்று-. 1. Blockade, siege; கோட்டை முதலியவற்றை வளைக்கை. 2. Surrounding; சூழகை. 3. Completion; நிறைவேறுகை. 4. Distress, want; நெருக்கடி. (W.)

முற்றுச்சொல் murru-c-col, n. < முற்று +. (Gram.) Finite verb; வினைமுற்றாகிய பதம். (திருமுரு. 102, உரை.)

முற்றுணர்வு murrunarvu, n. < id.+. Omniscience; எல்லாமறியுந்தன்மை. முற்றுணர்வி னுதல். (சூடா.)

முற்றுத்தொடர்மொழி murru-t-totar-moli, n. < id.+. A complete sentence, as consisting of a subject and a predicate; எழுவாயும் பயனிலையுங்கொண்டு பொருள் முடிவுபெற்று நிற்கும் வாக்கியம். (யாழ். அக.)

முற்றுத்தொடை murru-t-totai, n. < id. +. (Rhet.) Versification in which mōnai, etc., occur in all the feet of an alavati verse; அளவடி நான்குசீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது. (இலக். வி. 723, உரை.)

முற்றுப்பெறு-தல் murru-p-peru-, v. intr. < id.+. To be finished; முடிவடைதல்.

மூத்திரவுப்பு mūttira-v-uppu, n. <மூத்திரம்+. Uric acid; மூத்திரத்திலுள்ள உப்பு. (பைஷஜ.)

மூத்திரவெரிச்சல் mūttira-v-ericcal, n. <id.+. Irritation of the bladder; சிறுநீர் வெளிவிடும்போது உண்டாம் எரிச்சல். (M. L.)

மூத்திராசயம் mūttirācayam, n. <mūtra+āśaya. Bladder; உடலில் மூத்திரந்தங்கும் உறுப்பு. (W.)

மூத்திராசயவாதரோகம் mūttirācaya-vātarōkam, n. <மூத்திராசயம்+. Inflammation of the bladder; மூத்திரப்பையின் வீக்கம்.

மூத்திராதிசாரம் mūttirāticāram, n. <mūtra+ati-sāra. Diabetes; நீரிழிவு. (இங். வை.)

மூத்திரோற்சங்கம் mūttirōṟcaṅkam, n. <mūtrōtsanga. Painful and bloody discharge of urine; நீர் இரத்தமாக இறங்குகை. (யாழ். அக.)

மூத்தோர் mūttōr, n. <மூ-. 1. Aged persons; elders; முதியவர். விருந்தினா மூத்தோா பசு சிறை பிள்ளை (ஆசாரக். 22). 2. Learned persons; பண்டிதர். (திவா.) 3. Ministers; மந்திரிமார். (திவா.)

மூத்தோன் mūttōṉ, n. <id. 1. Aged person; elderly man; senior; முதியவன். 2. Elder brother; அண்ணன். (பிங்.) 3. Gaṇēśa, as the eldest of Śiva's sons; விநாயகன். (பிங்.) 4. Man between 48 and 64 years age; 48 வயதுக்கு மேல் 64 வயதுக்குட்பட்ட மனிதன். (W.)

மூதண்டகஷாயம் mūtaṇṭa-kaṣāyam, n. Decoction of the root of Bermuda-grass and pepper; அறுகும் மிளகுஞ் சேர்ந்துச்செய்த கஷாயம். (W.)

மூதண்டம் mūtaṇṭam, n. <மூது+. 1. The universe, believed to be egg-shaped; பிரமாண்டம். உருகிககமலம விரிநதால் விரியும . . . இமமூதணடமே (அஷ்டப. திருவாயக. மா. 19). 2. Roof of the universe; பிரமாண்டத்தின் முகடு. (பிங்.)

மூதணங்கு mūtaṇaṅku, n. <id.+அணங்கு. Durgā; துர்க்கை. (சூடா.)

மூதம் mūtam, n. cf. kāma-mūta. Semen; இந்திரியம். (சங். அக.)

மூதரி-த்தல் mūtari-, 11 v. tr. <மூதலி-. See மூதலி-. *Colloq.*

மூதலி-த்தல் mūtali-, 11 v. tr. [T. mūdalintsu, K. mūdalisu.] To establish with evidence; to confront with proof; நிரூபித்தல். அவன் படியை நெஞ்சுக்கு மூதலிக்கிறா (ஈடு, 1, 10, 5).

மூதறி-தல் mūtaṟi-, v. intr. <மூது+. 1. To be ripe in wisdom; அறிவு முதிர்தல். 2. To know the past; பழமையான செய்திகளை அறிதல். மூதறிய மம்மனைமாா சொல்லுவாா (திவ். இயற். சிறிய. ம. 19).

மூதறிவாளன் mūtaṟivāḷaṉ, n. <மூதறிவு+. Man of ripe wisdom; அறிவு முதிர்ந்தோன். மூதறிவாளா முதல்வன் (திவ். பெரியாழ். 5, 2, 2).

மூதறிவு mūtaṟivu, n. <மூது+. Mature understanding, ripe wisdom; பேரறிவு.

மூதா[1] mūtā, n. <id.+ஆ[1]. Aged cow; வயதுசென்ற பசு. விளைதலை மூதா (பதிற்றுப். 13, 6).

மூதா[2] mūtā, n. cf. மூதாய்[2]. See இந்திர கோபம். (சூடா.)

மூதாக்கள் mūtākkaḷ, n. See முதாட்கள். (சங். அக.)

மூதாட்கள் mūtāṭkaḷ, n. < மூது + ஆள். Forefathers, ancestors; முன்னோர். (யாழ். அக.)

மூதாட்டி mūtāṭṭi, n. Fem. of மூதாளன். Aged woman; முதியவள். நரைமூதாட்டி யொருத் தியை (மணி. 20, 40).

மூதாதை mūtātai, n. < முது-மை + தாதை. Grandfather, பாட்டன். மூதாதை மாதாளும பாகத் தெந்தை (திருவாச 5, 30).

மூதாய்[1] mūtāy, n. < மூது + ஆய்[4]. Grandmother; பாட்டி.

மூதாய்[2] mūtāy, n. < ாயன்மூதாய. Cochineal insect. See இந்திரகோபம். (திவா.)

மூதாளன் mūtāḷaṉ, n. < மூது + ஆள்-. Aged man; முதியவன். நரைமூதாளா நாயிடக் குழிந்த (புறநா. 52).

மூதானந்தம் mūtāṉantam, n. < id. +. 1. Supreme Bliss; பேரானந்தம். மூதானந்தவாரி தியே (அருட்பா, v, முறையிட்ட. 9). 2. (Puṟap.) Theme in which the bystanders describe the great love of a wife dying immediately on her husband's death; தன்கணவன் இறந்தபோதே மனைவி உயிர்நீங்கிய பேரன்பை நினைந்து கண்டோர் கூறும் புறத்துறை. (தொல். பொ. 79.)

மூதிக்கம் mūtikkam, n. Wiry indigo. See சிவனார்வேம்பு. (மலை.)

மூதிசகம் mūticakam, n. See முதிக்கம். (மூ. அ.)

மூதியோலை mūti-y-ōlai, n. < மூரியோலை. Uneven palm-leaf. See முசரியோலை. *Nāñ.*

மூதிரி[1]-த்தல் mūtiri-, 11 v. tr. < மூதலி-. See முதலி-. *Loc.*

மூதிரி[2] mūtiri, n. cf. மூரி. Buffalo; எருமை. (சது.)

மூதிரை mūtirai, n. prob. ஆதிரை. 1. The sixth *nakṣatra;* திருவாதிரைநாள். (பிங்.) 2. Śiva; சிவபிரான். (சூடா.)

மூதில் mūtil, n. < மூது + இல்[1]. 1. Ancient family; பழங்குடி. 2. Ancient warrior-tribe; பழைய மறக்குடி. தமியன் வந்த மூதிலாளா (புறநா. 284).

மூதிற்பெண்டிர் mūtiṟ-peṇṭir, n. < மூதில் +. Women of warrior-tribes; மறக்குடி மகளிர். மூதிற்பெண்டிர் கசிந்தழ நாணி (புறநா. 19).

மூதின்முல்லை mūtiṉ-mullai, n. < id. +. (Puṟap.) Theme describing the spirit of valour manifested among women of warrior-tribes; மறக்குடியிற் பிறந்த ஆடவர்க்கேயன்றி அக்குடியி லுள்ள மகளிர்க்கும் மறமுண்டாதலைச் சிறப்பித்துக் கூறும் புறத்துறை. (பு. வெ. 8, 21.)

மூது mūtu, n. < முது-மை. [K. *mūdi.*] 1. Oldness; elderliness; முதுமை. மூதானவன் முன்னா முடிநதிடும் (கம்பரா. பிராட்டிகளங்காண. 18). 2. Gift; ஈகை. (அரு. நி.)

மூதுணர்-தல் mūtuṇar-, v. tr. < மூது +. To know thoroughly; to have ripe knowledge of; நன்றாகவுணர்தல். மூதுணர்ந்தவ ரன்றி மொழி வரோ (உபதேசகா. சிவபுண. 229).

மூதுணர்ந்தோர் mūtuṇarntōr, n. < மூதுணர்-. Persons of ripe knowledge; அறிவு முதிர்ந்தோர். (சூடா.)

மூதுணர்வு mūtuṇarvu, n. < id. Ripe knowledge or wisdom; முதிர்ந்த அறிவு. மூதுணர வின் மிக்கான் மதிவீடணன் (கம்பரா. அதிகாயன். 87).

மூதுரை mūturai, n. < மூது + உரை. 1. Proverb; பழமொழி. மூழை யுப்பறியாத தென்னு மூதுரையு மிலனோ (திவ். பெரியாழ். 3, 7, 4). 2. A didactic poem attributed to Auvaiyār; ஔவை யார் இயற்றியதாகக் கருதப்படும் ஒரு நீதிநூல். 3. The Vēdas; வேதம். முற்றுமோர்ந்தவா மூதுரை யாதத்மே (தாயு. பொன்னைமாதரை. 51).

மூதுவர் mūtuvar, n. < id. Elders; ancients; முன்னோர். விண்ணுட்டவர் மூதுவா (திரு விருத். 2).

மூதூர் mūtūr, n. < id. + ஊர். Ancient town; பழைய ஊர். பொற்கொடி மூதூரப பொழிலாட் டமாந்தாஙகு (சிலப. 14, 82).

மூதேவி mū-tēvi, n. < மூ- +. 1. Goddess of Misfortune, as the elder sister of Lakṣmi; [இலக்குமிக்கு மூத்தவள்] துர்ப்பாக்கியத்தின் அதி தேவதை (பிங்.) சீதேவி யாள்பிறந்த செய்யதிரு பாற்கடலில் மூதேவி யேன்பிறந்தாள் முன் (தனிப்பா. 1, 179, 1). 2. Deformed person; குரூபி. (W.)

மூதேவிகொடி mūtēvi-koṭi, n. < மூதேவி + Crow, as the emblem on the banner of Mūtēvi; [மூதேவியின் துவசம்] காகம். (பிங்.)

மூதேவிபடை mūtēvi-paṭai, n. < id. +. Broom, as the weapon of Mūtēvi; [மூதேவியின் ஆயுதம்] துடைப்பம். (பிங்.)

மூதேவியூர்தி mūtēvi-y-ūrti, n. < id. +. Donkey, as the vehicle of Mūtēvi; [மூதேவியின் வாகனம்] கழுதை. (பிங்.)

மூதை[1] mūtai, n. 1. cf. முதை. Ground cleared of wood and prepared for tillage; வெட்

டித்திருத்திய காடு. (அக. நி.) 2. See முதணங்கு. (W.)—adj. Old, past, ancient; முந்தை. மூதை வினை கடைக்கூட்ட (சிலப. 9, இறுதிவெண்பா).

மூதை² mūtai, n. cf. மூகை². Mistletoe berrythorn. See இசங்கு. (மலை.)

மூப்தி mūpti, n. <U. muftī. Muhammadan law officer who, in ancient days, expounded the law and supplied the Qāzi with precedents in difficult cases; முற்காலத்தில் முகம்மதிய நியாயாதிபதிக்குச் சட்டத்தைத் தெரிவித்துதவிய ஓர் உத்தியோகஸ்தன். (W.)

மூப்பர் mūppar, n. <மூப்பு. 1. Elders in age; superiors; பெரியோர். மூப்பரை யிகழ்ந்தேத மாகில் (அரிச். பு. நகர். 151). 2. Deacons; கிறிஸ்தவமதத்தலைவருள் ஒருவகையார். (W.)

மூப்பன் mūppaṉ, n. <id. 1. Headman, in some castes; ஒருசார்சாதிகளின் தலைமைக்காரன். 2. Title of Ilaivāṇiyar and other castes; இலைவாணியர் முதலிய சிலசாதிகளின் பட்டப்பெயர். வருஞ்சனிக்கு மூப்பராம (சினேந். 141). (E. T. v, 118.)

மூப்பான் mūppāṉ, n. <id. 1. Elder; முதியோன். 2. Śiva; சிவபிரான். மூப்பான் மழுவும் (தனிப்பா. 1, 32, 61).

மூப்பானசுவாமி mūppāṉa-cuvāmi, n. <id.+. A principal officer in Travancore; திருவிதாங்கூரில் ஓர் தலைமையுத்தியோகஸ்தர். (W.)

மூப்பி mūppi, n. <id. [M. mūppi.] 1. Aged woman; elderly woman; முதுமகள். மூப்பி மாராலே . . . நீராட்டி (சீவக. 1892, உரை). 2. Woman of distinction; mistress; தலைவி. (W.)

மூப்பு mūppu, n. <மூ-. [T. K. muppu, M. mūppu.] 1. Seniority in age; old age; முதுமை. முனிதக்க மூப்புள (நாலடி, 92). 2. Power of management; leadership; தலைமை. (யாழ். அக.) 3. Wilfulness; பிடிவாதம். Loc.

மூப்புக்கழிவு mūppu-k-kaḻivu, n. <மூப்பு +. 1. Dues payable to the village headman; கிராமத்தலைமைக்காரனுக்குச் சேருதற்குரிய பொருள். (M. M. 509.) 2. Deduction from the revenue on account of the dues paid to the village headman; வரித்தொகையிலிருந்து கிராமத்தலைமைக்காரனுக்கு உரியதைக் கொடுத்ததால் கழிக்கப்படும் பகுதி. Loc.

மூப்புக்களவு mūppu-k-kaḷavu, n. <id. +. See மூப்புக்கழிவு, 1. (W. G.)

மூப்புமுகனை mūppu-mukaṉai, n. <id. +. Influence due to age, rank, etc.; தலைமை பற்றிவருஞ் செல்வாக்கு. (J.)

மூய்¹-தல் mūy-, 4 & 5 v. [T. mūyu, K. muccu.] tr. 1. To cover; மூடுதல். (திவா.) பருமணன் மூஉய் (பரிபா. 10, 4). 2. To fill; நிரப்புதல். கயிறுகுறு முகவை மூயின (பதிற்றுப். 22).—intr. 1. To surround closely; நெருங்கிச் சூழ்தல். ஆயிரரு மகர்கள மூயினராக எண்ணலை (கந்தபு சகத்திரவா. 18). 2. To end; முடிதல். கதை மூய்ந்தது.

மூய்² mūy, n. <மூய்¹-. 1. Cover; மூடி. பொன்செய் பேழை மூய்திறந் தன்ன (குறுந். 233). 2. Flower basket; பூப்பெட்டி. முத்தரீச் சாந்தடைந்த மூஉய் (பரிபா. 10, 14).

மூய்³-தல் mūy-, 4 v. tr. prob. உமிழ்-. To spit; துப்புதல். Loc.

மூர்க்ககுணம் mūrkka-kuṇam, n. <mūrkha+. See மூர்க்கம், 1, 2, 3 Colloq.

மூர்க்கத்தனம் mūrkka-t-taṉam, n. <மூர்க்கம் +. See மூர்க்ககுணம். (W.)

மூர்க்கநாகம் mūrkka-nākam, n. <mūrkha + nāga. Whip-snake. See கண்குத்திப்பாம்பு, 1. (நிகண்டு.)

மூர்க்கநாயனார் mūrkka-nāyaṉār, n. A canonized Śaiva saint, one of 63; நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவர். (பெரியபு.)

மூர்க்கம் mūrkkam, n. <mūrkha. 1. Foolishness, stupidity; மூடத்தன்மை. (W.) 2. Rage, fury, wrath; கடுஞ்சினம். மூர்க்கத்தவனை நரகலந்த சிங்கமாய்க் கீண்ட (திவ். இயற். 2, 84). 3. Obstinacy; பிடிவாதம். (W.) 4. Opposition; hatred; பகை. (W.) 5. Violence, force; முரட்டுப் பலம். Loc. 6. Cobra; நாகப்பாம்பு (யாழ். அக.) 7. Thread worm. See நாக்குப்பூச்சி. (சங். அக.)

மூர்க்கவெறி mūrkka-veṟi, n. <மூர்க்கம் +. Fury, rage, ungovernable passion; அடங்காத கடுங்கோபம். (W.)

மூர்க்கன் mūrkkaṉ, n. <mūrkha. 1. Ignorant person; fool; மூடன். முதநெறி யறியாத மூர்க்கரொடு (திருவாச. 51, 1). 2. Angry person; கடுஞ்சினத்தன். மூர்க்கர்புர மூன்றெரி செய்தாய் (தேவா. 301, 6). (யாழ். அக.) 3. Obstinate man; பிடிவாதகுணமுள்ளவன். தன்னெஞ்சிற் றேற்றினதே சொல்லியிது சத்தியந்தேசவா லாற்ற தென்பார் மூர்க்கரா வார் (உபதேசகா. 71). 4. Arrogant person; அகங்காரன். 5. Mean person; கீழ்மகன். (சூடா.) 6. Cobra; நாகப்பாம்பு. (சூடா.) 7. Tree-snake. See கொம்பேறிமூக்கன். (W.)

மூர்க்கு mūrkku, n. <மூர்க்கம். 1. Obstinacy; பிடிவாதம். மூர்க்குப் பேசுகின்ற வசனென்று (திவ். பெரியாழ். 5, 1, 1). 2. Arrogance; pride; செருக்கு. தசமுடியுடை வேந்தனை மூர்க்கழித்த முதன் மூர்த்தியும் (தேவா. 522, 8).

மூர்க்கை mūrkkai, n. <mūrkhā. 1. Obstinate woman; பிடிவாதகுணமுள்ளவள். (W.) 2. Arrogant woman; அகங்காரி. (யாழ். அக.) 3. See மூர்க்கம், 1, 2, 3. (யாழ். அக.)

மூர்ச்சனம் mūrccaṉam, n. <mūrchana. 1. See மூர்ச்சை, 1. (யாழ். அக.) 2. See மூர்ச்சனை, 2. (சங். அக.)

மூர்ச்சனை mūrccaṉai, n. <mūrchanā. 1. See மூர்ச்சை, 1. முந்திய வுயிரபபுமற மூர்ச்சனையடைந்தான் (பிரபோத். 5, 22). 2. Sigh, deep breath; நெட்டுயிர்ப்பு. முரிவுற்றராகனின் மூர்ச்சனை செய்ப வரால் (சீவக. 1627). 3. (Mus.) The regulated rise and fall through the musical scale; modulation, one of ten kamakam, q.v.; கமகம் பத்தனு ளொன்று. (பரத. இராக. 24.)

மூர்ச்சி-த்தல் mūrcci-, 11 v. intr. <mūrchā. 1. To swoon, faint; பிரஞ்ஞை தவறுதல். அன்பினால் மூர்ச்சித்த வன்பருக்கு (தாயு. சுகவாரி. 4). 2. To sigh; பெருமூச்சுவிடுதல். துயர் சிறிதாறி மூர்ச்சியா (கம்பரா. சடாயுவு. 139).

மூர்ச்சிதம் mūrccitam, n. <mūrchita. (யாழ். அக.) 1. Ignorance; அறிவின்மை. 2. See மூர்ச்சை, 1, 2. 3. Height; உயரம்.

மூர்ச்சை mūrccai, n. <mūrchā. 1. Fainting, loss of consciousness, swoon, syncope; பிரஞ்ஞை தவறுகை. Colloq. 2. Languishing; வாட்டம். (யாழ். அக.) 3. (Mus.) See மூர்ச்சனை, 3. அந்தக் கீதத்தில மூர்ச்சை நன்றாயிருக்கிறது. 4. Sharpness; கூர்மை. கத்தியின் மூர்ச்சை.

மூர்ச்சைவாயு mūrccai-vāyu, n. <மூர்ச்சை +. A wind in the body, supposed to cause swooning; மூர்ச்சையுண்டுபண்ணுவதாகக் கருதும் வாயு. (W.)

மூர்த்தகோலம் mūrtta-kōlam, n. <mūrdha-khōla. Umbrella; குடை. (சங். அக.)

மூர்த்தசம் mūrttacam, n. <mūrdha-ja. Hair on the head; தலைமயிர். (யாழ். அக.)

மூர்த்தண்டம் mūrttaṇṭam, n. prob. mūrdhanya. Rage; unruliness; recklessness; உக்கிரமிதுதி. Loc.

மூர்த்தபாஷாணம் mūrtta-pāṣāṇam, n. A prepared arsenic; வைப்புப்பாஷாணவகை. (யாழ். அக.)

மூர்த்தம்[1] mūrttam, n. <mūrta. 1. That which has form, figure, shape or body; வடிவுடைப்பொருள். அன்மையின் மூர்த்தம் (ஞானா. 55, 2). 2. Body; உடல். (சூடா.) 3. Limb; உறுப்பு. (பிங்.)

மூர்த்தம்[2] mūrttam, n. <mūrdhan. Head; தலை. (பிங்.) முசல மற்றவன் மூர்த்தமேற் படுதலும் (சேதுபு. இலக்குமி. 21).

மூர்த்தம்[3] mūrttam, n. <muhūrta. See முகூர்த்தம். பிறந்த நாளும் பெற்ற மூர்த்தமும் (பெருங். நரவாண. 6, 73).

மூர்த்தரசம் mūrtta-racam, n. <mūrdha-rasa. Scum of boiling rice; கஞ்சிநுரை. (யாழ். அக.)

மூர்த்தவேட்டணம் mūrtta-vēṭṭaṇam, n. <mūrdha-vēṣṭana. 1. Turban; தலைப்பாகை. 2. Diadem; கிரீடம். (யாழ். அக.)

மூர்த்தன்னியம் mūrttaṉṉiyam, n. <mūrdhanya. 1. Chieftaincy, pre-eminence; தலைமை. 2. Great energy; enthusiasm; ஊக்கமிகுதி. (W.)

மூர்த்தன்னியன் mūrttaṉṉiyaṉ, n. <mūrdhanya. 1. Prominent man; பிரதானன். மும் மதமால் யானை மூர்த்தன்னியனை (விறலிவிடு. 24). 2. Person of great energy; ஊக்கமிகுதியுடையவன்.

மூர்த்தாபிசித்தன் mūrttāpicittaṉ, n. <mūrdhābhiṣikta. 1. Ksatriya; க்ஷத்திரியன். 2. Minister; மந்திரி. (யாழ். அக.)

மூர்த்தாபிஷேகம் mūrttāpiṣēkam, n. <mūrdhābhiṣēka. Consecration, as of a king; பட்டாபிஷேகம். (ரா.)

மூர்த்தி mūrtti, n. <mūrti. 1. Body; embodiment; உடல். ஒதுதொளிரு மூர்த்தியார் (குளா. குமார. 1). 2. Form; figure; வடிவம். அன்பெனு மூர்த்தியார (பெரியபு. மூர்த்தி. 9). 3. God; கடவுள். திரிமூர்த்தி. 4. Arhat; அருகன். (திவா.) 5. The Buddha; புத்தன். (திவா.) 6. Śiva; சிவன். (யாழ். அக.) 7. The Śakti of cattiyōcātam; சத்தியோசாதத்தின் சத்தி. (சதாசிவ.) 8. Ascetic; one who performs penance; தவவேடமுடையவன். (சீவக. 3071.) 9. Saint, sage, great personage, a term of reverence; பெரியார். ஒதுவார்மூர்த்தி. 10. Lord; தலைவன். (யாழ். அக.) 11. Matter; substance; பொருள். (யாழ். அக.) 12. Style; fashion; மாதிரி. (யாழ். அக.)

மூர்த்திகரம் mūrttikaram, n. <மூர்த்தி கரம். (யாழ். அக.) 1. Divine act; தெய்வச் செயல். 2. See மூர்த்தீகரம், 2.

மூர்த்திகன் mūrttikaṉ, n. <மூர்த்தி. (யாழ். அக.) 1. Skanda; குமாரக்கடவுள். 2. Vairava; வயிரவக்கடவுள்.

மூர்த்திசாதாக்கியம் mūrtti-cātākkiyam, n. <id. +. (Śaiva.) Manifestation of Śiva in a crystal-clear form, with a single face, three eyes, two hands and two legs; ஒரு முகமும் மூன்று

கண்களும் இரண்டு கையும் இரண்டு காலுமுடைய ராய்ப் படிகநிறத்தோடு தோன்றும் சிவபிரானது திருவுருவம். (தத்துவப. 191, உரை.)

மூர்த்திசெட்டிவெட்டு mūrtti-cetti-vettu, n. An ancient coin; பழைய நாணய வகை. (பணவிடு. 141)

மூர்த்திநாயனார் mūrtti-nāyaṉār, n. A canonized Śaiva saint, one of 63; நாயன்மார் அறுபத்துமூவருள் ஒருவர். (பெரியபு.)

மூர்த்திமான் mūrttimāṉ, n. < mūrti-mān nom. sing. of mūrti-mat. Image of God; அர்ச்சை வடிவம். (சங். அக.)

மூர்த்தினி mūrttiṉi, n. < mūrdhnī loc. sing. of mūrdhan. Head; தலை. (யாழ். அக.)

மூர்த்திகரம் mūrttīkaram, n. < mūrtī-kara. 1. That which assumes form; வடிவெடுத்துள்ளது. 2. Divinity; divine nature; தெய்வத் தன்மை. (W.)

மூர்த்திகரி-த்தல் mūrttīkari-, 11 v. intr. < id. To manifest; to assume form, as a deity; தெய்வமுதலியன வடிவுகொள்ளுதல்.

மூரல் mūral, n. [T. muriyu, murugu, K. muruva, M. mural, Tu muriya.] 1. Tooth; பல். (பிங்.) 2. Smiling; புன்சிரிப்பு. (பிங்.) முத்தவா ணகையின் மூரன் முகத்தியா (கம்பரா. கலியாட்டு. 20). 3. Boiled rice; சோறு. பசுந் தினை மூரல் பாலொடும் பெறுகுவிர் (பெரும்பாண். 168). 4 Milk; பால். (பரி. அக.)

மூரலி-த்தல் mūrali-, 11 v. intr. < மூரல். To laugh, smile; புன்முறுவல் செய்தல். மூரலித்த முகத்தினன் (உபதேசகா. அயமுகி. 61).

மூரன்முறுவல் mūraṉ-muṟuval, n. < id +. Smile; புன்சிரிப்பு. முட்போன்ற பல்லுவிளங்கும் மூரன்முறுவலையும் (பு. வெ. 11, ஆண்பாற். 9, உரை). மூரன் முறுவலொடு மதைஇய நோக்கே (குறுந். 286).

மூரி mūri, n. [T. K. M. Tu. muri.] 1. Strength; வலிமை. (பிங்.) மூரி வெஞ்சிலை (கம்பரா. கும்பகருண. 26). 2. Greatness; பெருமை. மூரிக்கடற்றானை (பு. வெ. 3, 3). (பிங்.) 3. Antiquity; பழமை. (W.) 4. Old age; கிழம். மூரி யெருத்தாலுழவு (இன். நாற். 21). 5. Buffalo; எருமை. மோட்டிள மூரி யுழக்க (கம்பரா. அகலிகை. 69). (பிங்.) 6. [M. mūri.] Ox, bullock; எருது. நெறிபடு மருப்பி னிருங்கண் மூரியொடு (பதிற்றுப். 67, 15). (பிங்.) 7. Taurus of the zodiac; இடபராசி. (திவா.) 8. Hump; திமில். (யாழ். அக.) 9. cf. முரி. Bit, part; துண்டம் வெண்ணிண மூரி யருள (புறநா. 393). 10. See மூகரியோலை. (W.) 11. Enmity; முரண். (பிங்.) 12. Laziness, indolence; சோம்பல். (பிங்.) 13. Shaking off laziness; சோம்பல் முரிப்பு. பொய்த்ததோா மூரியா னிமிர்ந்து (கம்பரா. உண்டாட். 35). 14. cf. முரி. Crack, breach; நெரிவு. (W.)

மூரிநிமிர்-தல் mūri-nimir-, v. intr. < மூரி +. To stretch oneself, as from laziness; நெட்டைமுரிப்பு முரித்தல். சிங்கம் . . . மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு (திவ். திருப்பா. 23).

மூரிபோ-தல் mūri-pō-, v. intr. < id. +. See மூரிநிமிர்-. நாஞ்சின் மூரி போகாது முடிக்கும் (பரிபா. 20, 54).

மூரிமுரி-த்தல் mūri-muri-, v. intr. < id. +. See மூரிநிமிர்- (W.)

மூரியோலை mūri-y-ōlai, n. < id. +. See மூகரியோலை Nāñ.

•மூருவம் mūruvam, n < mūrvā Bow-string hemp. See பெருங்குரும்பை. (பரி. அக.)

மூலக்கடுப்பு mūla-k-kaṭuppu, n. < மூலம் +. See மூலநோய், 1. (W.)

மூலக்கரப்பன் mūla-k-karappaṉ, n. < id. +. A spreading eruption; கரப்பன்வகை. (W.)

மூலக்கனல் mūla-k-kaṉal, n. < id. +. See மூலாக்கினி, 2. (தாயு. சித்தர்கண. 7).

மூலக்காணி mūlakkāṇi, n. A mineral poison. See கர்ச்சடபாஷாணம். (யாழ். அக.)

மூலக்காரன் mūla-k-kāraṉ, n. < மூலம் +. 1. Author of a work, as distinguished from its commentator; நூலின் மூலமியற்றியவன். 2. Person suffering from piles; மூலநோயுள்ளவன். (W.) 3. Short-tempered man, முன்கோபமுள்ளவன். (W.)

மூலக்கிரந்தி mūla-k-kiranti, n. < id. +. 1. A disease due to impure blood in the body; நல்ல இரத்தங் கெடுதலால் வரும் நோய்வகை. (W.) 2. Haemorrhoids. See மூலநோய், 1. (M. L.)

மூலக்கிராணி mūla-k-kirāṇi, n. < id. + கிராணி[2]. 1. Chronic enteritis, one of six kira-kaṇi, q.v.; அறுவகைக் கிராணி நோய்களுள் ஒன்று. (M. L.) 2. See மூலநோய், 1. (W.) 3. Dysentery; வயிற்றுளைச்சல். (W.)

மூலக்கூறு mūla-k-kūṟu, n. < id. +. Radical part or essential principle of a substance; பொருள்களின் அடிப்படையான தத்துவம். (W.)

மூலக்கொதி mūla-k-koti, n. < id. +. 1. Painful sensation from piles; மூலநோயால் உண்டாம் எரிச்சல். (W.) 2. See மூலநோய், 1.

மூலகச்சம் mūla-kaccam, n. < மூலை+. See மூலைக்கச்சம். Colloq.

மூலகணம் mūla-kaṇam, n. < mūla+. Tabes mesenterica, a disease; சீதமும் இரத்தமும் கலந்துவிழும் நோய்வகை. (பைஷஜ.)

மூலகதலம் mūlaka-talam, n. prob. mūlaka+dala. cf. mūlaka-parṇī. Indian coral tree. See முள்முருங்கை, 1. (மூ. அ.)

மூலகந்தம் mūla-kantam, n. perh. mūla +kanda. Cuscus-grass. See இருவேலி. (பிங.)

மூலகபல்லவம் mūlaka-pallavam, n. prob. mūlaka+pallava. cf. mūlaka-parṇī. Indian coral tree. See முள்முருங்கை. (மூ. அ.)

மூலகம் mūlakam, n. < mūlaka. 1. Radish. See முள்ளங்கி. (மலை.) 2. Tuber; கிழங்கு. (பிங.) 3. Worm-killer. See ஆடுதின்னாப்பாளை. (பரி. அக.)

மூலகவொளி mūlaka-v-oḷi, n. < id.+. See மூலாக்கினி, 2. சுடரிலகு மூலகவொளி மேவியருவி பாய (திருப்பு. 586).

மூலகன்மம் mūla-kaṉmam, n. < mūla+. (Šaiva.) Karma eternally clinging to the soul; அநாதியே ஆன்மாவைப் பற்றியுள்ள கன்மம். (சி. சி. 2, 39, சிவஞா.)

மூலகாரணம் mūla-kāraṇam, n. < id.+. First cause; முதற்காரணம். நானவற்றினுக்கு மூல காரணமாகுவன் (பிரபுலிங. மாயைகோ. 68).

மூலகுணக்காரன் mūla-kuṇa-k-kāraṉ, n. < id.+. See மூலக்காரன், 3. (W.)

மூலச்சூடு mūla-c-cūṭu, n. < id.+. 1. See மூலநோய், 1. 2. A disease of children. See கணைச்சூடு. 3. See மூலக்கொதி, 1. (W.)

மூலச்சோதி mūla-c-cōti, n. < id.+. God, as the Primeval Light; கடவுள். (W.)

மூலசம் mūlacam, n. < mūla-ja. Plants having tubers; கிழங்குள்ள செடிகொடி. (W.)

மூலட்டம் mūlaṭṭam, n. See மூலட்டானம். திருமூலட்டந் தொழுது (காஞ்சிப்பு. தழுவக்கு. 172).

மூலட்டானம் mūlaṭṭāṉam, n. < mūla+sthāna. The sacred shrine of Tiru-v-ārūr. See திருமூலட்டானம். (தேவா. 725, 4.)

மூலட்டானன் mūlaṭṭāṉaṉ, n. < மூலட்டானம். 1. The presiding deity at the Temple of Tiru-v-ārūr; திருவாரூரிற் கோயில்கொண்டுள்ள சிவபிரான். மணியாரூரத் திருமூலட்டானனுமே (தேவா. 720, 1). 2. See மூலவர்.

மூலத்தம்பம் mūla-t-tampam, n. prob. mūla+sthambha. A treatise on architecture; ஒரு சிற்பநூல். (W.)

மூலத்தனம் mūla-t-taṉam, n. < மூலம்+. See மூலதனம். (யாழ். அக.)

மூலத்தானம் mūla-t-tāṉam, n. < id. +sthāna. 1. Base, foundation; அடிப்படை. 2. Sanctum sanctorum of a temple; கருப்பக்கிருகம். 3. See மூலவர். (யாழ். அக.) 4. Royal residence, palace; அரசிருக்கை. (W.)

மூலத்திரவியம் mūla-t-tiraviyam, n. < id. +. See மூலதனம். (யாழ். அக.)

மூலத்தின்சாரம் mūlattiṉ-cāram, n. (யாழ். அக.) 1. See இந்துப்பு. 2. Urine; சிறுநீர்.

மூலத்துருவம் mūla-t-turuvam, n. < mūla+. (Astron.) Epoch-longitude, longitude of a planet; கிரகநிலையின் அளவுவகை.

மூலதனம் mūla-taṉam, n. < id.+dhana. 1. Capital; முதற்பொருள். 2. Hereditary property; பிதிரார்ச்சித நிதி. 3. Cash; ரொக்கப்பணம்.

மூலதோஹானி mūlatōhāṉi, n. < mūla-tō-hāni. See மூலநாசம்.

மூலநாசம் mūla-nācam, n. < mūla+. Eradication, complete destruction; அடியோடு அழிகை. மூலநாசமபெற முடிக்கு மொய்ம்பினான் (கம்பரா. கும்ப. 8).

மூலநாடி mūla-nāṭi, n. < id.+nāḍī. See சுழுமுனை. (திருமந். 622.)

மூலநாள் mūla-nāḷ, n. < மூலம்+. The 19th nakṣatra; பத்தொன்பதாம் நட்சத்திரம்.

மூலநோக்காடு mūla-nōkkāṭu, n. < id.+. See மூலநோய், 1. (W.)

மூலநோய் mūla-nōy, n. < id.+. 1. Piles; haemorrhoids; ஆசனத் துவாரத்திற் காணும் நோய்வகை. 2. (Šaiva.) An impurity eternally clinging to the soul. See ஆணவமலம். மூல நோய் தீர்க்கு முதல்வன் கணடாய் (தேவா. 845, 9).

மூலப்பகுதி mūla-p-pakuti, n. < id.+. 1. (Sāṅkhya.) Matter, the material cause in which the three guṇas are well-balanced; முக்குணங்களும் சமநிலையடையப்பெற்றதும் எல்லா வற்றுக்கும் மூலகாரணமும் நித்தியமுமான பிரகிருதி தத்துவம். எல்லாப்பொருளுந் தோன்றுதற் கிடமெனச் சொல்லுதன் மூலப்பகுதி (மணி. 27, 205-6). 2. (Šaiva.) The unmanifest primordial cause of the material world in the form of objects of experi-

ence, considered an evolute of *kalā-tattuvam*, one of seven *cuttācutta-tattuvam*, q. v.; சுத்தா சுத்ததத்துவம் ஏழனுள் போக்கியரூபமாய் நின்ற தத்துவப்பிரபஞ்சங்கட்கெல்லாம் மூலகாரணமாவதும் கலாதத்துவத்தின் விகுதியாவதுமான பிரகிருதி. (சி. போ. பா. 2, 2, பக். 160.)

மூலப்பட்டை mūla-p-paṭṭai, *n.* <id.+. Bark of Ceylon leadwort; சித்திரமூலத்தின் மேற்றோல். (சங். அக.)

மூலப்படை mūla-p-paṭai, *n.* <id.+. Soldiers who have been maintained from very early times or from time immemorial; reserved force, one of *aṟuvakai-p-paṭai*, q.v.; அறுவகைப் படையுள் நீண்டகாலமாகத் தொடர்ந்து வரும் படை (குறள், 762, உரை.) (சுக்கிரநீதி, 303.)

மூலப்பிரகிருதி mūla-p-pirakiruti, *n.* <id.+. See மூலப்பகுதி. (சங். அக.)

மூலப்பொருள் mūla-p-poruḷ, *n.* <id.+. 1. The primary elements; மூலகாரணமான பொருள். *Mod.* 2. God, as the Primal Being; கடவுள். (W.)

மூலபஞ்சாட்சரம் mūla-pañcāṭcaram, *n.* <*mūla*+. The mystic mantra of five letters, viz., *nama-civāya*; நமசிவாய என்ற ஐந்தெழுத்தாலாய மந்திரம். (W.)

மூலபண்டாரம் mūla-paṇṭāram, *n.* <id. +. Treasure kept in reserve; சேமவைப்பு. *எங்கள் பாண்டிப பிரான்றன் னடியவர்க்கு மூலபண்டாரம் வழங்குகின்றான்* (திருவாச. 36, 5).

மூலபதம் mūla-patam, *n.* <id.+. Etymon, radix or indivisible part of a word; சொல்லின் பகுதி. (W.)

மூலபரடை mūla-paraṭai, *n.* See மூலபருஷை. (S. I. I. vi, 13.)

மூலபரிஷை mūla-pariṣai, *n.* See மூலபருஷை. (I. M. P. Rd. 236.)

மூலபருஷை mūla-paruṣai, *n* <*mūla*+ *pariṣad*. Chief assembly; தலைமைச்சபை. *பெரும் பற்றப்புலியூர் மூலபருஷையாரில்* (S. I. I. iii, 214).

மூலபலதம் mūlapalatam, *n.* <*mūla-phala-da*. Jack tree. See பலா. (சங். அக.)

மூலபலம் mūla-palam, *n.* <*mūla-bala*. See மூலப்படை. *மூலபலவதைப்படலம்*. (கம்பரா.)

மூலபவுந்திரம் mūla-pavuntiram, *n.* <*mūla*+. Cancer of the rectum, fistula of the anus; மூலத்தில் உண்டாம் புண்கட்டி. (M. L.)

மூலபாடம் mūla-pāṭam, *n.* <id.+. Bare text without commentary; உரையில்லாத மூலம். (W.)

மூலபாடை mūla-pāṭai, *n.* <id.+ See மூலபாஷை. (W.)

மூலபாஷை mūla-pāṣai, *n.* <id.+. Primary or parent language; ஆதிமொழி. (W.)

மூலபுருஷன் mūla-puruṣaṉ, *n* <id.+. *Colloq.* 1. Progenitor, ancestor; குல முதல்வன். 2. One who is the cause; முக்கிய காரணமானவன்.

மூலபேரம் mūla-pēram, *n.* <id.+. See மூலவர். *Vaiṣṇ.*

மூலம் mūlam, *n.* <*mūla*. 1. Root; வேர். (திவா.) 2. Foot, base; அடி. *போதிமூலம் பொருந்தி* (மணி. 26, 47). 3. Bulb, tuber; கிழங்கு. (பிங.) *முதிரகனி மூல முனிக்கண மறுப்ப* (கல்லா. 38). 4. Origin; source; that which is original; ஆதி. *மூலவோலை மாட்சியிற் காட்ட* (பெரியபு. தடுத். 56). 5. Agency, means; வாயில். *இது அவன் மூலமாகக் கிடைத்தது.* 6. Cause, foundation; காரணம். (பிங.) *மூலமாகிய மும்மலம்* (திருவாச. 2, 111) 7. Importance, பிரதானம். *மூலவேள்விக்கு* (கம்பரா. பிரமாத். 164). 8. See மூலவர். (யாழ். அக.) 9. Tree; மரம். (பிங.) 10. The 19th *nakṣatra*; மூலநாள். (பிங.) 11. Text of a book; மூலபாடம். 12. Piles, haemorrhoids, *Prolapsus ani*; மூலநோய். (அக. நி.) 13. See மூலாதாரம், 2. 14. See மூலப்பகுதி. *மூலமுமறனும் . . . . கனலும* (பரிபா. 13, 24). 15. See மூலதனம். 16 Nearness; சமீபம். (யாழ். அக.) 17. Ownership; சொந்தம். (யாழ். அக.) 18. A mineral poison. See தாலம்பபாஷாணம். (யாழ். அக.) 19. Mercury; பாதரசம். 20. Ceylon leadwort; சித்திரமூலம்.

மூலமந்திரம் mūla-mantiram, *n.* <id.+. 1. The chief mantra; தலைமை மந்திரம். *மும்மைசா லுலகுக்கெல்லா மூலமந்திரத்தை* (கம்பரா. வாலிவ. 71). 2. The mystic syllable *Ōm*; பிரணவம்.

மூலமலம் mūla-malam, *n.* <id.+. (Śaiva.) See மூலநோய், 2. *அடங்குமே வெகுநி மூலமலவலி* (சிவதரு. சிவஞானயோ. 107).

மூலமுளை mūla-muḷai, *n.* <id.+. Haemorrhoidal shoots or tumours; மூலநோயில் ஏற்படும் முளைபோன்ற நுனி. (பதார்த்த. 416.)

மூலமொழி mūla-moḻi, *n.* <id.+. See மூலபாஷை.

மூலர் mūlar, *n.* A saint. See திருமூலர். *மூலர் முறை யொன்று* (சேக்கிழார். பு. 96).

மூலர்முறை mūlar-muṟai, *n.* <மூலர்+. Tirumantiram; திருமந்திரம். (சேக்கிழார். பு. 96.)

மூலரோகம் mūla-rōkam, *n.* <*mūla*+ *rōga.* See மூலநோய், 1. (பதார்த்த.)

மூலவர் mūlavar, *n.* <id. Idol fixed in the *sanctum sanctorum* of a temple, dist. fr. *uṟcavar;* கோயிலுட் கர்ப்பக்கிருகத்தில் ஸ்திரமாக வுள்ள மூர்த்தி.

மூலவல்லி mūla-valli, *n.* <id.+. Betel vine; வெற்றிலை. (பிங்.)

மூலவாசல் mūla-vācal, *n.* <id.+. 1. Entrance into the *sanctum sanctorum* of a temple; கோயிலுட் கர்ப்பக்கிருக வாயில். 2. Fontanelle. See பிரமரந்திரம். மூலவாசல் வெளிவிட்டு (திருப்பு. 399).

மூலவாயு mūla-vāyu, *n.* <id.+. Wind in the intestines, a disease; குடலில் வாதத்தினால் உண்டாம் நோய். (W.)

மூலவிக்கிரகம் mūla-vikkirakam, *n.* <id. +. See மூலவர். (W.)

மூலவியாதி mūla-viyāti, *n.* <id.+. See மூலநோய், 1. (W.)

மூலவிருள் mūla-v-iruḷ, *n.* <id.+. 1. (Advaita.) *Tamam*, the original darkness of the soul; ஆன்மாவை அநாதியே பற்றியிருக்குந் தமம். (W.) 2. (Śaiva.) The original impurity of the soul; ஆணவமலம். (யாழ். அக.)

மூலவுபத்திரவம் mūla-v-upattiravam, *n.* <id.+. See மூலநோய், 1. *Colloq.*

மூலவெதுப்பு mūla-vetuppu, *n.* <id.+. A disease of cattle; மாட்டுநோய்வகை. (மாட்டுவா. 158.)

மூலவெழுத்து mūla-v-eḻuttu, *n.* <id.+. 1. See மூலாக்கரம். 2. The mystic incantation *Ōm;* பிரணவம். மூலவெழுத்துட னைந்தும கொளுவி (கந்தபு. கயமுகனு. 72).

மூலவேர் mūla-vēr, *n.* <id.+. Tap root, main root of a tree; அடிவேர். மகாமேரு பாவுதத்தை மூலவேருடன் முடியுடன் வாங்கினவன்று (தக்கயாகப. 161, உரை).

மூலவோலை mūla-v-ōlai, *n.* <id.+. Original of a deed, as distinguished from its copy; மூலசாஸனம். மூலவோலை மாட்சியிற் காட்ட வைத்தேன் (பெரியபு. தடுத்தாட். 56).

மூலஸ்தானம் mūla-stāṉam, *n.* See மூலத்தானம்.

மூலாக்கரம் mūlākkaram, *n.*<*mūlākṣara.* *Akaram*, the fundamental or basic letter from which all other letters are derived; பிற அட்சரங்களுக்குக் காரணமான அகரம். (W.)

மூலாக்கினி mūlākkiṉi, *n.* <*mūla*+*agni.* 1. Fire of hunger. See உதராக்கினி. (W.) 2. (Yōga.) Internal heat having its seat in the *mūlātāram;* மூலாதாரத்திலுள்ள உஷ்ணம்.

மூலாகமம் mūlākamam, *n.*<id.+*āgama.* The Book of Genesis; உலகத்தோற்ற வரலாறு. *Chr.*

மூலாசனம் mūlācaṉam, *n.* <id.+*aśana.* Food consisting only of roots and bulbs; வேர் கிழங்குகளாகிய உணவு. (யாழ். அக.)

மூலாட்சரம் mūlāṭcaram, *n.* See மூலாக்கரம். (W.)

மூலாதாரம் mūlātāram, *n.* <*mūlādhāra.* 1. Fundamental cause; அடிப்படை. 2. (Yōga.) A *cakkiram* or nerve-plexus in the body, described as a four-petalled lotus, situate between the base of the sexual organ and the anus, one of *āṟātāram*, q.v.; ஆறுதாரங்களுள் குய்யத்துக்கும் குதத்துக்கும் மத்தியில் நான்கிதழ்த்தாமரை போலுள்ள சக்கரம். (சிலப். 3, 26, உரை.)

மூலி mūli, *n.* <*mūlin.* 1. Plant; செடி கொடி. பாதாள மூலி படருமே (நல்வழி, 23). 2. See மூலிகை. (W.) 3. One who is the cause; காரண பூதன் மூலிவடிவா மெயினன் (பாரத. அருச்சுனன் றவ. 103).

மூலிக்கரணம் mūli-k-karaṇam, *n.* <மூலி +. (யாழ். அக.) 1. Commencement; ஆதி. 2. Sale deed; கிரயப்பத்திரம்.

மூலிக்கை mūlikkai, *n.* See மூலிகை. (யாழ். அக.)

மூலிகை mūlikai, *n.* <*mūlikā.* 1. Roots of plants, used medicinally; மருந்தாக உபயோகிக்கும் செடிகொடிகளின் வேர். (W.) 2. Medicinal herbs; ஔஷதி. *Colloq.*

மூலியம் mūliyam, *n.*<*mūlya.* 1. Price; விலை. 2. Article purchased; விலைக்குக்கொண்ட பொருள். (யாழ். அக.) 3. Wages, salary; சம்பளம். (யாழ். அக.) 4. Means, agency; நிமித்தம். *Loc.*

மூலேரம் mūlēram, *n.* <*mūlēra.* Spikenard herb. See சடாமாஞ்சி. (சங். அக.)

மூலை mūlai, *n.* perh. *mūla.* [T. M. *mūla*, K. *mūle.*] 1. Corner; angle; கோணம். மூலை முடுக்குகளும் (இராமநா. சுந். 3). 2. Intermediate point of the compass; மூலைத்திசை. (W.) 3. House; வீடு. (W.)

மூலைக்கச்சம் mūlai-k-kaccam, *n.* <மூலை +. Fashion of tying a man's cloth so that one

end is partly tucked in behind and partly let freely down; பின்கச்சத்திலிருந்து ஆடைநுனி தொங்கும்படி உடையுடுக்கும்வகை.

மூலைக்கப்புப்பாய்தல் mūlai-k-kappu-p-pāytal, *n.* <id.+. A children's game; குழந்தைகளின் விளையாட்டுவகை. *Loc.*

மூலைக்கார்த்திகை mūlai-k-kārttikai, *n.* <id.+. The days of the month of Kārttikai after Tiru-k-kārttikai; கார்த்திகை மாதத்தில் திருக்கார்த்திகைக்குப் பின்வரும் நாட்கள். *Loc.*

மூலைக்கால் mūlai-k-kāl, *n.* <id.+. See முகூர்த்தக்கால். *மூலைக்கால் நாட்டும விதி* (*சர்வா. சிற்.* 39).

மூலைக்காற்று mūlai-k-kāṟṟu, *n.* <id.+. Wind blowing from an intermediate point of the compass; மூலைத்திசையினின்று அடிக்குங் காற்று. (W.)

மூலைக்குடா mūlai-k-kuṭā, *n.* <id.+. 1. Corner of a bay, harbour, etc.; குடா துறைமுகம் முதலியவற்றின் மூலை. 2. Out-of-the-way room in a large house; remote corner of a large field; வீடு வயல் முதலியவற்றின் மூலையிடம். (W.)

மூலைக்குத்து mūlai-k-kuttu, *n.* <id.+. 1. Position of a house in which its main doorway faces a corner of the courtyard; முற்றத்து மூலைக்கு எதிராக வீட்டுத் தலைவாயிலின்நிலை அமையப்பெற்றிருக்கை. 2. See மூலைப்பார்வை.

மூலைக்குமூலை mūlaikku-mūlai, *adv.* <id. +. In a scattered manner; சிதறுபட. *Colloq.*

மூலைக்குமூலைவரிசை mūlaikku-mūlai-varicai, *n.* <id.+. Diagonal bond, herring-bone work, rows of parallel lines in which the alternate rows slope in different directions; ஒன்றுவிட்டொருகல் எதிர்முகமாகச் சாயும்படி அமைக்குங் கட்டடமுறை. (C. E. M.)

மூலைக்கை mūlai-k-kai, *n.* <id.+. Beam from a corner to the ridge of a roof; வீட்டின் மூலைமுகட்டுச் சட்டம். (W.)

மூலைகா-த்தல் mūlai-kā-, *v. intr.* <id.+. To lie mourning in a corner of a house, as a recently widowed woman; புருஷனையிழந்த மனைவி வீட்டுக்குள் ஒருமூலையிற் கிடந்து துக்கங் கொண்டாடுதல். *Loc.*

மூலைத்தாய்ச்சி mūlai-t-tāycci, *n.* <id.+. A game. See நாலுமூலைத்தாய்ச்சி.

மூலைத்திசை mūlai-t-ticai, *n.* <id.+. Intermediate point of the compass; பெருந்திசைகளுக்கு ஊடேயுள்ள கோணத்திக்கு. (W.)

மூலைப்பார்வை mūlai-p-pārvai, *n.* <id. +. 1. Position of house facing an intermediate point of the compass, considered inauspicious; கோணத்திசையை நோக்கிய வீட்டுநிலை. 2. Fixed, oblique look of the eyes at the time of death; மரணத்தறுவாயில் விழி ஒருபுறமாகச் செருகி நிலைக்குத்திடுகை.

மூலைமட்டப்பலகை mūlai-maṭṭa-p-palakai, *n.* <மூலைமட்டம்+. Mason's set-square; மூலைமட்டம்பார்க்குங் கருவி. (C. E. M.)

மூலைமட்டம் mūlai-maṭṭam, *n.* <மூலை+. 1. Right angle; நேர்கோணம். 2. See மூலைமட்டப்பலகை. (*கட்டட. நாமா.*)

மூலைமட்டம்பார்த்தல் mūlai-maṭṭam-pārttal, *n.* <மூலைமட்டம்+. Testing a door-frame by diagonal measurement; வாயில்நிலையில் மூலைகளின் சரிசமத்தை அளவிட்டுப் பார்க்கை.

மூலைமுடக்கு mūlai-muṭakku, *n.* <மூலை +. 1. See மூலைமுடுக்கு. 2. Crooked way; வளைந்துசெல்லும் வழி. (W.)

மூலைமுடுக்கு mūlai-muṭukku, *n.* <id.+. Nook, corner; சந்துபொந்து.

மூலையடியே mūlai-y-aṭiyē, *adv.* <id.+ அடி³. At one's pleasure, as one likes; யதேச்சையாய். *மூலையடியே சுகானுபவம் பண்ணித் திரிந்தார்களாம்படி* (*ஈடு*, 4, 9, 5).

மூலையடிவழி mūlai-y-aṭi-vaḻi, *n.* <id.+ id.+. Short cut; குறுக்குவழி. *எனக்கு இங்ஙனே யிருப்பதொரு மூலையடிவழி யுண்டாவதே* (*ஈடு*, 10, 8, 3).

மூலையரம் mūlai-y-aram, *n.* <id.+. Three-sided rasp or file; மூன்று பட்டையுள்ள அரம். (W.)

மூலையோட்டம் mūlai-y-ōṭṭam, *n.* <மூலை ஓடு-. Angular extension, diagonal extending out of square; நேர்கோணமின்றி மூலையாய் அமைகை. (W.)

மூலையோடு¹ mūlai-y-ōṭu, *n.* <மூலை+ஓடு². 1. Ridge-tile; கூரைமுகட்டில் வேயும் ஓட்டுவகை. *Mod.* 2. A kind of tile used for covering the valley of a roof; கூடல்வாயிலிடும் ஓடு.

மூலையோடு²-தல் mūlai-y-ōṭu-, *v. intr.* <id.+ஓடு-. To be elongated, as a corner; to run out of square; நேர்கோணமின்றி மூலைவாக்கா யமைதல். (W.)

மூலைவாக்கு mūlai-vākku, *n.* <id. +. Diagonal position, oblique position; மூலைகோணிய நிலை. (W.)

மூலைவாங்கல் mūlai-vāṅkal, *n.* <id.+ வாங்கு-. See மூலையோட்டம். (W.)

மூலைவாசல் mūlai-vācal, n. <id.+. Gate or door-way at or near a corner of a house; வீட்டின் நேராகவன்றி ஒதுக்கமா யமைந்த வாயில்.

மூலைவாட்டம் mūlai-vāṭṭam, n. <id.+. See மூலைவாக்கு.

மூலைவாட்டு mūlai-vāṭṭu, n. <id.+. See மூலைவாக்கு.

மூலைவிட்டம் mūlai-viṭṭam, n. <id.+. Diagonal; நாற்கோணத்திலுள்ள எதிர்மூலைகளைச் சேர்க்குங் கோடு.

மூலைவேர் mūlai-vēr, n. <id.+. Root running aslant; நேராகவன்றிச் சரிவாய்ச் செல்லும் வேர். (W.)

மூலோங்காரம் mūlōṅkāram, n. <mūla+ ōṅkāra. Praṇava, the mystic syllable Ōm; பிரணவம். ஆதி பராபரத்தினை பாலாய் மூலோங்காரப பொருளாயிருந்தாள (கந்தபு. அநந்த. சாப. 2).

மூலோதாரணம் mūlōtāraṇam, n. <mūlōdāharaṇa. Illustration embodied in the text; மூலத்துடன் அமைந்த உதாரணம். தனையாசிரியர மூலோதாரணங் காட்டினுற் போல (பி. வி. 3, உரை).

மூவசைச்சீர் mū-v-acai-c-cīr, n. <மூ²+ அசை+. Metrical foot of three syllables; உரிச்சீர். வெண்பா வினமா நேரசையாலிற்ற மூவசைச்சீர (காரிகை, உறுப். 6).

மூவட்சி mū-v-aṭci, n. <id.+அட்சி. Coconut, as having three eyes; தேங்காய். (தைலவ. தைல.)

மூவடிமுப்பது mū-v-aṭi-muppatu, n. <id.+அடி³+. A poem of 30 stanzas of three lines each, attributed to Iṭai-k-kāṭar; இடைக்காடர் செய்ததாகக் கூறப்படுவதும் சிந்தடிச் செய்யுள் முப்பதுகொண்டதுமான ஒரு நூல். (தொல். பொ. 548, உரை.)

மூவடிவு mū-vaṭivu, n. <id.+வடிவு. The three forms of living things, viz., āṇ, peṇ, ali; ஆண் பெண் அலி என்ற மூவகை உருவம். (பிங்.)

மூவணை mū-v-aṇai, n. <id.+அணை³. Three yokes of oxen; மூன்று சோடி ஏர்மாடு. (W.)

மூவர் mūvar, n. <id. 1. The Hindu Trinity. See திரிமூர்த்திகள். பலாபுகழ் மூவருந் தலைவராக (திருமுரு. 162). 2. See மூவேந்தர். வண புகழ் மூவா தணபொழில் வரைப்பின் (தொல். பொ. 391). 3. The three Śaiva saints, viz., Appar, Cuntarar, Campantar, authors of the Tēvāram hymns; தேவார ஆசிரியர்களான அப்பர் சுந்தரர் சம்பந்தர் ஆகிய மூன்று நாயன்மார்கள். மூவர்செய் பனுவல் (தாயு. சச்சிதா. 3).

மூவரசர் mū-v-aracar, n. <id.+. See மூவேந்தர். (W)

மூவராயர் mūvarāyar, n. <மூவரையர். See மூவேந்தர். மூவராயர கண்டன் (S. I. I. i, 110).

மூவரியணில் mū-vari-y-aṇil, n. <மூ² +வரி+. Striped squirrel, Sciurus palmarum, as having three longitudinal stripes along its back; முதுகில் நீளமாக மூன்று வரிகளுடைய அணில் வகை. மூவரியணிலோடாங்கவை நான்கும குட்டிக் குரிய (தொல். பொ. 561).

மூவரையர் mū-v-araiyar, n. <id.+அரையன். See மூவராயர். (Insc.)

மூவறிவுயிர் mū-v-aṟivuyir, n. <id.+ அறிவு+உயிர். Creatures such as ants, having only three senses, viz, ūṟu, cuvai, nāṟṟam; ஊறு சுவை நாற்றம் ஆகிய மூவறிவுமட்டுமேயுள்ள சிதலெறும்பாதியான பிராணிகள். (தொல். பொ. 585.)

மூவாசை¹ mū-v-ācai, n. <id.+. The three desires or passions, viz., maṇ-ṇ-ācai, peṇ-ṇ-ācai, poṉ-ṉ-ācai; மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை என்ற மூவகைப்பட்ட பற்று.

மூவாசை² mūvācai, n. prob. முகவாசை². Cloth spread over a corpse; சவத்தின்மேல் மூடுந் சீலை. Loc.

மூவாதியார் mūvātiyār, n. A poet, author of Aintiṇai-y-elupatu; ஐந்திணையெழுபது என்ற நூலை இயற்றிய ஆசிரியர்.

மூவாமருந்து mūvā-maruntu, n. <மூ-+ ஆ neg.+. Nectar, as preventing old age; அமிர்தம். மூவாமருந்தின் முன்னாத தோன்றலின் (சிலப. 2, 46).

மூவாமலை mūvā-malai, n. <id.+id.+. The Mount Mēru; மேருமலை. (பிங்.)

மூவாமுதல் mūvā-mutal, n. <id.+id.+. God; கடவுள். (யாழ். அக.)

மூவாயிரவர் mū-v-āyiravar, n. <மூ²+ ஆயிரம். The community of 3000 Brahmins, being special devotees of the God at Chidambaram. See தில்லைமூவாயிரவர் மூவாயிரவர்க்கு மூர்த்தி யென்னப்பட்டானை (தேவா. 17, 7).

மூவார் mūvār, n. <மூ-+ஆ neg. The Dēvas, as never aging; [மூப்பில்லாதவர்] தேவர். மூவார தொழுதெழு வடிவம் (மேருமந். 874).

மூவிசை mū-v-icai, n. <மூ²+இசை⁵. (Mus.) Pitch of three grades, viz., mantam, mattimam, uccam; மந்தம் மத்திமம் உச்சம் என்ற மூன்றன சுரவகை. (W.)

மூவிடம் mū-v-iṭam, n. <id.+. (Gram.) The three persons, viz., *taṉmai, muṉṉilai, paṭarkkai;* தன்மை முன்னிலை படர்க்கை என்ற மூன்று இடங்கள். (பிங்.)

மூவிராசாக்கள்திருநாள் mū-v-irācāk-kaḷ-tirunāḷ, n. <id.+. Epiphany, a festival in honour of the three wise men of the East who came to worship the infant Jesus at Bethlehem; பெத்லெகேமில் ஏசுநாதர் பிறந்தபோது அவரை வழிபடவந்த கீழ்நாட்டு ஞானிகள் மூவரைப் போற்றும் திருநாள். *R. C.*

மூவிலை mū-v-ilai, n. <id.+. 1. See மூவிலை வேல். கொலைமலி மூவிலையான் (தேவா. 923, 11). 2. Field-gram. See நரிப்பயறு. (மலை.) 3. Bael, as triple-leaved; வில்வம். நல்லறுகு மூவிலைப பத்திர மிரண்டுமே (செவ்வந்தி. பு. பிரமதேவன். 43).

மூவிலைச்சூலம் mūvilai-c-cūlam, n. <மூவிலை+. See மூவிலைவேல். மூவிலைச்சூல மென்மேற் பொறி (தேவா. 937, 1).

மூவிலைமின்னி mūvilai-miṉṉi, n. <id.+. Field-bean. See அவரை. (சங். அக.)

மூவிலைவேல் mūvilai-vēl, n. <id.+. Trident; திரிசூலம். மூவிலைவேல் வலனேந்திப் பொலிபவனே (திருவாச. 6, 9). (சூடா.)

மூவிலைவேலோன் mūvilaivēlōṉ, n. <மூவிலைவேல். Bhairava, as wielding the trident; [திரிசூலத்தைத் தாங்கியவன்] வயிரவன். (பிங்.)

மூவினம் mū-v-iṉam, n. <மூ[2]+. 1. The three kinds of cattle, viz., *pacu, erumai, āṭu;* பசு எருமை ஆடு ஆகிய மூவகைப்பட்ட கால்நடை. மூவின மேய்த்தல் சேவினந் தழுவல் (இலக். வி. 390). 2. (Gram.) The three classes of consonants, viz., *valliṉam, melliṉam, iṭaiyiṉam;* வல்லினம் மெல்லினம் இடையினம் என்ற மூவகை மெய்யெழுத்து. (நன். 236.)

மூவு-தல் mūvu-, 5 v. intr. cf. ஓவு-. To separate, remove; விலகுதல். (யாழ். அக.)

மூவுலகம் mū-v-ulakam, n. <மூ[2]+. See மூவுலகு. (பிங்.) மூவுலகம் விளைத்த வுந்தி (திவ். இயற். திருவாசி. 4).

மூவுலகளந்தோன் mūvulakaḷantōṉ, n. <மூவுலகு+அள-. Viṣṇu; திருமால். (சங். அக.)

மூவுலகாளி mūvulakāḷi, n. <id.+ஆள்-. 1. God; கடவுள். மூவாவன் மூவுலகாளி (திவ். திருவாய். 8, 9, 5). 2. Indra; இந்திரன். (யாழ். அக.)

மூவுலகு mū-v-ulaku, n. <மூ[2]+. The three worlds, viz., *cuvarkkam, mattiyam, pātālam;* சுவர்க்கம் மத்தியம் பாதாளம் என்ற மூன்று உலகங்கள். மூவுலகுங் கேட்குமே . . . கொடுத்தா ரெனப்படுஞ் சொல் (நாலடி, 100).

மூவுலகுணர்ந்தமூர்த்தி mūvulak-uṇarnta-mūrtti, n. <மூவுலகு+உணர்[1]-+. Arhat; அருகன் (சூடா.)

மூவெயில் mū-v-eyil, n. <மூ[2]+எயில். The three cities destroyed by Śiva. See திரிபுரம். முக்கணானுன் மூவெயிலு முடனற்றக்கால் (கலித். 2).

மூவேந்தர் mū-vēntar, n. <id.+. The three Tamil kings, viz., Cēraṉ, Cōḻaṉ, Pāṇṭiyaṉ; சேர சோழ பாண்டியர் ஆகிய மூன்று தமிழரசர். முடியா லுலகாண்ட மூவேந்தர் முன்னே (தேவா. 880, 11).

மூழ்[1]-தல் mūḻ-, 4 v. tr. <மூள்-. To seize, take hold of; பற்றிக்கொள்ளுதல். மூழ்ந்த பிணி நலிய (நன். 417, விருத்.).

மூழ்[2]-த்தல் mūḻ-, 11 v. tr. cf. முழுத்து-. To submerge, engulf; மூழ்கச்செய்தல். மூழ்த்த நாளநீரை மீனுயமைத்த பெருமானை (திவ். பெரியதி. 6, 8, 2).—intr. cf. ஊழ்[2]-. To be mature; முதிர்தல். (பதிற்றுப. அரும்.)

மூழ்[3]-த்தல் mūḻ-, 11 v. tr. <முகிழ்-. 1. To close, as a bud; மூடுதல். மறவருய வாய் மூழ்த்தனரே (புறநா. 336). 2. To swarm round; மொய்த்தல். கதழ்பு மூழ்த்தேறி (பரிபா. 10, 18). (திவா.) 3. To surround; வளைத்தல். முரணுடை வேட்டுவர் மூழ்த்தனர் (பெருங். உஞ்சைக். 56, 49).

மூழ்[4] mūḻ, n. <மூழ்[3]-. Flower-bud. See முகிழ். (J.)

மூழ்கடி-த்தல் mūḻkaṭi-, v. tr. <மூழ்கு-+அடி-. To drown; மூழ்கச்செய்தல்.

மூழ்கு-தல் mūḻku-, 5 v. intr. [T. munugu, K. muḻugu, M. muṅṅuga.] 1. To plunge, submerge; to sink, as a ship; அமிழ்தல். வேட்கை வெந்நீரிற் கடிப்ப மூழ்கி (திருவாச. 6, 41). 2. To be hidden, screened; மறைதல். வியன்மலை மூழ்கிச் சுடர்கான மாறிய செவ்வி நோக்கி (சிறுபாண். 170). 3. To reach, enter; புகுதல். வான மூழ்கிச் சில்காற் றிசைக்கும (மதுரைக். 357). 4. To be thrust; அழுந்துதல். சுரையம்பு மூழ்க (கலித். 6). 5. To abide; to remain; தங்குதல். முனிமுதன் மூழ்கிய வெம்மை தீரநது (கலித். 16).

மூழ்த்தம் mūḻttam, n. See முகூர்த்தம். ஊழ்வினை துரப்பவோடி யொன்று மூழ்த்தத்தினுள்ளே (சீவக. 2763).

மூழ்த்து-தல் mūḻttu-, 5 v. tr. cf. முழுத்து-. 1. See மூழ்[2]-. 2. To plunge, immerse, weigh down; ஆழ்த்துதல்.

மூழக்கு mūḻakku, n. < மூ² + உழக்கு. Three uḻakku; மூன்று உழக்கு. (தொல். எழுத். 457, உரை.) குறசசிறார் மூழக் குழக்குத் தினைதந்தா (தமிழ்நா. 29).

மூழட்டி mūḻaṭṭi, n. Pepper; மிளகு. (சங். அக.)

மூழல் mūḻal, n. < மூழ்³-. 1. Lid; மூடி. காணடிகைச் செபபு ஒன்று அடியும் மூழலும் உட்பட (S. I. I. ii, 5). 2. cf. முழல். Bonduc nut; கழற்சிகாய். (திவா.)

மூழாக்கு mūḻākku, n. See மூழக்கு. (தொல். எழுத். 457, உரை.)

மூழி mūḻi, n. prob. மூழ்²-. [K. mūḷi.] 1. Ladle; அகப்பை. (திவா.) 2. A vessel for holding water. See கமண்டலு. மயிற்பீலியோடு மூழிநீர் கையிற்பற்றி (பெரியபு. திருஞான. 601). 3. A vessel used in sacrifices; யாகத்தில் உபயோகிக்கும் பாண்ட விசேடம். (சீவக. 2464, அரும்.) 4. Reservoir of water; tank; நீர்நிலை. (பிங்.) 5 Churning stick; மத்து. (W.) 6. Boiled rice; சோறு. (சூடா.)

மூழிவாய் mūḻi-vāy, n. perh. மூழ்⁴+. Flower-basket; பூக்கூடை. மூழிவாய் முல்லைமாலை (சீவக. 833).

மூழை mūḻai, n. cf. மூழி. 1. Ladle; அகப்பை. மூழை சுவையுணரா தாங்கு (நாலடி, 321). 2. Boiled rice. See மூழி, 6. (சூடா.) 3. Churning stick; மத்து. (சது.) 4. Hollow place; குழிந்த இடம். குன்றை யமமூல மூழைவாய் வைத்து (கமப ரா. மருத்து. 116).

மூள் (ளு)-தல் mūḷ-, 2 v. intr. 1. To kindle, catch fire; நெருப்புப் பற்றுதல். 2. To be kindled, stirred up, as anger; சினங்கிளம்புதல். 3. To enter upon with earnestness; ஊக்கத்துடன் முற்படுதல். முதலற முடிக்க மூண்டான் (கமபரா. மாயாசீ. 96).

மூளி mūḷi, n. prob. முளி-. 1. Defect of limb; deformity; உறுப்புக்குறை. சூர்ப்பணகையை மூளியாக்க (இராமநா. உயுத். 26). 2. One who is deformed or has defective limbs; உறுப்பறை. 3. That which has lost a part or piece, especially at the top; தலைப்பகுதியிற் பின்னப்பட்டிருப்பது. மூளிக்குடம். 4. That which is defective; குறைவுற்றது. அவன் வாராமையால் அந்தக் காரியம் மூளியா யிருந்தது. 5. Person or thing devoid of the usual ornaments; வழக்கமாயுள்ள அணிகலனில்லாத-வன்-வள்-து. 6. Ugly woman, a term of abuse; அழகற்றவள்.

மூளிக்காது mūḷi-k-kātu, n. < மூளி +. 1. Woman's ear devoid of the usual ornaments; பெண்டிரின் ஆபரணம் பூணாத காது. 2. Ear with torn lobe; அறுபட்ட காது.

மூளிநாய் mūḷi-nāy, n. < id. +. Dog with clipped ears; காதறுபட்ட நாய். (W.)

மூளிமுக்காடு mūḷi-mukkāṭu, n. < id. +. Hood, covering for the head of a woman; மகளிர் தலையை மறைக்குந் துணி. (W.)

மூளியுதடு mūḷi-y-utaṭu, n. < id. +. Hare-lip; பிளந்த உதடு. (W.)

மூளியோடு mūḷi-y-ōṭu, n. < id. +. Chipped tile; சிதைந்த ஓடு. (W.)

மூளை mūḷai, n. perh. மூள்-. [M. mūḷa.] 1. Brain; மண்டையின் உள்ளீடு. மூளையார சிரத்து (திவ். பெரியதி. 4, 2, 8). 2. Marrow, medullary substance, one of catta-tātu, q. v.; சத்ததாதுக்களுள் ஒன்றான மச்சை. (சூடா.) 3. Intelligence, intellect; அறிவு. அவனுக்கு மூளையில்லை.

மூளைக்கொதிப்பு mūḷai-k-kotippu, n. < மூளை +. (M. L.) 1. Sunstroke; வெயிலால் தாக்கப்படுகை. 2. Rush of blood to the head; சிரசில் சென்று தாக்கும் மிகுதியான இரத்தவோட்டம். மிக்கபடிப்பால் அவனுக்கு மூளைக்கொதிப்பு உண்டாய விட்டது.

மூளைகெடு-தல் mūḷai-keṭu-, v. intr. < id. +. To be weak in brain power; அறிவு குறைதல்.

மூளைப்பிதுக்கம் mūḷai-p-pitukkam, n. < id. +. Protrusion of the brain, as from an accident; மூளை பிதுங்கிவிடுகை. (இங். வை.)

மூளையதிர்ச்சி mūḷai-y-atircci, n. < id. +. Concussion of the brain; தலையில் அடிபடுவதால் உண்டாம் மூளைக்கலக்கம். (இங். வை.)

மூளையமுக்கம் mūḷai-y-amukkam, n. < id. +. Compression of the brain, as from an accident; மூளை அழுந்திவிடுகை. (இங். வை.)

மூளையில்லாதவன் mūḷai-y-illātavaṉ, n. < id. +. Fool, as devoid of brains; மூடன். (C. G.)

மூளைவறண்டவன் mūḷai-varaṇṭavaṉ, n. < id. +. 1. Eccentric man; கோணற்புத்தியுள்ளவன். (W.) 2. See மூளையில்லாதவன். Loc.

மூற்றை mūṟṟai, n. < மூன்று. Three-fold; triple; மும்மடங்கு. நூற்றுபபத்து நூவன்ற தோன் முகன் மூற்றைக்கையினன் (கந்தபு. கயமுகன. 2).

மூறுவா mūṟuvā, n. < mūrvā. Bowstring hemp. See பெருங்குரும்பை. (மலை.)

மூன்றாங்கட்டு mūṉṟāṅ-kaṭṭu, n. < மூன்று + ஆ⁶- +. 1. The third compartment of a house; வீட்டின் மூன்றும் கட்டடப்பகுதி. Colloq. 2.

Final or decisive opinion, as the third and last bandage to a broken limb; [ஒடிந்த உறுப்புக்கு இறுதியாக மூன்றாமுறை கட்டுங் கட்டுப்போலுள்ளது] முடிவான தீர்மானம். (W.)

மூன்றாங்கால் mūṉṟāṉ-kāl, n. <id.+id. +. 1. The first post of a marriage *pandal*, set up three days before the wedding, விவாகத் துக்கு மூன்றுநாள்முன்பு நடும் பந்தற்கால். (W.) 2. Consanguinity of the third degree; மூன்றாந் தலை முறை உறவு. (W.) 3. The third male child of a person; மூன்றும் ஆண்குழந்தை. *Loc.*

மூன்றாங்கொம்பு mūṉṟāṉ-kompu, n. <id.+id.+. Seeds of paddy kept in water for two days, for sowing on the third day; மூன்றும் நாள் விதைப்பதற்காக அதற்கு முன் இரண்டு நாளும் நீரில் ஊறவைத்த நெல்விதை. *Tj.*

மூன்றாந்திருவந்தாதி mūṉṟāṉ-tiru-v-antāti, n. <id.+id.+. An *antāti* in *veṇpā* metre in Nālāyira-p-pirapantam by Pēyāḻvār; நாலாயிரப்பிரபந்தத்துள் பேயாழ்வார் வெண்பாவிற் பாடிய அந்தாதிநூல்.

மூன்றாநடவு mūṉṟā-naṭavu, n. <id.+id. +. Third transplantation of seedlings; மூன்று முறை பிடுங்கிநடும் நாற்று. *Loc.*

மூன்றாம்பாட்டன் mūṉṟām-pāṭṭaṉ, n. <id.+id.+. Grandfather's grandfather; பாட் டனுக்குப் பாட்டன். *Colloq.*

மூன்றாம்பேஸ்து mūṉṟām-pēstu, n. <id. +id.+. The third and last failure in a particular game of cards, as involving a heavy penalty; ஒருவகைச் சீட்டாட்டத்தில் பெருநஷ்டம் ஏற்படும் மூன்றாந்தோல்வி.

மூன்றாமுறைக்காய்ச்சல் mūṉṟā-muṟai-k-kāyccal, n. <id.+id.+. Malaria, tertian fever; ஒன்றுவிட்டோருநாள் வரும் சுரநோய். (M. L.)

மூன்றாவது mūṉṟāvatu, <id.+id. n. 1 That which is third; இரண்டாவதற்கு அடுத் துள்ளது. 2. Quicklime, as the third article used in chewing betel, the other two being betel and areca-nut; [வெற்றிலைபாக்குடன் சேர்த் துணையும் மூன்றாம் பொருள்] சுண்ணாம்பு. *Colloq.* — *adv.* Thirdly; இரண்டாவதுக்கு அடுத்ததாக. (W.)

மூன்று mūṉṟu, n. [T. *mūḍu*, K. *mūḍru*, M. *mūnnu*, Tu. *muji*.] Three; இரண்டுக்கு மேல் அடுத்துள்ள எண். சார்ந்துவரன் மரபின் மூன்று தலையிட்ட (தொல். எழுத். 1).

மூன்றுதண்டர் mūṉṟu-taṇṭar, n. <மூன்று +. Ascetics with trident-staff; திரிதண்ட சந்நி யாசிகள். மூன்றுதண்ட ரொன்றினர் (திவ். திருச்சந். 52).

மூன்றுநூல் mūṉṟu-nūl, n. <id.+. The sacred thread, as having three strands, பூணூல். மூன்றுநூல் கிடந்த தோளமுனி (கம்பரா. கிளை. 137).

மூன்றுமா mūṉṟu-mā, n. <id.+. The fraction 3/20; ௩ா என்று குறியுள்ளதும் இருபதில் மூன்றுகொண்டதுமான பின்னவெண்.

மூன்றுவீசம் mūṉṟu-vīcam, n. <id.+. The fraction 3/16; ௩வீ என்று குறியுள்ளதும் பதினா றில் மூன்றுகொண்டதுமான பின்னவெண்.

மூனாயம் mūṉāyam, n. cf. *ūna* Fault; குற்றம். என்வார்த்தையில என்னபோராம மூனாயம்பிடிக் கிறான்.

மூஜபர் mūjapar, n. <Arab. *mutabar*. Respectability, position; மதிப்பு

மூஷாதுத்தம் mūṣātuttam, n <*mūṣā-tuttha*. Blue vitriol. See துரிசு. (W.)

மூஷாம்பரம் mūṣāmparam, n. <U. *musāmbar*. Socotrine aloe. See கரியபோளம், 1. (இங். வை.)

மூஷிகம் mūṣikam, n. <*mūṣika*. 1. Rat; mouse; எலி. (W.) 2 Bandicoot. See பெருச் சாளி. *Loc.* 3. The region between Quilon and Cape Comorin; கொல்லத்துக்கும் குமரிக்கும் இடைப்பட்ட நாடு. (T. A. S. ii, 105.)

மூஷிகவாகனன் mūṣika-vākaṉaṉ, n. <id. +. Gaṇēśa, as riding the bandicoot; [பெருச் சாளியை வாகனமாக உடையவன்] விநாயகக்கடவுள்.

மெ

மெ me. The compound of ம் and எ.

மெக்கா mekkā, n. <Arab. *Makka*. A city in Arabia, being the chief place of pilgrimage for the Muhammadans, முகம்மதியர்க்கு முக்கிய க்ஷேத்திரமானதும் அரேபியாவிலுள்ளதுமான ஒரு நகரம்.

மெகனத்து mekaṉattu, n. <Arab. *mih-nat*. Exertion, labour, toil; உழைப்பு. (C. G.)

மெச்சாதவர் meccātavar, n. <மெச்சு- + ஆ neg. (W.) 1. Welcome guests; நல்விருந்து. 2. Friends; சிநேகர்.

மெச்சு[1]-தல் meccu-, 5 v. tr. [T. *metstsu*, K. *meccu*, M. *meccuga*, Tu. *mecuni*.] 1. To praise, extol; to flatter; புகழ்தல். அமரர்மெச்ச

மலாமல்கு பொழில் (தேவா. 543, 9). 2. To esteem; மதித்தல். (W.) 3. To admire greatly, wonder; வியத்தல். மெச்சுது சங்கமிடத்தான் (திவ். பெரியாழ். 2, 1, 1).

மெச்சு[2] meccu, *n.* <மெச்சு-. Approbation, commendation; உவப்பு. (W.)

மெஞ்ஞலம் meññalam, *n.* Corr. of மெய்ந்நலம். (யாழ். அக.)

மெட்டி meṭṭi, *n.* [T. *meṭṭe.*] A kind of plain ring worn on the great toe or the next toe; கால்விரலணிவகை.

மெட்டு[1]-தல் meṭṭu-, *5 v. tr.* cf. நெட்டு-. [K. *meṭṭu.*] To spurn or push with the foot; காலால் தாக்குதல். நிகளத்தை மெட்டி மெட்டிப பொடிபடுத்தி (பழனிப்பிள்ளைத். 12).

மெட்டு[2] meṭṭu, *n.* 1. [T. *meṭṭa*, K. *meṭṭu.*] Mound; மேடு. (திவா.) 2. Section of earth left in the centre of an excavation as a measure of its depth; வெட்டும் பள்ளத்தின் நடுவில் வெட்டளவின் உயரத்தைக் காட்டவிடும் மண்திட்டு. *Loc.* 3. Bridge of a fiddle; பிடிலில் வைக்கும் மிதப்புக் கட்டை. 4. Wood or jungle which surrounds a village; ஊர்சூழ்காடு. (W.)

மெட்டு[3] meṭṭu, *n.* [T. *meṭṭe*, K. *meṭṭu.*] See மெட்டி. மெட்டினைப பதத்தி விட்டு (தனிப்பா. ii, 29, 68).

மெட்டு[4] meṭṭu, *n.* 1. [T. *meṭṭu.*] Place where custom is paid, custom-house; ஆயத்துறை. (W.) 2. Obstacle; obstruction; தடை. உள்ளே வரவொட்டாமல மெட்டுவைத்துவிட்டான். *Tinn.*

மெட்டு[5] meṭṭu, *n.* perh. மட்டு[1]. [T. *meṭstsu.*] 1. Honour; கௌரவம். மெட்டுக்கடக்க வெருட்டிடும் (விறலிவிடு. 860) 2. Fashion, style; இரீதி. *Loc.* 3. (Mus.) Tune of a song; rhythm; பாட்டின் இராகப்போக்கு. இது இந்துஸ்தானி மெட்டு.

மெட்டுக்காரன் meṭṭu-k-kāraṉ, *n.* <மெட்டு[4]+. Customs officer; one who collects customs; toll-gatherer; சுங்கம் வசூலிப்போன். (C. G.)

மெட்டுச்சேவகன் meṭṭu-c-cēvakaṉ, *n.* <id.+. 1. See மெட்டுக்காரன். (W.) 2. Peon of the revenue department; வரிவசூலிலாகாவிலுள்ள சேவகன். *Loc.*

மெத்த metta, *adv.* <மெத்து-. Much, abundantly, greatly; மிகவும். மெத்த நேயவனே (தேவா. 758, 7).

மெத்தம்பாரை mettam-pārai, *n.* Sea-fish, yellowish red, attaining 16 in. in length, *Caesia pinjalo;* மஞ்சள் கலந்த சிவப்பு நிறமுடையதும் 16 அங்குலம்வரை வளர்வதுமான கடல்மீன்வகை.

மெத்தம்பிரியன் mettam-piriyaṉ, *n.* Sea-fish, crimson with orange tints, *Lutjanus annularis*, used as bait; சிவப்பும் மஞ்சளும் கலந்ததும் தூண்டிலிரையாக உபயோகப்படுவதுமான கடல்மீன்வகை.

மெத்தனவு mettaṉavu, *n.* <மெத்தெனல். [T. *mettana.*] 1. See மெத்தெனவு. 2. Light-heartedness; கவலையின்மை. மெத்தனவிற் றுயிலுங் கால் (திருவாலவா. 27, 70).

மெத்து-தல் mettu-, *5 v.* [T. K. *mettu*, M. *mettuga.*] *intr.* 1. To abound, increase; மிகுதல். மெத்துபேரொளியாய் (சேதுபு தோத 66). 2. To be filled; நிரம்புதல். மேவிய வடிவு மெத்தல் (திருவாலவா. 1, 5) —*tr.* 1. To fill; நிரப்புதல். மனகுறை மெத்தவுளருப (தணிகைப்பு. வீராட். 35). 2. To pad, pack; to plaster; அப்புதல். இறைச்சி மெத்தி (சீவக. 1577).

மெத்துவாத்துவம் mettuvāttuvam, *n.* (Śaiva.) See மெத்துவாத்துவாதனம். மெத்துவாத்துவ மிடக்கால் வலக்கால் (தத்துவப. 108).

மெத்துவாத்துவாதனம் mettuvāttu-vātaṉam, *n.* <மெத்துவாத்துவம்+. (Śaiva.) A reclining posture with one arm supporting the head and the other arm stretched along the body, while both the legs are outstretched; இரண்டு காலும் நீட்டி ஒரு முழங்கையூன்றித் தலையை யேந்தி ஒரு கையை முசிவற நீட்டிக் கிடக்கும் ஆசனவகை. (தத்துவப. 108, உரை)

மெத்தெனல் metteṉal, *n.* <மெது. [K. *mettane.*] Expr. signifying (a) being smooth or soft; மென்மைக்குறிப்பு. மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேலேறி (திவ். திருப்பா. 19).: (b) being gentle; அமைதிக்குறிப்பு.: (c) being slow; காலத்தாழ்ச்சிக்குறிப்பு. மெத்தென மாதைக்கொண்டு வருகுவல் (திருவாலவா. 62, 7).: (d) being dull; மந்தக்குறிப்பு. (ஈடு, 1, 10, 11.)

